விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 23 செவ்வாய்க்கிழமை (07.08.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 232

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## இந்து விக்கிரகத்தை தூக்கிச்சென்று

### அம்பாறையில் அடாவடி; பிக்கு பின்னணியில்!



அம்பாறை மாவட்டத்தில் உள்ள பாணமை பகுதியில் வசிக்கும் இருநூற்றுக்கும் மேற்பட்ட இந்து குடும்பங்களின் வழிபாட்டு தலமாக பாணமை சித்தி விநாயகர் ஆலயம் விளங்கியது.

இவ்வாலயம் அண்மையில் கும்பாபிசேகம் செய்யப்பட்டமையால் இங்கு ஆரம்பகாலமாக வழிபாட்டுக்கு வைக்கப்பட்டிருந்த விநாயகர் விக்கிரகத்தினை முன் மண்டபத்தில் வழிபாட்டுக்கு வைத்தததுடன் புதிய விநாயகர் விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்துள்ளனர்.

இவ்வேளை இங்கு நீண்டகாலமாக வழிபடப்பட்டு வந்த விநாயகர் விக்கிரகத்தை (20ஆம் பக்கம் பார்க்க)

## பாக். பாதுகாப்பு செயலர்

### இன்று இலங்கை விஜயம்



பாகிஸ்தானுக்கான பாதுகாப்புச் செயலாளர் லெப்டினன்ட் ஜெனரல் ஆசி யாசின் மலிக் 5 நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இன்று இலங்கை வரவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது இரு நாடுகளுக்கும் இடையேயான பாதுகாப்பு விடயங்கள் குறித்து இலங்கை அதிகாரிகளுடன் அவர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை இலங்கைக்கான பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இலங்கை இராணுவத்தினர் (20ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கில் அபிவிருத்தி இருந்தாலும்

# தமிழர் பிரச்சினை தீர்க்கப்படவில்லை

## இந்திய அரசாங்கம் சுட்டிக்காட்டு

இலங்கைத் தமிழர்களின் வடக்கு பிரதேசம் இலங்கை அரசினால் அபிவிருத்தி செய்யப்படுகின்ற போதிலும், அம் மக்களின் அரசியல் பிரச்சினையை விரைவில் தீர்க்காவிட்டால், ஐ.நா மனித உரிமைக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான நிலையே ஏற்படும் என இந்தியா மீண்டும் எச்சரித்துள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## 'Z' தீர்வுக்கு பின்னரே பல்கலைக்கு அனுமதி

இஸட் புள்ளி தொடர்பான பிரச்சினைக்கு முடிவு கிடைக்கும் வரை பல்கலைக்கழகங்களுக்கு புதிய மாணவர்களைச் சேர்ப்பது பற்றி எந்தத் தீர்மானங்களையும் மேற்கொள்ளப்போவதில்லை என உயர் நீதிமன்றத்திற்கு பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு நேற்று அறிவித்துள்ளது.

க.பொ.த. உயர் தரப் பரீட்சை தொடர்பாக கடந்த மாதம்22-ம் (20ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியத் தூதுவராக றொபேட் ஓ பிளேக்



தெற்காசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலராக தற்போது பதவி வகிக்கும் றொபேட் ஓ பிளேக், இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதுவராக நியமனம் செய்யப்படவுள்ளதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைகக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவராக பணியாற்றிய றொபேட் ஓ பிளேக் தற்போது (20ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியா எமக்கு எப்போதும் எதிரியே!

### பாக்.,சீனாவே எமது நண்பர்கள்-குணதாச

(கொழும்பு)

இலங்கையில் பிரிவினைவாதத்தை ஊக்குவித்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பால் கொடுத்து வளர்த்தது இந்தியாவாகும் என தேசப் பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

பிரபாகரனைப் பயன்படுத்தி வடக்கையும் கிழக்கையும் இந்தியாவின் காலனியாக்கும் திட்டம் தோல்வி கண்டுவிட்டது.

இந்தியாவுடனான நட்புறவை அரசாங்கம் துண்டித்துவிட்டு அதன் எதிரி நாடுகளான சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுடன் நட்புறவை பலப்படுத்த வேண்டும்.

சீபா உட்ன்படிக்கை செய்து கொள்ளப்பட்டால் அது எம் நாட்டைப் பாதிக்கும். இந்தியாவின் பொருட்கள் முழுமையாக இலங்கையின் சந்தையை ஆக்கிரமித்துக் கொள்ளும்.

இதனால் இந்தியாவில் எமக்கான சந்தை வாய்ப்புகள் கிடைக்கப்போவதில்லை.

அத்துடன் திருமலையில் வர்த்தக வலயம் அமைக்கப்பட்டால் பெரும் பாதிப்பு ஏற்படும்.

நாட்டைப் பிரிக்கும் முயற்சி தோல்வி கண்ட நிலையில் அமெரிக்காவின் உதவியுடன் பொருளாதார ரீதியில் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலவசக் கல்விக்கு பாரிய அச்சுறுத்தல்

### ரணில் எச்சரிக்கை

இலங்கையில் இலவசக் கல்வி, வரலாற்றில் முதன் முறையாக பாரிய அச்சுறுத்தல்களை எதிர்நோக்கி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றக் கட்டிடத் தொகுதியில் நேற்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடல் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

கல்வித் (20ஆம் பக்கம் பார்க்க)

## டெசோ மாநாட்டில் தனிஈழத் தீர்மானம்

### தி.மு.க. இரகசிய ஆலோசனை

(சென்னை)

டெசோ மாநாட்டில் தனி ஈழ தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற இலங்கைத் தமிழர் அமைப்புகளின் கோரிக்கையை நிறைவேற்றலாமா என்பது குறித்து தி.மு.க. வட்டாரத்தில் திடீர் ஆலோசனை நடந்துவருகிறது.

மத்திய அரசைப் பகைத்துக் கொள்ளாத வகையில் வார்த்தைஜாலங்களுடன் கூடிய தனி ஈழ தீர்மாணம் தயாரிப்பது குறித்து தி.மு.க. மேல்மட்டத் தலைவர்கள் மத்தியில் தீவிர ஆலோசனை நடந்து வருகிறது.


எதிர்வரும் 12ஆம் திகதி சென்னையில் நடக்கவுள்ள டெசோ மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி உலகத் தமிழர்களின் நம்பிக்கைப் பெறவேண்டும் என்ற வேகத்தில் தி.மு.கவினர் பணியை தீவிரப்படுத்தியுள்ளனர்.

தனது உடல் நலத்தைப் பொருட்படுத்தாமல் காலை- மாலை- இரவு என நேரம் பார்க்காமல் டெசோ மாநாடு பணிகளை மேற்பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்கி வருகிறார் கருணாநிதி.

ஆரம்பத்தில் மிக வேகமாகத் தொடங்கிய டெசோ மாநாட்டுப் பணிகள் தனித் தமிழ் ஈழத் தீர்மானத்தை (20ஆம் பக்கம் பார்க்க)

## இராஜதந்திர உறவை வலுப்படுத்த

### மகிந்தவின் விசேட பிரதிநிதியாக மொறகொட இந்தியா விரைவு



ஜெனிவாத் தீர்மானத்திற்கு பின்னர் பெரும் சரிவைச் சந்தித்திருக்கும் இலங்கை-இந்திய இராஜதந்திர உறவுகளை மீண்டும் கட்டியெழுப்பும் நோக்கில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் விசேட தூதுவராக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் மிலிந்த மொறகொட, புதுடில்லி சென்றுள்ளார்.

அங்கு இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் மற்றும் பல உயர் மட்ட அதிகாரிகளை சந்தித்து முக்கிய பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவை வழங்கிய பின்னர் இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர ரீதியிலான சினேகபூர்வ உறவுகள் நாளுக்கு நாள் வலுவிழுந்து வருவது (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# பேசிப் பார்த்ததில் பயனில்லை போராடினால்தான் தீர்வு வரும்

## பல்கலை விரிவுரையாளர்கள் உறுதி

(கொழும்பு)

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பிரச்சினையைத் தீர்க்க மேலும் பேச்சுவார்த்தைகளை நடத்தி காலம் கடத்த வேண்டிய அவசியம் இல்லை என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

கல்வித் துறையில் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்க்க பலதடவைகள் உரிய யோசனைகளை முன்வைத்துள்ள போதிலும் அவை தீர்க்கப்படாமல் தட்டிக் கழிக்கப்பட்டன. இதனால்தான் நாம் போராட இறங்கியுள்ளோம் என சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி மஹின் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

தேசிய வருமானத்தில் கல்விக்காக 6 வீதம் ஒதுக்குதல், விரிவுரையாளர்களின் சம்பள உயர்வு உள்ளிட்ட பல பிரச்சினைகள் குறித்து கடந்த 3 வருடங்களாக அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைத்து வருவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தமது கோரிக்கைகளை வலியுறுத்தி யூலை 4ஆம் திகதி தொடக்கம் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருவதால் நாட்டின் அநேகமான பல்கலைக்கழகங்களுடைய அன்றாட நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. (ந-11)

# டெசோ மாநாட்டு பணியில் தீவிரமாக செயற்படாத நிர்வாகிக்கு

## கருணாநிதி கடும் எச்சரிக்கை

(சென்னை)

மாநாட்டுப் பணிகளில் சுணக்கம் காட்டிய, தி.மு.க., நிர்வாகி ஒருவருக்கு கருணாநிதி எச்சரிக்கை விடுத்த சம்பவம், அக்கட்சி வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

எதிர்வரும் 12ஆம்திகதி, டெசோ மாநாடு சென்னை ராஜப்பேட்டை வை.எம்.சி.ஏ. மைதானத்தில் நடைபெறுகிறது.

மாநாட்டிற்கான பணிகளை விழாக் குழுவினர் செய்து வருகின்றனர். மைதானத்தில் பந்தல் அமைக்கும் பணி, பிரபல பந்தல் கன்ராக்ரர் ஒருவரிடம் வழங்கப்படுகிறது. மாநாட்டு அரங்கம் பிரமாண்டமாக சினிமா செற்றிங் போல் அமைக்கப்படுகிறது.

அரங்கத்தின் வடிவமைப்பு எப்படி இருக்க வேண்டும் என்பது குறித்த ஆலோசனையை கருணாநிதி வழங்கியுள்ளார்.

இதற்கிடையில், மாநாட்டுப் பணிகள் தொடர்பாக, மாநில நிர்வாகி ஒருவரிடம் கருணாநிதி சில உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளார். ஆனால், அந்தப் பணிகளை செய்து முடிப்பதில் மாநில நிர்வாகி கால தாமதம் ஏற்படுத்தினார்.

இதனால் அதிருப்தி அடைந்த கருணாநிதி, எனக்கு கை, கால் இல்லைனு நினைச்சிட்டிங்களாய்யா... நானே அந்தப் பணியை செய்து முடிக்கிறேன்னு மாநில நிர்வாகிக்கு எச்சரிக்கை விடுத் ததுதான் தாமதம் அந்தப் பணியை துரிதமாக அவர் செய்து முடித்ததாக அறிவாலய வட்டாரங்கள் தெரிவித்தன. (ந-11)

# தமிழ் மொழியை வளர்க்க பாடுபடும் சீனப் பெண்மணி

• சீனா நாட்டுத் தமிழ் வானொலி அறிவிப்பாளர் இவர். பிறப்பால் ஒரு சீனர். கலையரசி என்ற தமிழ்ப் பெயர் சூட்டிக் கொண்டவர். ஊடகம் ஒன்றிற்கு அவர் அளித்த பேட்டியில் அவரது தமிழ் உணர்வைப பாருங்கள்,

நான் தமிழ்மொழியை சீனா முழுவதும் பரப்புவதையே இலட்சியமாக கொண்டுள்ளேன். அதற்காக சீன தமிழ் தொலைக்காட்சிகள், வானொலிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதில் முழுக்க சீனர்கள் மட்டுமே பணி புரிகிறார்கள்.

ஆயிரக்கணக்கான சீனர்கள் தமிழ் நாட்டில் தமிழ் கற்றுக் கொண்டு இருக்கிறார்கள்.

அதிலே தேர்ச்சி பெற்றவர்களை தொலைக்காட்சி, வானொலிகள் பணிக்கு அமர்த்தி இருக்கிறோம்.

அதேபோல் தமிழ்நாட்டில் எந்த அளவுக்கு தமிழ் திரைப்படங்கள் சின்னத்திரை சினிமா பாடல்களுக்கு மக்கள் முக்கியத்துவம் கொடுத்து இதை ரசிக்கிறார்களோ அதே போல் தற்போது சீனாவிலும் தமிழ் மொழியின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது.

வாழ்க தமிழ் மொழி... என்று அவர் தெரிவித்துள்ளார். (ந-11)

# தொழில்நுட்ப மாற்றீட்டுப் பயிற்சி

தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சினால் Liquid Soap, Shampoo, Hand wash, Car wash தயாரித்தல் தொடர்பான பயிற்சி நெறியும், Clear Plastic (Class like Ornamental Product) தயாரித்தல் தொடர்பானபயிற்சி நெறியும் நல்லூர் பிரதேச செயலக விதாதாவள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறியைப் பயில விரும்புவோர் தமது சுயவிபரக்கோவை, சான்றிதழ்கள் மற்றும் பங்கீட்டு அட்டையுடன் நாளை மறுதினம் புதன்கிழமையன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ நல்லூர் இல. 36, செல்லர் வீதியில் அமைந்துள்ள விதாதாவள நிலையத்திற்கு நேரில் வந்து அல்லது 0212221034 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவினை மேற்கொள்ளுமாறு நல்லூர் பிரதேசசெயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (ந-9)

# மூன்று இராணுவ சிப்பாய்கள் பெண் மீது துஷ்பிரயோகம்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து பதுளை நோக்கிச் சென்றுகொண்டிருந்த புகையிரதம் ஒன்றின் மலசலகூடத்தில் பெண்ணொருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 3 இராணுவச் சிப்பாய்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகக் காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற இச் சம்பவம் குறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவிக்கையில்,

குறித்த புகையிரதத்தின் மலசலகூடத் தில் இருந்த ஒரு பெண் மற்றும் 3 ஆண்கள் ரயில் பாதுகாப்பு அதிகாரிகளால் பிடிக்கப்பட்டு அப்புத்தளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித் தார்.

கைது செய்யப்பட்ட 3 ஆண்களும் இராணுவச் சிப்பாய்கள் எனவும் அவர்கள் தியத்தலாவை இராணுவ முகாமுக்கு பயிற்சிகாகச் சென்றவர்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சம்பவம் குறித்து ஆரம்ப கட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டபோது,

குறித்த பெண் ஆண்கள் மூவருடன் மலசலகூடத்தில் இருந்துள்ளதாக தெரிய வந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மேலதிக விசாரணைகளை அப்புத்தளைப் பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார். (ந-11)

# 8 வயது சிறுமி கிணற்றில் விழுந்து பலி

வவுனியா, சமயபுரம் பகுதியில் உள்ள பாதுகாப்பற்ற கிணற்றில் 8 வயது சிறுமி தவறி விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை கிணற்றில் விழுந்த குறித்த சிறுமியை மீட்ட அயலவர்கள், வவுனியா வைத்தியசாலையில் அனுமதித்தனர். எனினும்சிறுமிஉயிரிழந்துவிட்டதாகதெரிவித்தனர்.

வவுனியா சமயபுரத்தைச் சேர்ந்த லோகநாதன் விதுஷாலனி என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வவுனியாப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-11)

# 'நெஞ்சத்து வரிகள்' கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியின் முகிழ்நிலை ஆசிரியர் அ.தனுராஜ் எழுதிய 'நெஞ்சத்து வரிகள்' எனும் கவிதை நூலின் வெளியீடு கல்லூரியின் கலையரங்கில் நாளை புதன்கிழமை காலை 8.00 மணிக்கு பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நூலின் விமர்சன உரையினை யாழ் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஆசிரியர் பா.மகாலிங்கசிவம், ஆசியுரையினை மேலதிக பீடாதிபதி எஸ்.அமிர்தலிங்கம், வாழ்துரையினை விரிவுரையாளர் பா.பாலகணேசன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

இந்நூலின் முதற் பிரதியினை திருநெல்வேலி புத்தகக் கூட உரிமையாளர் தெ.ரவீந்திரன் பெற்றுக் கொள்வார். இந்நிகழ்வில் உள்ளகப்பயிற்சி ஆசிரியர்கள், கவி ஆர்வலர்கள், வாசகர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு பீடாதிபதி அறித்துள்ளார். (ந-9)

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி வேலுப்பிள்ளை



பிரதான வீதி கண்டாவளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற தபாலகர் சின்னத்தம்பி வேலுப்பிள்ளை அவர்கள் நேற்று 06.08.2012 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பி வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், கணபதிப்பிள்ளை காலஞ்சென்ற குழந்தைநாச்சி ஆகியோரின் மருமகனும், சின்னத்தங்கம் அவர்களின் அன்புக் கணவரும், பொன்னம்மா, நடராசா, காலஞ்சென்ற பூரணபாக்கியம், சிவசோதிமலர் (ஆசிரியை- கண்டாவளை ம.வி.), காலஞ்சென்ற சிவானந்தராசா ஆகியோரின் சகோதரனும், வசந்தினி (முரசுமோட்டை), ரூபாகினி (ஆசிரியை- தனங்கிளப்பு அ.த.க. பாடசாலை), நிலாகினி (கச்சேரி- கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வராசா, லோகேந்திரன், சுரேஸ்குமார் (கட்டடங்கள் திணைக்களம் - கிளிநொச்சி) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று காலை 10.00 மணியளவில் கண்டாவளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(C-730)

தகவல்: குடும்பத்தினர்


# மனோதத்துவ வைத்தியம்

## (General Psychotheraphy)

## பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P.ஆறுமுகம் | T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில்

06.08.2012 முதல் 12.08.2012 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற் கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் \ போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

## நாதன் இன்

(பழைய கமால் லொட்ஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவேதாசன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்)

(பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

(அ-725)



# உதவியாளர் தேவை

அரச ஓய்வூதியம் பெறும் வயது முதிர்ந்த பெண்ணைப் பராமரிப்பதற்கு உதவியாளர் தேவை. 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் (பெண்) விரும்பத்தக்கது. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: 0776134304
0213216104

(175)



# தவறிவிட்டது

T. விமலதிசன் (902842306V) என்பவருடைய வாகன அனுமதிப் பத்திரம், கொக்குவில் - கோண்டாவிலிற்கு இடைப்பட்ட பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

TP:- 075 76 16 758

(174)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## அன்புக்கு எல்லை இல்லை

ஒரு ஊரிலே பெரியவர் ஒருவர் இருந்தார். அந்த ஊருக்கு வெளியிலே அடர்ந்த காடு இருந்தது. அக்காட்டிலே ஒரு ஆசிரமம் கட்டிக் கொண்டு அவர் வாழ்ந்து கொண்டிருந்தார்.

ஒருநாள் நடு இரவு; அவர் மட்டும்தான் அந்த ஆசிரமத்திலே தூங்கிக் கொண்டிருந்தார். வேறு யாரும் அங்கே இல்லை.

அந்த இரவு வேளையிலே யாரோ கதவைத் தட்டும் சத்தம் அவர் காதிலே விழுந்தது. உடனே இந்தப் பெரியவர் எழுந்து கதவைத் திறந்து பார்க்கிறார்.

ஓர் இளைஞன் கதவருகே நின்று கொண்டிருந்தான். முகத்தைப் பார்த்தால் பரிதாபமாக இருந்தது.

"தம்பி... யார் நீ... என்ன வேண்டும் உனக்கு இந்த நடு நிசியில்... இங்கே வந்ததன் காரணம் என்ன?" என்று கேள்வி மேல் கேள்விக் கணைகளை இவர் தொடுக்கிறார்.

"சுவாமி... நான் ஒரு வழிப்போக்கன்... இவ்வழியாக வந்து கொண்டிருந்தேன்... இருள் சூழும் நேரமானது. நான் ஊருக்குப் புதியவன். அதுதான் எங்கே போவது என்று தெரியாமல் இங்கே நுழைந்தேன். இன்றிரவு மட்டும் தங்கிச் செல்வதற்கு இடம் கிடைக்குமா என்று தேடி வந்தேன். இந்த ஆச்சிரமம்தான் என் கண்ணில் தென்பட்டது. அதுதான் கதவைத் தட்டினேன். என்னை மன்னித்துக் கொள்ளவும்" என்றார்.

அவர் இவன் முகத்தைப் பார்த்தார். பாவமாக இருந்தது.

"தம்பி! நீ வேறு எங்கேயும் போக வேண்டாம். பேசாமல் இங்கேயே தங்கிக் கொள்" என்றார்.

சிறிது நேரம் யோசித்துவிட்டு, "உன் முகம் பார்த்தால் மிகவும் வாடிப்போய் உள்ளது... நீ இன்னும் ஏதுவும் சாப்பிடவில்லை என நினைக்கிறேன் அப்படித்தானே" என்று வினவினார்.

அவனும் பசியின் காரணமாக "ஆமாம்" என்று தலையை அசைத்தான்.

உடனே அவர் தன்னால் முடிந்தளவுக்கு உணவு தயாரித்து அவனுக்குக் கொடுத்தார்.

அவனோ அதை தேவாமிர்தம் என நினைத்து சாப்பிட்டான். அதன்பின் படுக்கை வசதி செய்து கொடுத்தார். அவன் தூங்கினான்.

காலையிலே எழுந்தவுடன் மறுபடி அவனுக்கு உணவு தயாரித்துக் கொடுத்தார். அதையும் அவன் சாப்பிட்டுவிட்டு தனது பயணத்தை ஆரம்பித்தான். அப்போது அந்தப் பெரியவர் கேட்டார்....

"அது சரி... தம்பி நீ எந்த ஊர்? எதற்காக இந்தப் பக்கம் வந்தாய்? என்ன தொழில் செய்கிறாய்?"

சுவாமி... உங்களிடம் பொய் கூறுதல் ஆகாது. உண்மையைச் சொல்கிறேன்.

"சரி... சொல்லு!" என்றார்.

"நான் ஒரு திருடன்... நேற்று இரவு பக்கத்து கிராமத்தில் உள்ள ஒரு வீட்டில் திருடிக்கொண்டு இந்த வழியாக வந்தேன். வழியிலே சில காவலர்கள் என்னைத் துரத்தினார்கள். அவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்ளத்தான் உங்களின் ஆச்சிரமத்தை நாடினேன். பொய் கூறி உள்ளே நுழைந்து கொண்டதற்கு என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்" இப்படிக்கூறி விட்டு அவன் போய் விட்டான்.

இதைக்கேட்ட பெரியவர் திகைத்துப் போனார். அவருக்கு மனவருத்தம் ஏற்பட்டது.

"ஆகா!... எவ்வளவு பெரிய பாவம் செய்திருக்கிறோம். இந்த ஆச்சிரமம் எவ்வளவு புனிதமான இடம். இதில் ஒரு திருடன் தங்கி இருந்து விட்டுப்போய் உள்ளான். அதற்கு நாம் காரணமாகி விட்டோமே. இந்தப் பாவத்தை எங்கே போய்க் கழுவ முடியும்?" என்று எண்ணி கவலைப்பட ஆரம்பித்தார்.

உடனே கடவுளிடம் முறையிட்டார்.

"கடவுளே! ஒரு திருடனுக்குப் போய் அடைக்கலம் கொடுத்து விட்டேனே. அது மட்டுமா... சாப்பாடும் கொடுத்தும் அனுப்பியுள்ளேன். இந்தப் பாவத்தை நான் எந்தப் புனித நதியில் போய் கழுவுவேன்" என்று கலங்கினான்.

இறைவனிடமிருந்து உடனே அவனுக்குப் பதில் கிடைத்தது.

"இதோ பாரப்பா! அந்தத் திருடனை ஒருநாள் ஆசிரமத்தில் தங்க வைத்ததற்கு இப்படியாகப் புலம்புகிறாய். கடந்த 30 வருட காலம் அவனுக்கு இந்தப் பூமியிலே தங்க வைத்து மூன்று வேளை உணவு திருப்தியாக கொடுத்துள்ளேன்... இந்தப் பாவத்தை நான் எங்கே போய் கழுவுவேன்" என்றார் கடவுள்.

இதைக்கேட்ட பெரியவருக்கு விழிப்புணர்வு கிடைக்கப் பெற்றது. அன்புக்கும் கருணைக்கும் எல்லையே இல்லை. அனைத்து எல்லைகளையும் கடந்து போய் உதவி செய்வது தான் அன்பு.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழரின் கலாசாரத்தை பாதுகாக்கும் வகையில் படைப்புக்கள் அமைய வேண்டும்

## மேலதிக அரசாங்க அதிபர் அறிவுரை

(யாழ்ப்பாணம்)

சமூக சேவை என்பது ஒவ்வொருவரினதும் உள்ளத்திலிருந்து வர வேண்டும். அது ஒவ்வொருவரினதும் பொறுப்பும் கூட என யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார்.

துளிர்கள் நிறுவனத்தின் 8ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பூமாலை, சொந்தமென்ன பந்தமென்ன இறுவெட்டு வெளியீடும் நேற்று முன்தினம் நல்லூர் சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுச்சேவையினை செய்பவர்களுக்கு கட்டுப்பாடு இல்லை. மற்றவர்களின் தேவைகளை உணர்ந்து உதவிகளைச் செய்து வருகின்றனர்.

இளைஞர்கள், பெரியோர்கள் இணைந்து சமூகத்தை முன்னேற்ற பாடுபட வேண்டும். அதற்காக சிறிதளவு நேரத்தையாவது செலவிட வேண்டும். சமூக சீரழிவுகள், வன்முறைகளைக் கட்டுப்படுத்த, அவற்றைத் தடுப்பதற்கு நல்ல சமூகத்தினரை உருவாக்க வேண்டும்.

தமிழர்களுக்கு என்று ஒரு கலாசாரம் உண்டு. அதை பாதுகாக்கும் வகையில் குறும்படங்கள் வெளியிடப்பட வேண்டும். வேறு கலாசார உட்புகுத்தல்கள் அதில் இருப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். மேலும் சமூக சேவை என்பது ஒவ்வொருவரினதும் மனங்களிலிருந்து உருவாக வேண்டும். சேவை மனப்பாங்கு உள்ளவர்களினால் தான் சமூகப் பணிகளை திறம்பட முன்னெடுக்க முடியும். அது ஒவ்வொருவரினதும் பொறுப்பும் கூட. அத்தோடு சமூக சேவை செய்ய வேண்டும் என மன நிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும்.

சமூக சேவைகளை மேம்படுத்த அதுவே முக்கியம். பெரியோர்களின் நூல்களினை வாசிப்பதன் மூலம் இவற்றினை அறிந்துகொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

# ஏ-32 வீதி சீரில்லாமல் புனரமைக்கப்பட்டு வருகிறதா?

## அப்பகுதி மக்கள் விசனம்

ஏ-32 வீதி சீரில்லாமல் புனரமைக்கப்பட்டு வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். மன்னாரில் இருந்து யாழ்ப்பாணம் வரையான வீதியில் பல்லவராயன் கட்டு சந்தியில் இருந்து பூநகரி வரை மேற்கொள்ளப்படும் வீதிப் புனரமைப்பு வேலையே சீரின்றி இடம்பெற்று வருகிறது.

குறிப்பாக கிரவல் மண்ணுடன் உவர் மண்ணைக் கலந்து புனரமைப்புச் செய்வதே முக்கிய காரணமாகும். இவ்வீதியானது 40 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாக காணப்பட்டது.

ஆனால், தற்போது புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றபோதும் உவர் மண்ணை கலந்து புனரமைக்கப்பட்டு வருவதால் இவ்வீதியானது மீளவும் போக்குவரத்து செய்ய முடியாத நிலைக்கு உள்ளாக்கப்படும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இவ்வீதியானது எந்த நிறுவனத்தால் புனரமைக்கப்படுகின்றது என்பது எவருக்கும் தெரியாது. அதற்கான விளம்பரப் பலகைகள் எதுவும் நாட்டப்படவில்லை. எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு இவ்வீதியானது சரியான முறையில் புனரமைப்பு செய்ய ஆவன செய்யுமாறு அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-3)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 70 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 100 |
| தக்காளி | 80 | 100 | 110 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 |
| கோவா | 70 | 60 | 75 |
| கரட் | 100 | 100 | 160 |
| பூசணி | 30 | 40 | 50 |
| புடோல் | 40 | 45 | 50 |
| வாழைக்காய் | 70 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 50 | 70 | 60 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 90 |
| பாகற்காய் | 80 | 100 | 70 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 120 | 130 | -- |
| பயற்றங்காய் | 50 | 90 | 40 |
| லீக்ஸ் | 120 | 110 | 130 |
| பீற்றூட் | 60 | 60 | 60 |
| கறிமிளகாய் | 80 | 90 | 130 |
| முருங்கைக்காய் | 140 | 200 | 100 |
| போஞ்சி | 120 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 90 | 60 | -- |
| கீரை பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 60 | 90 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 25 | 20-25 |

# இராசி பலன்

07.08.2012
(ஆடி 23, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
பஞ்சமி முற்பகல் 9.28 மணிவரை
ரேவதி பின்னிரவு 9.28 மணிவரை
இராகுகாலம் 3.04-4.34 மணிவரை
சுபநேரம் 10.34-12.04 மணிவரை
சித்தாமிர்தம்.

**மேடம்** வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள்.

**இடபம்** உறவினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பணப்புழக்கம் அதிகரிக்கும், மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரும், முயற்சி பலிதமாகும்.

**மிதுனம்** சுப நிகழ்வுகளில் கலந்து மகிழ்வீர்கள், மற்றவர்கள் உதவி செய்ய முன்வருவர், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**கடகம்** ஆன்றோர் சந்திப்புண்டு, தேவையற்ற அச்சங்கள் ஏற்படலாம், மனதில் உற்சாகம் அதிகரிக்கும், மறதியால் விட்டுப்போன காரியங்களை செய்து முடிப்பீர்கள்.

**சிங்கம்** ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் ஏற்படலாம், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், உறவினர்களின் மனக்கசப்பிற்கு ஆட்பட நேரிடலாம்.

**கன்னி** தொழில் முன்னேற்றம் கருதி பெரிதும் பாடுபடுவீர்கள், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், குதூகலப் பயணங்கள் இடம் பெறலாம்.

**துலாம்** நல்ல செய்திகள் வந்து சேரலாம், உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், அயலவருடன் ஏற்பட்ட பகை மாறும், தொழில் வளர்ச்சி கருதி முக்கிய முடிவெடுப்பீர்கள்.

**விருச்சிகம்** சொத்துக்களால் நன்மையுண்டு, சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், வியாபார விருத்தியுண்டு, சொல்லை செயலாக்கி காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**தனுசு** பெற்றோர் மீது பிரியம் கூடும், மனதில் இனம்புரியாத மகிழ்ச்சி குடி கொள்ளும், சகோதர வழியில் ஏற்பட்ட சச்சரவுகள் அகலும், சுப செய்திகள் வந்து சேரும்.

**மகரம்** பிற இனத்தவரால் பெருமை சேரும் நாள், சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், இளைய சகோதரத்தின் வழியில் இனிய செய்திகள் வந்து சேரலாம், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.


**கும்பம்** பயணங்களால் பலன் கிடைக்கும், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் ஏற்பட்ட கவலைகள் தீரும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயர்வடையும்.

**மீனம்** புதிய திருப்பங்கள் ஏற்படலாம், வாக்கு சாதுரியத்தால் வளம் காண வேண்டிய நாள், திட்டமிட்ட பயணமொன்றில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம், குடும்பத்தில் முன் கோபத்தைக் குறைப்பது நல்லது.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்குமரன் மலர் 2012 வெளியீடு (06.08.2012)



முன்னாள் யாழ். மாநகர சபை ஆணையாளர் மங்கல விளக்கேற்றுகையில்



நல்லை ஆதீன முதல்வர் ஆசியுரை



யாழ். விருது நயினை நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபைக்கு



விருது பெற்ற அன்னதான சபைக்கு பொற்கிழி



நிகழ்வில் கலந்து கொண்டவர்கள்




நல்லைக் குமரன் மலர் வெளியீடு



நிகழ்வில் கலந்து கொண்டவர்கள்




சித்ருபானந்தா சுவாமிகள் ஆசியுரை




ஆணையாளரின் தலைமையுரை



வரவேற்புரை



அன்னதான சபை செயலாளர் ஏற்புரை



பேராசிரியர் சி.விசாகரூபன் நூல் ஆய்வுரை



யாழ். விருது பெற்ற அன்னதான சபை நிர்வாகத்தினருடன் யாழ். மாநகர சபையினர், மத குருமார்கள் மற்றும் நிகழ்வில் கலந்து கொண்ட பெரியோர்களும்....

# அமெரிக்க கோயில் ஒன்றினுள் மர்ம நபர்கள் துப்பாக்கிச்சூடு

## 7 பேர் பலி; ஒபாமா கண்டனம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் சீக்கியர்களின் கோயிலான குருத்வாராவில் மர்ம நபர்கள் புகுந்து துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் துப்பாக்கிச் சூடு நடத்திய ஒருவன் உட்பட 7 பேர்பலியாகினர்.

இந்த சம்பவத்தால் அப்பகுதி மக்கள் பீதியில் உறைந்துள்ளனர்.

அமெரிக்காவின் விஸ்கோன் சின் மாகாணத்தின் ஓ கிரீக் நககரின் மில்வயூக்கி பகுதியில் சீக்கியர்களின் கோயிலான குருத்வாரா உள்ளது. இக்கோயிலில் நேற்று முன்தினம் காலை இரு நபர்கள் துப்பாக்கியுடன் திடீரென புகுந்து அங்கிருந்தவர்கள் மீது சரமாரியாக சுட்டனர்.

இதில் 20 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்த துப்பாக்கி சூட்டில் 6 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த பொலிஸார் பதில்



தாக்குதல் நடத்தினர். இதில் ஒருவன் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டான். இந்த தாக்குதலில் 7 பேர் பலியாகினர். எனினும் தொடர்ந்து கோயிலுக்குள் எஞ்சியிருந்த மர்ம ஆசாமி துப்பாக்கி முனையில் பலரை பிணை கைதியாக பிடித்து வைத்திருந்தான்.

இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் பொலிஸார் வரவழைக்கப்பட்டு கோயிலுக்குள் எஞ்சியுள்ளவர்களை உயிருடன் மீட்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. சம்பவம் அறிந்த இந்தியா தொடர்ந்து அமெரிக்க தூதரகத்துடன் தொடர்பை ஏற்படுத்தியது. சீக்கிய அமைப்புக்கள் இந்த தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளன. சம்பவம் குறித்து விஸ்கோன் சியஸ் மாகாண கவர்னர் ஸ்கொட் வாக்கர் பலியானவர்களுக்கு இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து அமெரிக்காவின் புலனாய்வு அமைப்பான எப்.பி.ஐ. சம்பவ இடத்தினை பார்வையிட்டு தனது முதல்கட்ட விசாரணையை ஆரம்பித்துள்ளது.

குருத்வாரா கோயில் துப்பாக்கிச் சூட்டிற்கு ஜனாதிபதி ஒபாமா கண்டனம் தெரிவித்துள்ளார். கடந்த இரு வாரங்களில் இரண்டாவது முறை யாக இதுபோன்ற சம்பவம் நடந்துள்ளது வருத்தத்திற்குரியது என்றார்.

பஞ்சாப் முதல்வர் பிரகாஷ்சிங் பாதல் கூறுகையில்,

இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் ஏற்படாமல் மத தலங்களுக்கு அமெரிக்கா தகுந்த பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

இதேவேளை டில்லியில் உள்ள அமெரிக்க தூதரகம் முன்பு சீக்கியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். இதில் ஏராளமான சீக்கியர்கள் கலந்து கொண்டனர்.

பெண்களும் குழந்தைகளும் வந்திருந்தனர். அவர்கள் அமெரிக்காவுக்கு எதிராக கோஷம் எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தனர். இதையொட்டி டில்லியில் உள்ள அமெரிக்க தூதரகம் முன்பு ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது. (ந-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசைத் தோற்கடித்து ஆட்சியை மாற்றும் தேர்தல் களம் இதுவல்ல

## மாகாணசபைத் தேர்தல் குட்டித் தேர்தல்-றிசாத்

இலங்கை முஸ்லிம்களை கௌரவமாக வாழச் செய்கின்ற ஓர் அரசாங்கமே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் என அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் கைத்தொழில் மற்றும் முதலீட்டு வாணிபத்துறை தொழில் வாய்ப்பு அபிவிருத்தி அமைச்சர் றிசாட் பதியுதீன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை கொண்டுள்ள இந்த அரசாங்கத்தினால் மாத்திரமே முதலமைச்சரைப் பெற முடியும். இதனை யாரிடம் கேட்டாலும் சொல்வார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வு கிண்ணியா எகுத்தார் ஹாஜியார் வித்தியாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நடை பெற்றது. கிண்ணியா நகரசபை தலைவரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் வேட்பாளருமான டாக்டர் ஹில்மி மஹ்ரூப் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், தலைவர் ரவூப் ஹக்கீமிடம் கேட்டாலும் சரி தலைவர் அதாவுல்லாவிடம் கேட்டாலும் சரி பிள்ளையானிடம் கேட்டாலும் சரி அல்லது சம்பந்தன் ஐயாவிடம் கேட்டாலும் சரி இந்த அரசாங்கத்திடமே முதலமைச்சர் ஒருவரைப் பெறக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது என கூறுவர். அதிகளவு வாக்குகளைப் பெறக்கூடிய ஒரு கட்டமைப்பு குறிப்பாக இந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு தான் உள்ளது. இந்த அரசாங்கத்திற்கு பாடம் படிப்பிக்க வேண்டும் என சிந்திக்கும் பலர் எங்களிடத்தில் இருக்கலாம்.

ஆனால், அரசாங்கத்தை தோற்கடித்து ஆட்சியை மாற்றுகின்ற ஒரு தேர்தல் இது வல்ல. இந்த மாகாணசபைத் தேர்தல் இது ஒரு குட்டி தேர்தலாகும்.

ஆளும் கட்சியாக எந்தக் கட்சி உள்ளதோ அந்தக் கட்சிக்கேதான் அந்த சிறிய தேர்தல்களில் மக்கள் வாக்களித்து வருவதை நாம் காண்கிறோம்.

இந்த அரசாங்கத்திலுள்ள பங்காளி கட்சிகளில் முஸ்லிம்கள் சார்பாக எங்களுக்குத் தனியான இடத்தை வைத்துக்கொண்டிருக்கின்றோம். இந்த அரசு இந்நாட்டு முஸ்லிம்களை கௌரவமாக வாழச் செய்கின்ற ஒரு அரசாங்கமாகும்.

இந் நாட்டில் சில சில அசம்பாவிதங்கள் இடம்பெற்றுள்ளதை நீங்கள் அறிவீர்கள். ஒரு தேரர் தம்புள்ளையில் தலைமை தாங்கி பள்ளிவாசலொன்றை மூடுவதற்கு நடவடிக்கை எடுத்தார். அரசில் இருந்து கொண்டு இதற்காக நான் வாயை மூடிக்கொள்ளவில்லை. நான் இது தொடர்பாக ஜனாதிபதியுடனும் அமைச்சரவையிலும் தன்னந்தனியாக குரல் கொடுத்தேன். இந்த மாதிரியான அநியாயங்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என 52 அமைச்சர்கள் மத்தியிலும் நான் எடுத்துப் பேசியுள்ளேன். இதைப் பற்றி நாடாளுமன்றத்தில் யாரும் பேசவில்லை. இவ்வாறான செயற்பாடுகளை கீழ்த்தரமானவர்கள் செய்வதாக மிக வேதனையோடு சிங்கள உரிமைத் தலைவராக இருக்கின்ற போது அமைச்சர் சம்பிக்க ரணவக்க என்னிடத்தில் தெரிவித்தார்.

அத்துடன் பாதுகாப்பு செயலாளரிடம் இது தொடர்பாக பலமுறை பேசும் போது தைரியமாக இருந்து செயற்படுமாறு குறிப்பிட்டார். இந்த வகையில் திருகோணமலை மாவட்டத்தில் சரியான தலைமைத்துவம் தேவைப்படுகின்றது. துணிந்து செயற்பட தைரியமாகப் பேசுவதற்கு, படைத்தவனுக்கு மட்டும் அஞ்சிப் பேசுவதற்கு ஒரு தலைமைத்துவம் தேவையாக உள்ளது என்றார்.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக், வேட்பாளர் ஏ.எல்.அப்துல் றஸ்ஸாஹ் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ந-8)

## தேர்தல் வெற்றிகள் அபிவிருத்தியால்தான்

### அபிவிருத்தியால்தான் இனி வெற்றி - ராஜித

யுத்தம் காரணமாகவே ஆளும் கட்சி தேர்தல்களில் வெற்றியீட்டி வருகின்றது என்ற கருத்து பிழையானது என மீன்பிடிவள அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு யுத்தத்தை வைத்து தேர்தல்களில் அமோக வெற்றியீட்டிய காலம் முடிவடைந்து விட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

காத்திரமான அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டால் மட்டுமே எதிர்காலத்தில் தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு வெற்றியீட்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். நாட்டில் தற்போது காத்திரமான அபிவிருத்தித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார். (ந-8)

## கல்யாண மாலை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:- 1988 றோ.க<br>நட்சத்திரம்:-உத்தராடம்<br>உயரம்:-5'6"<br>தொழில்:-சொந்த வாகன உரிமையாளர்<br>எதிர்பார்ப்பு:- சாதகம் இல்லை சாதகம் பார்ப்பதும் இல்லை<br>B/253 | பிறப்பு:- 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- சதயம் 2<br>கி.பா:-35<br>தொழில்:- Bsc வங்கி ஊழியர்<br>G/127 |
| பிறப்பு:- 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-அனுஷம் 1<br>உயரம்:-5'7"<br>கி.பா:-24<br>தொழில்:-Bsc பொறியியலாளர், குவான்ரிற்றி சேவயரிங் (அபுதாபி)<br>B/237 | பிறப்பு:- 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- ரோகினி 4<br>உயரம்: 5'4"<br>கி.பா:-40<br>தொழில்:-பட்டதாரி ஆசிரியை<br>எதிர்பார்ப்பு:- விவாகரத்துடையவர்களும் விண்ணப்பிக்கலாம்.<br>G/101 |
| பிறப்பு:- 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- சித்திரை 2<br>உயரம்:-5'6"<br>கி.பா:-28<br>தொழில்:-தொழில்நுட்ப உதவியார்<br>B/252 | பிறப்பு:- 1975 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- ஆயிலியம் 4<br>உயரம்: 5'2"<br>கி.பா:-35.75<br>தொழில்:- அரச முகாமைத்துவ உதவியாளர்<br>G/098 |
| பிறப்பு:- 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-விசாகம் 1<br>உயரம்:-5'3"<br>கி.பா:-49.25, 7 ஜூல் செவ்<br>தொழில்:-சுவிஸ்<br>B/245 | பிறப்பு:- 1987 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- உத்தரட்டாதி 3<br>உயரம்: 5'<br>கி.பா:-26.5,8 இல் செவ்<br>தொழில்:- அவுஸ்திரேலியா P.R<br>G/221 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com
ஊடக அனுசரணை வலம்புரி

## ஆசிரியர்களுக்கான கற்றல் செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்கு உட்பட்ட ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான துரித கற்றல் செயற்றிட்டம் தொடர்பான ALP செயலமர்வு எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு மு/மாங்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இச் செயலமர்விற்கு ஏற்கனவே பங்கு பற்றிய ஆரம்பக்கல்வி ஆசிரியர்களை அனுப்பி வைக்குமாறு பாடசாலை அதிபர்களுக்கு அவர் பணிப்புரை விடுத்துள்ளார். (ந-3-15)

YARL Taxi
யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் அழைக்க வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்
021 222 1919
MOB:-0759751919
முதல் Km-60/-
அடுத்த ஒவ்வொரு Km-40/-
முச்சக்கர வண்டி/கார்/வான்
7 a.m-11p.m வரை 7 நாட்களும் சேவை
மலிவானதும் நம்பகமானதுமான சேவை
நட்புடன் உதவும் சாரதிகள்
36,கச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:-021 222 1919 , 075 975 1919
E.mail:-yarltaxi@gmail.com
(சி/727)




சஹஜ யோகா யாழ்ப்பாணம் வழங்கும்



"நிர்மலம் பகுதி-2"
(ஆத்ம விழிப்புணர்ச்சியுடன் கூடிய தெய்வீக இசை விருந்து)

07.08.2012
" இறைவனின் சாட்சி"
-புல்லாங்குழல்-

08.08.2012
" இறை ஐக்கியம்"
-பாட்டு-

இடம் :- மகேஷ்வரன் மணிமண்டபம்,
நல்லூர்.
நேரம்:- மாலை 6.45 முதல் 8.30 மணிவரை...

இறைவன் எமக்குக் காதுகளைத் தந்ததன் நோக்கம் அவரின் இசை சந்தங்களைச் செவிமடுப்பதற்கே! ஆத்ம விழிப்புணர்ச்சியைப் பெற்றுக் கொள்ளும் வரை அவர் இசை சந்தங்களால் இன்பம் காணல் என்பது வெறும் மாயையே!
-அருள்மிகு அன்னை-
ஸ்ரீ நிர்மலா தேவி

தியான நிலையம்:-
சைவபரிபாலனசபை
சனிக்கிழமை தோறும் 3.30 - 6.00 மணிவரை

இசை விருந்து வழங்குபவர்:-
செல்வன் .சிவகுமாரன் கஜவதனன்
(B.Sc. Visual Communication. Sound Engineering,
Student, 2nd M.A.Philosophy R.K.M Vivekananda.College, Chennai)



தொடர்புகளுக்கு:- சஹஜ இல்லம், 021 222 8212
சஹஜ யோகா கற்றல், கற்பித்தல்கள் எப்பொழுதும் இலவசம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தேசியம் பற்றிப்பேசி கூட்டமைப்பு சாதித்தது என்ன?

## ஒன்றுமே இல்லை என்கிறார் பிரபாகணேசன்

(கொழும்பு)

தமிழ்த்தேசியம் பற்றி பேசி தமிழ் மக்களின் உணர்வுகளை தூண்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களுக்காக எதனை சாதித்துள்ளது, என்ன உரிமைகளை பெற்றுக் கொடுத்துள்ளது என கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் உள்ள மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே பிரபா கணேசன் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இனவாதத்தை பேசி மேடை நாடகம் போடுவோரிடம் ஏமார்ந்து வாக்குகளை வீணாக்காமல் தமிழ் மக்கள் மிகவும் கவனத்துடன் செயற்பட வேண்டும் எனவும் மக்களின் நலன், பிள்ளைகளின் எதிர்கால கல்வி நடவடிக்கைகளை கருத்திற்கொண்டு அரசுடன் இணைந்து போட்டியிடும் தமிழ் வேட்பாளர்களுக்கு வாக்குகளை வழங்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த தேர்தலில் பங்கு கொள்ளவில்லை. ஆனால், இம்முறை தேர்தலில் போட்டியிடுகின்றது. இதற்கான சந்தர்ப்பத்தையும் சூழலையும் ஏற்படுத்திக் கொடுத்தவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. யுத்தம் முடிவுக்கு வந்து மூன்று வருடங்கள் கடந்துள்ள நிலையில் அரசியல் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு வழங்கப்படாத போதிலும் முன்னரை விட தமிழ் மக்கள் தற்பொழுது நிம்மதியுடனும் சந்தோசத்துடனும் வாழ்கின்றனர். கடந்த 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது தமிழ் மக்கள் யாருக்கு வாக்களித்தார்கள் என்பது அனைவரும் அறிந்த விடயமாகும்.

இனவாதத்தை பேசி வாக்குகளை பெற்றுக் கொண்டார்களே தவிர இந்த மக்களுக்காக எதனை சாதிக்கவோ எந்த அபிவிருத்தி பணிகளை ஏற்படுத்தியோ கொடுக்கவில்லை. இது அரசாங்கத்தை, ஆட்சியை ஏற்படுத்தும் ஒரு பொதுத்தேர்தல் அல்ல. மாகாண அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் ஒரு தேர்தலாகும்.

மாகாண சபை என்றாலே அங்கு பிரதான இடத்தை பிடிக்கின்றமை கல்வித்துறையாகும். எனவே, கல்வித் துறையில் எமது பிள்ளைகளுக்கு சிறந்த ஒரு எதிர்காலத்தை ஏற்படுத்த வேண்டும். அதற்கு அரசுடன் இணைந்து போட்டியிடும் வேட்பாளார்களைத் தெரிவு செய்து அனுப்ப வேண்டும். எனவே, தமிழ் மக்கள் விழிப்புடனும் பொறுப்புடனும் செயற்பட்டு தமது வாக்குகளை பிரயோசனமாக பயன்படுத்த வேண்டும் என பிரபா கணேசன் கூறியுள்ளார். (ந-2)

## இலங்கை பணிப்பெண் உட்பட மூவர் பலி

டுபாய்-சார்ஜாவில் இடம்பெற்ற கார் விபத்தில் ஒரு இலங்கை பணிப்பெண் உட்பட மூன்று பெண்கள் உயிரிழந்துள்ளதாக சார்ஜா தகவல்கள் தெரிவித்துள்ளன.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றுள்ளது. இவ்விபத்தில் 27 மற்றும் 21 வயதுடைய சார்ஜா பெண்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். இலங்கை பணிப்பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் உயிரிழந்த இலங்கை பணிப்பெண் குறித்த தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை. (ந-2)

## நான்காவது காணி ஆணைக்குழுவை நியமிக்க 24 மாதம் அவகாசம்

(கொழும்பு)

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு காணி பிரச்சினை தொடர்பாக பல்வேறு பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. இந்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய செயற்றிட்டக்குழுவின் தலைவரும் ஜனாதிபதியின் செயலாளருமான லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய 4 ஆவது காணி ஆணைக் குழுவை நியமிக்க வேண்டும் என ஆணைக் குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவது தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட தேசிய செயற்றிட்டகுழு பரிந்துரைத்துள்ளது.

இதற்காக 24 மாதகாலம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் 1927, 1936, 1985 ஆம் ஆண்டுகளில் காணி ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தன. (ந-2)

## இலங்கை அகதியான பெண் ஒருவர் இரு மகன்களுடன் எரித்துக்கொலை

திண்டுக்கல் அருகே ரெட்டியபட்டியில் பாழடைந்த கிணற்றுக்குள் மகன்களுடன் எரிந்த நிலையில் கிடந்த இலங்கை அகதி முகாம் பெண்ணின் உடலை பொலிஸார் மீட்டுள்ளனர்.

தனியாருக்கு சொந்தமான பாழடைந்த கிணற்றில் நேற்று முன்தினம் காலை சுமார் 35 வயதுமதிக்கத்தக்க பெண் மற்றும் 2 சிறுவர்கள் உடல்கருகிய நிலையில் இறந்து கிடப்பதை சிலர் பார்த்தனர். கிணற்று மேட்டில் தண்ணீருடன் சில்வர் செம்பு இருந்தது. அதன் அருகே அரிவாளும் மண்ணெண்ணெய் கானும் இருந்தன. அப்பகுதியில் செடிகளும் தீப்பற்றியிருந்தது.

தீ அணைப்பு துறையினர் அங்கு விரைந்து கயிற்றை கட்டி கிணற்றினுள் இருந்த உடல்களை மீட்டனர். 3 உடல்களும் பாதி எரிந்து சிதைந்த நிலையில் இருந்தன. கடும் துர்நாற்றம் வீசியது.

பொலிஸார் நடத்திய விசாரணையில் இறந்த பெண் திண்டுக்கல் அடியனூத்து கிராமத்தில் உள்ள இலங்கை தமிழர்கள் முகாமை சேர்ந்த திருநாதன் மனைவி கலைச்செல்வி (வயது 30) அவரது மகன்கள் வினித் வயது 12, கவுதம் வயது 7 என தெரிய வந்தது. (ந-2)




யா/தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையின் தாவடி பரம வைத்தியர் நினைவு அரங்கத் திறப்பு விழாவின் போது...

## சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முயன்ற 41 பேர் கைது

### 37 பேர் தமிழர்கள்

அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக் செல்ல முயன்றதாக தெரிவிக்கப்படும் 41 பேர் வென்னப்புவ பிரதேசத்தில் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அவுஸ்திரேலியாவுக்கு செல்வதற்காக வென்னப்புவ பிரதேசத்திலுள்ள ஹோட்டலொன்றில் தங்கியிருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் கூறினர்.

37 தமிழர்களும் 4 முஸ்லிம்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களெனவும் இவர்கள் திருகோணமலை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களை சேர்ந்தவர்களெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களிடமிருந்து கையடக்க தொலைபேசிகள், பணம், பயணப்பைகள் ஆகியனவும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

சந்தேக நபர்கள் வென்னப்புவ நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (ந-2)

## இலங்கைச் சிறையில் உள்ள மீனவர்களை விடுவிக்கக்கோரி தொடர் உண்ணாவிரத ஏற்பாடு!

(கொழும்பு)

இலங்கை கடற்படையால் கடந்த வருடம் நவம்பர் மாதம் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 5 பேரை உடனடியாக விடுவிக்கக் கோரி நாளை புதன்கிழமை தொடக்கம் ஐந்து நாட்கள் தொடர்ந்து உண்ணாவிரதம் மேற்கொள்ளப்போவதாக இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் அறிவித்துள்ளனர்.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கான மீனவர்கள் கலந்து கொள்வார்கள் என இராமேஸ்வரம் பகுதி இயந்திரப் படகு உரிமையாளர்கள் சங்க தலைவர் தேவதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி மேலும் பேசிய அவர், தமிழக மீனவர்கள் 5 பேர் கிரிமினல் குற்றம் சாட்டப்பட்டு இலங்கையில் வாடுகின்றனர். அவர்களை விடுவிப்பதற்காக தமிழக அரசு ரூபா 2 இலட்சம் உதவித் தொகை அளித்த பின்பும் அவர்கள் விடுதலை செய்யப்படவில்லை என்றார்.

போதை மருந்து கடத்தியதாக குற்றம் சாட்டப்பட்டு இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 5 பேர் கடந்த வருடம் நவம்பர் மாதம் முதல் இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். (ந-2)

## வெளியில் ஆயுர்வேதம்; உள்ளுக்குள் விபச்சாரம்

(கொழும்பு)

கல்கிசையில் ஆயுர்வேத நிலையம் என்ற பெயரில் இயங்கிவந்த விபச்சாரவிடுதி ஒன்றை கல்கிசை பொலிஸார் முற்றுகையிட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்று முன்தினம் இவ் விபச்சார விடுதி முற்றுகையிடப்பட்டது. இதன்போது நிலையத்தை இயக்கி வந்ததாக கூறப்படும் ஆண் ஒருவரும் விபச்சார தொழிலில் ஈடுபட்டதாக கூறப்படும் 4 பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண்கள் கம்புருகல, களுத்தறை, கட்டுபிலகொல்ல மற்றும் வஸ்கொன ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்களாவர். சந்தேக நபர்கள் கல்கிசை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (ந-2)

## 37 சீன நாட்டு மீனவர்கள் கிழக்குக் கடலில் கைது

சர்வதேச கடல் எல்லை சட்டத்தை மீறி இலங்கை கடற்பரப்பில் நுழைந்து மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட 37 சீன நாட்டு மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

இரு மீன்பிடி படகுகளுடன் நேற்று முன்தினம் இரவு இவர்கள் கைது செய்யப்பட்டதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் கமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

சீன நாட்டு மீனவர்கள் கைது செய்யப்பட்ட வேளை மட்டக்களப்பு கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சீன மீனவர்கள் திருகோணமலை துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ந-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரூந்து மோதியதில் தந்தையும் மகனும் பலி

(கொழும்பு)

மட்டக்களப்பு மாமாங்க பிரதேசத்தில் தொடரூந்தில் மோதுண்டு தந்தையும் மகனும் பலியாகியுள்ளனர். இச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் கறுவப்பங்கேணி பிரதேசத்தை சேர்ந்த ஜோசப் அலோசியஸ் (வயது 57), அலோசியஸ் ஸ்பக் (வயது 35) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

இவர்கள் தொடரூந்து பாதையில் அமர்ந்திருந்த போது இந்த விபத்தில் சிக்கியுள்ளனர். சம்பவத்தில் இறந்தவர்களின் உடல்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. சம்பவம் குறித்து மட்டக்களப்பு பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (2-9)

# மலேசிய வர்த்தகரிடம் கொள்ளையிட்ட இலங்கை பெண் விமான நிலையத்தில் கைது

(கொழும்பு)

மாணிக்கம் மற்றும் வைரக்கற்கள் பதிக்கப்பட்ட தங்க ஆபரணங்கள் மற்றும் வெளிநாட்டு பணம் ஆகியவற்றை மலேசியாவை சேர்ந்த வர்த்தகரிடம் கொள்ளையிட்டு இலங்கைக்கு வந்த பெண்ணொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

கேகாலையைச் சேர்ந்த 31 வயதான குறித்த பெண்ணிடம் இருந்து 25 இலட்சம் ரூபா பெறுமதியான ஆபரணங்களும் வெளிநாட்டு நாணயங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபரான குறித்த பெண் தனது தாயார் இறந்து விட்டதாக தனது கணவர் ஊடாக தான் பணியாற்றிய வீட்டு உரிமையாளர்களுக்கு அறிவித்துள்ளார். இதனையடுத்து அவரை அந்த வீட்டு உரிமையாளர் இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளார். இரண்டு வாரங்களுக்கு முன்னரே இந்தப் பெண் மலேசியாவுக்கு சென்றிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-9)

# இலங்கை அரசாங்கத்தை பாராட்டிய பிரி.எம்.பிக்கள்

இலங்கை போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மறுவாழ்வு நடவடிக்கைகளில் இலங்கை அரசாங்கம் கண்டிருக்கும் முன்னேற்றங்களுக்காக அவர்களை பாராட்டுவதாக அங்கு சென்ற பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர் குழு கூறியுள்ளது.

இது தொடர்பாக கொழும்பில் செய்தியாளர்களை அந்த குழுவினர் சந்தித்தபோது, அந்தக் குழுவின் சார்பில் பேசிய நாடாளுமன்ற உறுப்பினரான பொப் பிளாக்மான் இவ்வாறு கூறியுள்ளார்.

மூன்று வருடங்களுக்கு முன்பாகத்தான் ஒரு உள்நாட்டு போரினைச் சந்தித்து திரும்பியிருக்கும் மக்கள் மத்தியில் நல்லிணக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன என்று நான் நம்புகிறேன்.

பொருளாதார வாய்ப்புக்கள் மற்றும் மக்கள் தமது வாழ்க்கையை மீள கட்டியெழுப்புவதற்கான வாய்ப்புக்கள் ஆகியன பாரியவையாக இருக்கின்றன. அவை நடந்து கொண்டும் இருக்கின்றன.

அப்படியான ஒரு இடத்தில் இது நடப்பது மிகவும் முக்கியமானது. ஆகவே இந்த விடயங்களில் கண்டிருக்கின்ற முன்னேற்றத்துக்காக நாம் இலங்கை அரசாங்கத்தை பாராட்டுகிறோம் என்றார் பொப் பிளாக்மான் எம்.பி.

இலங்கை சென்ற இந்த பிரிட்டிஷ் நாடாளுமன்றக் குழுவில் 2010 ஆம் ஆண்டு தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட 9 புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெற்றிருந்தனர்.

அவர்களில் 8 பேர் கொன்சர்வேட்டிவ் கட்சியை சேர்ந்தவர்கள். இலங்கையின் போர் நடந்த பல பகுதிகளுக்கும் தாம் சென்று பரந்துபட்ட மக்களையும் அவர்களது தலைவர்களையும் எந்தவிதமான பிறர் தலையீடும் இன்றி சந்தித்ததாக அவர்கள் கூறியுள்ளனர்.

பிரிட்டனுக்காக இலங்கை தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த விஜயத்துக்கு அந்த தூதரகமே நிதி உதவி வழங்கியிருந்ததாகவும் அவர்கள் கூறியுள்ளனர். (எ-8)

# சிறைச்சாலைகள் வதை முகாம்களா? கொழும்பில் கருத்தரங்கு இன்று

(கொழும்பு)

அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் அமைப்பின் விசேட கருத்தரங்கொன்று இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

சிறைச்சாலைகள் வதை முகாம்களா என்ற தொனிப் பொருளிலேயே இக் கருத்தரங்கு நடைபெறவுள்ளதாக அவ்வமைப்பு அறிவித்துள்ளது.

அனைத்து அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் பெருமாள் பூமிநாதன், சட்டத்தரணி ரட்ணவேல் உட்பட அரசியல் தலைவர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், சிவில் அமைப்புக்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (2-9)

# 2012.08 07 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ *1461-* மிங் வம்ச சீன தளபதி காவோ சின் செங்டொங் பேரரசருக்கு எதிராக இராணுவப் புரட்சியை நடத்தி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து தற்கொலை செய்து கொண்டான்.

★ *1819-* கொலம்பியாவின் பொயாக்கா என்ற இடத்தில் ஸ்பானியர்களுக்கு எதிரான போரில் சிமோன் பொலிவார் பெரு வெற்றி பெற்றான்.

★ *1832-* இலங்கையில் சேமிப்பு வங்கி ஆரம்பிக்கப்பட்டது.

★ *1898-* யாழ்ப்பாணம் மானிப்பாயில் டாக்டர் ஸ்கொட் தலைமையில் மானிப்பாய் மருத்துவமனை புதிய கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

★ *1906-* கல்கத்தாவில் வங்காளப் பிரிவினை எதிர்ப்புப் போராட்டத்தின் போது முதல் இந்திய தேசியக்கொடி உருவாக்கப்பட்டு பார்சி பகான் சதுக்கத்தில் ஏற்றப்பட்டது.

★ *1927-* ஒன்டாரியோவுக்கும் நியூயோர்க்கிற்கும் இடையில் அமைதிப் பாலம் அமைக்கப்பட்டது.

★ *1933-* ஈராக்கில் சுமைல் கிராமத்தில் 3 ஆயிரம் அசிரியர்கள் ஈராக்கிய அரசால் படுகொலை செய்யப்பட்டனர்.

★ *1942-* இரண்டாம் உலகப் போர்: குவாட்ல்கனால் போர் ஆரம்பம். அமெரிக்க கடற்படையினர் சொலமன் தீவுகளின் குவாடல்கனால் தீவில் தரையிறங்கினர்.

★ *1944-* திட்டப்படுத்தப்பட்ட முதலாவது கணிப்பானை (ஹார்வார்ட் மார்க்1) ஐபிஎம் நிறுவனம் வெளியிட் டது.

★ *1945-* இரண்டாம் உலகப் போர்: ஹிரோஷிமா மீது அணுகுண்டு வீசப்பட்டதை அமெரிக்க ஜனாதிபதி ஹரி ட்ரூமன் அறிவித்தார்.

★ *1955-* சொனி நிறுவனம் தனது முதலாவது திரிதடைய வானொலியை ஜப்பானில் விற்க ஆரம்பித்தது.

★ *1960-* கோட் டி ஐவரி பிரான்சிடம் இருந்து விடுதலை பெற்றது.

★ *1976-* வைக்கிங் 2 விண்கலம் செவ்வாயின் சுற்று வட்டத்துள் சென்றது.

★ *1998-* தான்சானியாவிலும் கென்யாவிலும் அமெரிக்க தூதரகங்களில் இடம்பெற்ற குண்டுவெடிப்புக்களில் 224 பேர் கொல்லப்பட்டு 4 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

★ *2006-* இலங்கை சோசலிச சமத்துவக் கட்சியின் உறுப்பினர் சிவப்பிரகாசம் மரியதாஸ் என்பவர் திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்டார்.

**பிறப்புக்கள்**

★ *1925-* எம்.எஸ்.சுவாமிநாதன், இந்திய அறிவியலாளர்

★ *1948-* கிறெக் சப்பல், அவுஸ்திரேலியத் துடுப்பாளர்

★ *1966-* ஜிம்மி வேல்ஸ், விக்கிப்பீடியாவை ஆரம்பித்தவர்.

## இரவீந்திரநாத் தாகூர்



புகழ்பெற்ற வங்காள மொழிக் கவிஞர் ஆவார். கீதாஞ்சலி என்ற கவிதை நூலுக்காக இவர் 1913 இல் இலக்கியத்துக்கான நோபல் பரிசுபெற்றார். நோபல் பரிசு பெற்ற முதல் ஆசிரியர் இவரே ஆவார். இந்தியாவின் தேசிய கீதமான ஜனகணமன பாடலை இயற்றியவர். இவருடைய மற்றொரு பாடல் அமர் சோனார் பங்களா பங்களா தேசத்தின் தேசிய கீதமாக பிரபலம் அடைந்தது.

கல்கத்தாவைச் சேர்ந்த பிராலிப் பிராமணரான இவர் தனது எட்டாவது வயதிலேயே கவிதைகளை எழுதத் தொடங்கினார். பதினாறாவது வயதில் இவரது முதலாவது குறிப்பிடத்தக்க கவிதையை பானுசிங்கோ (சூரிய சிங்கம்) என்னும் புனை பெயரில் வெளியிட்டார். 1877 ஆம் ஆண்டில் இவரது முதல் சிறுகதையும் நாடகமும் வெளிவந்தன.

தாகூர் பிரித்தானிய அரசை எதிர்த்து நாட்டின் விடுதலையை ஆதரித்தார். இவரது முயற்சிகள், இவர் எழுதிய ஏராளமான எழுத்துக்கள் மூலமும் விசுவபாரதி பல்கலைக்கழகம் என்னும் அவர் நிறுவிய கல்வி நிறுவனத்தின் மூலமும் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

இவரது புதினங்கள், கதைகள், பாட்ல்கள், நாட்டிய நாடகங்கள், கட்டுரைகள் என்பன அரசியல் தலைப்புக்களையும், தனிப்பட்ட விடயங்களையும் தழுவியிருந்தன. கீதாஞ்சலி, கோரா, காரே பைரே ஆகியவை அவரது மிகவும் பிரபலமான படைப்புக்கள் ஆகும். இவரது பாடல்கள், சிறுகதைகள், புதினங்கள் ஆகியவை அவற்றின் உணர்ச்சிகளுக்காகவும் மக்கள் மொழி நடைக்காகவும் இயல்புத்தன்மைக்காகவும் பெரிதும் புகழ்பெற்றன.

இரவீந்திரநாத் தாகூர் தேவேந்திரநாத்தின் புதல்வர். இவர் 1861 ஆம் ஆண்டு மே மாதம் 7ஆம் திகதி கல்கத்தாவில் இருந்த ஜோராசாங்கோ மாளிகையில் பிறந்தார். இவர் தாயார் பெயர் சாரதாதேவி. இவரது பெற்றோருக்குப் பிறந்த உயிர் தப்பிய 13 பிள்ளைகளில் இவர் கடைசிப்பிள்ளை. இவரது இளம் வயதிலேயே தாயார் இறந்து விட்டதாலும் தந்தையார் அடிக்கடி பயணங்களை மேற்கொண்டதாலும் இவர் பெரும்பாலும் வேலைக்காரரின் கைகளிலேயே வளர்ந்தார். இவர் பாடசாலைக்கு செல்வதைத் துன்பமே எனக் கருதினார்.

1883 ஆம் ஆண்டில் டிசெம்பர் 9 ஆம் திகதி மிருனாலிதேவி என்னும் 10 வயதுப் பெண்ணை மணந்தார். அவர்களுக்கு ஐந்து குழந்தைகள் பிறந்தன. 1915 ஆம் ஆண்டில் பிரித்தானிய அரசாங்கம் தாகூருக்கு (Knighthood) செவ்வீரர் (சர், Knight) பட்டம் வழங்கி அவரை கௌரவித்தது.

1927 ஆம் ஆண்டு ஜூலை 14 ஆம் திகதி தாகூரும் அவரது தோழர்கள் இருவரும் தென்கிழக்கு ஆசியாவில் பயணத்தைத் தொடங்கினர். அவர்கள் பாலி, ஜாவா, கோலாலம்பூர், மலாக்கா, பீனாங்கு, சியாம், சிங்கப்பூர் ஆகிய இடங்களுக்குச் சென்றனர். தாகூரின் இந்தப் பயணங்கள் குறித்த தகவல்களை யாத்ரி என்னும் நூல்– தொகுப்பில் காணலாம். நீண்டகாலம் நோய்வாய்ப்பட்டு 7 ஆம் திகதி ஒகஸ்ட் மாதம் 1941 ஆம் ஆண்டு உயிர் நீத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அமரவீர

# வடக்கின் பல்வேறு பகுதிகளுக்கும் விஜயம்

## அரச அதிகாரிகள் மற்றும் மக்களுடனும் அவர் சந்திப்பு

அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஜி.மஹிந்த அமரவீர நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி, முல்லை.மாவட்டங்களுக்கும் நேற்றையதினம் யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் செய்து அனர்த்த பாதுகாப்பு தொடர்பான வேலைத்திட்டங்களை பார்வையிட்டதுடன் கூரைத்தகடுகள், சமையல்தொகுதி உபகரணங்கள், சுனாமி முன்னெச்சரிக்கை கருவிகள் என்பவற்றை அரச அதிபர்களிடம் கையளித்துள்ளார்.

முதலில் முல்லை. மாவட்டத்திற்கு விஜயம் செய்த அமைச்சர் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் முல்லை மாவட்ட பணிப்பாளர் எஸ்.குலாஸ் ஒழுங்குபடுத்தலில்முல்லை மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வின் போது ஆயிரத்து 500 கூரைத்தகடுகள் புதுக்குடியிருப்பு,கரைதுறைபற்று, வெலிஓயா ஆகிய பிரதேசங்களுக்கு உட்பட்ட அனர்த்



தங்களின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காகவும் அனர்த்தங்கள் ஏற்படுகின்ற போது மக்களுக்கு சமைத்த உணவு வழங்குவதற்காக முல்லை. மாவட்டத்தில் உள்ள 6 பிரதேச செயலகங்களுக்கும் வழங்குவதற்கென 25 சமையற் தொகுதி உபகரணங்களையும் அரச அதிபரிடம் கையளித்துள்ளார்.

இந்நிகழ்வை தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு விஜயம் செய்த அமைச்சர் கிளி.மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.சிறினிவாசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஆயிரத்து 800 கூரைத்தகடுகளை கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள நான்கு பிரதேச செயலகங்களிலும் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 150 குடும்பங்களுக்கு தலா 12 கூரைத்தகடுகள் வழங்குவதற்காகவும் அனர்த்தங்கள் ஏற்படுகின்ற போது சமையல் செய்து மக்களுக்கு வழங்குவதற்காக நான்கு பிரதேச செயலகங்களுக்கும் 3 பிரதேச சபைகளுக்குமான 20 சமையல் தொகுதி உபகரணங்களையும் வழங்கி வைத்தார்.

அத்தோடு அனர்த்தங்கள் ஏற்படுகின்ற பொழுது மக்களுக்கு எச்சரிக்கை செய்யும் அபாய எச்சரிக்கை கருவிகளையும் வழங்கி வைத்ததோடு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் அனர்த்தம் தொடர்பான வேலைகளையும் பார்வையிட்டார் என கிளிநொச்சி மாவட்ட அனர்த்த பாதுகாப்பு அமைச்சின் மாவட்ட பணிப்பாளர் கு.சுகுணதாஸ் தெரிவித்துள்ளார். இதேவேளை நேற்றுக்காலை 9 மணியளவில் யாழ்.மாவட்ட செயலகத்திற்கு விஜயம் செய்த அமைச்சர் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அங்கும் உதவிகளை வழங்கினார்.

(ந-3-4-15-254)

# கொழும்புக்கான விமான சேவையில் மீண்டும் "பிரிட்டிஷ் ஏர்வேஸ்"

## போக்குவரத்து அதிகாரிகள் ஒப்புதல்

கடந்த 10 ஆண்டு கால இடைவெளிக்கு பின்னர் பிரிட்டிஷ் ஏர்வேஸ் அடுத்த ஆண்டு மார்ச்மாதம் முதல் இலங்கைக்கான சேவையை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக உள்நாட்டு விமான போக்குவரத்து அதிகாரிகள் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு தகவல் தெரிவித்துள்ளனர்.

இந்த விமான சேவை கேட்விக் விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு மாலைதீவு வழியாக கொழும்பு விமான நிலையத்தை வந்தடையும் என்றும் வாரத்தில் மூன்று முறை செயற்படும் எனவும் பொதுசிவில் விமான போக்குவரத்து ஆணையத்தின் இயக்குநர் எச்.எம்.சி. நிமால்சிறி கூறியுள்ளார்.

பிரிட்டிஷ் ஏர்வேஸ் மீண்டும் கொழும்புக்கான சேவையை ஆரம்பிக்க அதிகாரிகள் ஏற்கனவே ஒப்புதல் கொடுத்துள்ளனர். தற்போது மட்டுமே இலங்கை ஏர்லைன்ஸ் விமான சேவையை லண்டனுக்கு ஒரு வாரத்தில் ஏழு முறை செயற்படுகிறது எனவும் அது சுட்டிக் காட்டியுள்ளது. இந்தவிமானசேவைக்குஹாலேஸ் நிறுவனம் கொழும்பு முகவராக செயற்படவுள்ளது. இந்த சேவைக்கான ஒப்பந்தம் எதிர்வரும் டிசம்பர் மாதம் அல்லது ஜனவரி (2013) மேற்கொள்ளப்படுமென விமான போக்குவரத்து இயக்குநர் ரொமேஸ் டேவிட் கூறினார்.

இந்தச் சேவை ஆரம்பமாகவுள்ளதால் மேற்கத்தைய சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிக்கும் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

(ந-2)

# கொள்வனவு ஏவுகணைகளை விற்பனை செய்ய கோத்தா முடிவு

யுத்தம் நடைபெற்ற போது கொள்வனவு செய்யப்பட்ட ஏவுகணைகளை கொள்வனவு செய்த நாடுகளிடமே விற்பனை செய்வதற்காக நடவடிக்கைகளை எடுத்து வருவதாக பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சீனாவை சேர்ந்த சில ஆயுத விற்பனை நிறுவனங்களிடம் இது குறித்து பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

போருக்காக இறக்குமதி செய்யப்பட்ட பல ஆயுதங்கள் பயன்படுத்தப்படாமல் உள்ளன. அவற்றை பராமரிக்க பெருமளவில் பணத்தை செலவிட வேண்டியுள்ளது.

இதனால் அவற்றை கொள்வனவு செய்த நாடுகளிடம் மீள விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக ஏவுகணைகளை பாதுகாப்பதற்காக அவற்றை குளிரூட்டிய அறைகளில் வைக்க வேண்டியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

(2-9)

# இனவாத அடிப்படையில் அரசியல் நடத்தவில்லை

## ஹசன் அலி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இனவாத அடிப்படையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் நடத்தவில்லை என கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

இன மற்றும் மத அடிப்படையாக தமது கட்சி அரசியல் நடத்துவது எவரேனும் கருதினால் அது பிழையானது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.


இனங்களுக்கு இடையிலோ மதங்களுக்கு இடையிலோ பிளவுகளை ஏற்படுத்தும் நோக்கில் தமது கட்சி எந்த நேரத்திலும் செயற்பட்டதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பெரும்பான்மை சிங்கள கட்சிகளைப்போன்றே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசிற்கும் கலாசாரப்பின்னணியொன்று காணப்படுவதாக தெரிவித்துள்ளார்.

ஏனைய இன சமூகங்களுடன் இணைந்து சமாதானமாக வாழவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விரும்புவதாக குறிப்பிட்டுள்ளார்.

(ந-2)

# திருமலை வர்த்தக நிலையம் ஒன்று தீப்பற்றி எரிந்து நாசம்



திருகோணமலை மத்திய வீதியிலுள்ள வர்த்தக நிலையமொன்று நேற்று முன்தினம் பிற்பகல் தீப்பற்றி எரிந்துள்ளதுடன் அருகில் உள்ள கடைகளும் பாதிப்புக்குள்ளாகின.

சுமார் ஒரு மணித்தியால நேரத்திற்கு பின் திருகோணமலை பொலிஸார் மற்றும் பாதுகாப்புபடையினர், கடற்படையினர், பொதுமக்கள் உதவியுடன் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வர்த்தக நிறுவனமொன்றின் மேல் மாடியில் ஏற்பட்ட தீயே பரவியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஆனால் தீ ஏற்பட்டமைக்கான காரணம் இன்னமும் புலனாகவில்லை.

தீயினை கட்டுப்படுத்துவதற்காக கடற்படையின் தீ அணைப்பு வாகனங்கள் உடனடியாக ஸ்தலத்திற்கு வந்தன. இதனையடுத்து நகரசபை பொலிஸ் இராணுவ தண்ணீர் தாங்கிகளும் ஸ்தலத்திற்கு வந்து நீரை வழங்கின. நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே விமான படைதளத்தில் இருந்தும் தீ அணைப்பு வாகனமும் கொண்டு வரப்பட்டது. 2 மணிநேர போராட்டத்தின் பின்னர் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இவ்விபத்து காரணமாக அருகில் உள்ள இரு வர்த்தக நிலையங்கள் சேதமடைந்ததுடன் வீடொன்றும் சிறிய சிறிய சேதத்திற்குள்ளானது.

திருகோணமலை நகர சபையில் 3 தீயணைப்பு வாகனங்கள் இருந்த போதிலும் அவற்றினால் சேவையை வழங்க முடியவில்லை. உத்தியோகபூர்வமாக இவ்வாகனங்கள் கையளிக்கப்படவில்லை எனவும் இதனால் தம்மால் சேவையினை வழங்க முடியாது இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். இத் தீ விபத்து குறித்து திருகோணமலை பொலிஸார் தற்போது விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

(ந-8)

# இனவாதத்தை தூண்டும் கட்சிகளுக்கு மக்கள் வாக்களிக்க வேண்டாம்

## பைசர் முஸ்தபா கோரிக்கை

இனவாதத்தை தூண்டும் அரசியல் கட்சிகளுக்கு மக்கள் வாக்களிக்க வேண்டாம் என ஆளும் கட்சியின் பிரதி அமைச்சர் பைசர் முஸ்தபா மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும். நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் இனங்களுக்கு இடையில் ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும்.


அரசியல் நோக்கங்களுக்காக இனரீதியாக பிளவுபட்டால் அது அபிவிருத்திக்கு தடையாக அமையும். எனவே இனவாத அடிப்படையில் அரசியல் நடத்தும் கட்சிகளுக்கு எவரும் வாக்களிக்க வேண்டாம் என பைசர் முஸ்தபா கோரியுள்ளார்.

(2-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

01



செங்கை ஆழியான்

## இலங்கையின் ஆதிக்குடிகளும் ஆரம்பக் குடியேற்றங்களும்

**இலங்கை வரலாற்று மூலகங்கள்**

நாம் வாழ்ந்த வாழ்வின் பெருமைகளையும் சிறுமைகளையும் நாம் வாழவேண்டிய வாழ்வின் போக்குகளையும் எமக்கு சுட்டிக் காட்டுவன வரலாற்றுத் தகவல்களாகும். இலங்கையின் தொல்கால வரலாற்றினை அறிவதற்கு எமக்கு உதவும் மூலாதாரங்கள் எனச் சாசனப் பொறிப்புக்கள், தொல்லியலாய்வுகள், இலக்கியச்சான்றுகள், கல்வெட்டுக்கள், வெளிநாட்டு இலக்கியச் சான்றுகள் என்பன உதவுகின்றன.



பிராமி எழுத்துக்கள்

**1.பிராமி சாசனப் பொறிப்புக்கள்**

கி.மு 3 ஆம் நூற்றாண்டளவில் அசோகன் ஆட்சியுடன் பிராமி என்ற வரிவடிவம் பரவலாகப் பயன்படுத்தப்பட்டதற்கு போதிய சான்றுகள் உள்ளன. அதனை அசோகப்பிராமி அல்லது வடபிராமி என்பர். சமகாலத்தில் தமிழ் நாட்டில் பயன்படுத்தப்பட்ட பிராமியில் (திராவிடி) அசோக பிராமியில் காணப்படாத தமிழுக்கே சிறப்பான இ,ம,ழ,ற,ள,ன போன்ற எழுத்துக்கள் காணப்படுகின்றன என ஆய்வாளர் ஐ.மகாதேவன்[1] குறிப்பிடுவார்.

இலங்கையில் இதுவரை 1500க்கு மேற்பட்ட பிராமிச் சாசனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அகழ்ந்தெடுக்கப்பட்ட மட்பாண்ட ஓடுகளிலும் கற்குகைகளின் சுவர்களிலும் வாயில்களிலும் இவை பொறிக்கப்பட்டுள்ளன. இலங்கையில் காணப்படும் பிராமி வடிவங்களைத் திராவிடபிராமி, ஆதிச் சிங்களப் பிராமி என வகுப்பர். 'அனுராதபுரத்தில் தமிழ் வணிக கணத்தினர் தங்கியிருந்ததாகக் கொள்ளப்படும் இலங்கைத்தமிழ் பிராமிக் கல்வெட்டு பற்றிப் பரணவிதான குறிப்பிட்டுள்ளார். கி.மு.1 ஆம் நூற்றாண்டிற்குரிய பிராமி வரிவடிவ வளர்ச்சி நிரையில் இத்தமிழ் வணிகக் கணத்தினர் அறுவரது பெயர்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன. காரவ, நதச(ன்), சாக(ன), குபிரசுஜாத(ன்), திஸ்ஸ(ன்), குபிர(ன்) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது[2]. கந்தரோடையில் அகப்பட்ட மட்பாண்ட ஓடொன்றில் ததஹபத[3] என்ற திராவிட பிராமி வாசகமும், இன்னொன்றில் விஷ்ணு பூதிஸ்ஸ[4] என்ற தென்பிராமி வாசகமும் பொறிக்கப்பட்டுள்ளதாக கா.'இந்திரபாலா சுட்டிக் காட்டியுள்ளார். ஆனைக்கோட்டையில் அகப்பட்ட வெண்கலத்தினாலான முத்திரையில் கோவேதன் எனப் பொறிக்கப்பட் டுள்ளது[5]. கந்தரோடையில் கிடைத்த இன்னொரு மட்பாண்ட ஓட்டில் குண[6] எனவும் பல்வேறிடங்களில் அகப்பட்ட பிராமிகளில் ஆய், வேள், பரத, பருமக[7], பூநகரியில் அகப்பட்ட மட்பாண்ட ஓட்டில் ஈழ, ஈலா[8] என்ற வரிவடிவங்களும் காணப் பட்டுள்ளன. ஆதிச் சிங்களப் பிராமிச் சாசனங்களில் பௌத்த பிக்குகளுக்கு கொடுக்கப்பட்ட குகைத்தானங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. அத்தோடு அப்பிராமிகளில் இராஜா, தீபராஜா, மஹாராஜ போன்ற பதவிகளும் காணப்படுகின்றன[9].

**2. தொல்லியலாய்வுகள்**

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை அகழ்ந்து ஆய்வு செய்வதன் மூலம் பெறப்படுகின்ற கட்டிடச் சிதைவுகள், சிலைகள், சிற்பங்கள், அக்காலகட்டத்துப் பாவனைப் பொருட்கள் ஆயுதங்கள், ஆபரணங்கள், நாணயங்கள் முதலானவை பண்டைய வரலாற்றினைத் தெளிவுபடுத்துகின்றன. அனுராதபுரம், பொலநறுவை, கண்டி, கந்தரோடை, வல்லிபுரம், மாதோட்டம் முதலான பிரதேசங்களில் நிகழ்ந்த தொல்லியலாய்வுகள் பல வரலாற்றுண்மையைத் தெரிய வைத்துள்ளன. நிலத்துனுள் புதையுண்டும் காடுகளால் மூடியும் கிடந்த இலங்கையின் புராதன வரலாற்று நகர்களான அனுராதபுரத்தையும் பொலநறுவையையும் வெளிக்கொணர்ந்தவை தொல்லியலாய்வுகளாகும். இலங்கையில் பாவனையில் இருந்த பழைய நாணயங்கள், அகழ்வின்போது, கிடைத்துள்ளன. அத்தோடு இந்திய, அராபிய, உரோம, சீன நாணயங்களும் அகழ்வின்போது ஆங்காங்கு அகப்பட்டுள்ளன.


**3. இலக்கியச் சான்றுகள்**

இலங்கையின் புராதன வரலாற்றை அறிந்து கொள்வதற்கு எமக்கு பெருந்துணையாக இருப்பவை இலக்கிய நூல்களாகும். இராமாயணம், மகாபாரதம் என்பன காவியங்களாயினும் அவை ஒரு காலகட்டத்தில் வரலாற்றினை அறிந்து கொள்ளத் தகவல்களைத் தருகின்றன. அதே போல இலங்கை வரலாற்றின் பனுவல்களாக தீபவம்சம், மஹாவம்சம், சூளவம்சம் என்பன விளங்குகின்றன. பாளி மொழியில் இலங்கைத் தீவின் அரசவம்சாவழியை முதன்முதல் விபரிக்கின்ற நூலாகத் தீபவம்சம் விளங்குகின்றது. இதனைப் பின்பற்றி கி.பி 6ஆம் நூற்றாண்டில் மகாநாமதேரர் பாளி மொழியில் மஹாவம்சத்தை எழுதினார். இலங்கை வரலாற்றில் மிக முக்கியமான ஆவணமாக இப்பனுவல் கொள்ளப்படுகின்றது. விஜயனின் வருகையில் இருந்து மகாசேன மன்னனின் காலம்வரை (கி.பி 303) மஹாவம்சம் விபரிக்கப்படுகின்றது. 37அத்தியாயங்களைக் கொண்ட இந்நூல் காவிய மரபினைத் தழுவியதாக உள்ளது. அதனால், துட்டகாமினி மன்னனை பாட்டுடைத் தலைவனாக கொண்டுள்ளது. இவ்விரு நூல்களும் பௌத்த மதத்தையும் அதன் பெருமைகளையும் எடுத்தியம்புவனவாக அமைந்துள்ளன. முக்கியமாக மஹாவம்சம் இலங்கை தேரவாத



அசோகப்பிராமி எழுத்துக்கள் அசோகரின் தூணின் ஒரு பகுதியில்

பௌத்தமதம் மட்டும் சிறப்புற்றிருக்கும் ஒருநாடு என்கிறது. மஹாவம்சத்தின் தொடர்ச்சியாக சூளவம்சம் எழுதப்பட்டுள்ளது. இதனை தர்மகீர்த்திதேரர் என்பவர் தொகுத்தார். இந்நூலும் பௌத்தமதத்தின் மேன்மையையும் பௌத்தமத மன்னர்களின் பெருமைகளையும் சிறப்பாக கூறுகிறது. சூளவம்சத்தின் பாட்டுடைத் தலைவனாக மகாபராக்கிரமபாகு அமைந்தான். இவற்றோடு பௌத்தசாசன வரலாற்றினை விபரிக்கும் நிகாய சங்கிரஹ, ராஜாவளி, பூஜாவளி முதலியனவும் இலங்கை வரலாற்றினைத் தொட்டுச் சென்றுள்ளன. மேலும் யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றினைக் கூறும் மூல நூல்களாக கைலாயமாலை, வையாபாடல், யாழ்ப்பாண வைபவமாலை ஆகிய மூன்றும் கருதப்படுகின்றன.




தொலமியின் தப்ரபேன்

**4. கல்வெட்டுக்கள்**

இலங்கையின் வரலாற்றுத் தகவல்களைத் தருவனவாகக் கல்வெட்டுக்கள் இன்று விளங்குகின்றன. தென்னிலங்கையில் இலகுவில் இயற்கை அரிப்புக்குட்படாத கருங்கற்களில் மன்னர்களின் முக்கிய பணிகள், பெருமைகள் பௌத்த பிக்குகளுக்கான, ஒழுக்க நெறிகள், தானங்கள், சட்டவிதிகள், தொடர்ந்து ஆற்றவேண்டிய சமய, சமூக நெறிகள் பொறித்து வைக்கப்பட்டுள்ளன. துரதிஷ்டவசமாக கருங்கற்கள் இல்லாது நீரரிப்புக்கு (கரைசலுக்கு) இலகுவில் உட்படக்கூடிய சுண்ணாம்புக் கற்பாறைகளைக் கொண்டிருக்கும் யாழ்பாணக் குடாநாட்டில் கற்சாசனங்களைப் பொறித்து வைக்க முடியாதுபோனது. அதனால்தான் யாழ்ப்பாணத்து ஆரியச் சக்கரவர்த்தி ஒருவன் கேகாலை மாவட்டத்தின் கோட்டகம எனுமிடத்தில் தன் பெருமைகளைக் கல்வெட்டொன்றில் பொறித்து வைக்க நேர்ந்தது[10].

(தொடரும்)



மிகப்புராதன தமிழ் கல்வெட்டுக்களில் ஒன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்பட்ட நீரிழிவு நோயினால் உண்டாகும் பாதிப்புகள்

**கேள்வி 03:- நீரிழிவு நோயாளி உடற்பயிற்சி செய்கையில் எத்தகைய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்?**

பதில்:- உடற்பயிற்சி செய்யும் பொழுது நீரிழிவு நோயாளி பின்வரும் விடயங்களில் எச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும்.

★ நீரிழிவு நோயாளி தனது சௌகரியத் திற்கேற்ப உடற்பயிற்சி, செய்ய வேண்டும்.

★ 30 முதல் 50 நிமிடம் பயிற்சி போதும். அதுவே ஒரு நோயாளியை சுறுசுறுப்பாக வைத்திருக்கும்.

★ பயிற்சியை மெதுவாக ஆரம்பிக்க வேண்டும்.

★ தொடர்ந்து சீனி அளவை பரிசோதித் துக் கொள்ள வேண்டும். ஏனெனில் பயிற்சி அதிகமாகிவிட்டால் இரத்தத்தில் சீனி அளவு ஒரேயடியாக குறைந்து விடும்.

★ பயிற்சி செய்கையில் சீனி அல்லது குளுக் கோஸை அருகில் வைத்துக் கொள்ளுங்கள்.

★ புதிய பயிற்சி ஏதேனும் செய்யத் தொடங்குவதற்கு முன்பு உங்கள் மருத்துவ ரைக் கலந்து ஆலோசனை பெறுங்கள்.

**கேள்வி 04:- தனது உடல் எடையை குறைத்துக் கொள்ள நீரிழிவு நோயாளி என்ன செய்ய வேண்டும்?**

பதில்:- நீரிழிவு நோயாளி குறுகிய கால த்தில் கடுமையான பயிற்சி செய்து தனது உடல் எடையைக் குறைத்துக் கொள்ளக் கூடாது. அப்படிச் செய்தால் அது தசைகளை பலவீ னப்படுத்தி நோயாளியை பலவீனமாக்கும். மருந்து மாத்திரைகளினால் உடல் எடை எவ் வாறு குறைந்ததோ அதே வேகத்தில் அதிகரி த்து விடும். அதனால் நீரிழிவு நோயாளி தனது உடல் எடையை தொடர்ந்து பயிற்சி செய்து மெதுவாக குறைக்க வேண்டும். வாரத்திற்கு உடல் எடை 1/2 கிலோ முதல் ஒரு கிலோ வரை குறைத்தால் அது நன்று.

**கேள்வி 05:- நீரிழிவு நோயாளி உடற்பயிற்சி செய்யும் பொழுது ஏதே னும் சாப்பிடலாமா?**

பதில்:- நீரிழிவு நோயாளி உடற்பயிற்சி செய்வதற்கு முன்பு அல்லது பின்பு நொறுக் குத் தீனி ஏதேனும் சாப்பிடுவது நன்று. கார ணம் உடற்பயிற்சி செய்யும் பொழுது சீனி அளவு குறையும். இதன் விளைவாக ஹைப்போ க்ளைஸீமியா வரலாம்.

**கேள்வி 06:- நீரிழிவு நோயாளிக்கு உடற்பயிற்சியால் தீங்கு நேருமா?**

பதில்:- நீரிழிவு நோயாளி உடற்பயிற்சி செய்யத் தொடங்குவதற்கு முன்பு தனது மருத்துவரிடம் ஆலோசனை பெற வேண் டும். காரணம் சில சமயம் உடற்பயிற்சி செய் யும் பொழுது இருதய நோய்க்கான அறிகுறி கள் அல்லது வேறு ஏதேனும் நோய்க்கான அறிகுறிகள் திடீரென தோன்றக் கூடும்.

**கேள்வி 07:- நீரிழிவு நோயாளி காலையில் மெதுவாக ஓடலாமா?**

பதில்:- நீரிழிவு நோயாளி காலையில் நடைப்பயிற்சி செய்வதுதான் நல்லது. முதலில் மெதுவாக நடக்க வேண்டும். படிப்படியாக வேகத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டும். முடிந்தால் மெதுவாக ஓடலாம். எனினும் உடல் களைப்படையாமல் பார்த்துக்கொள்ள வேண் டும். ஏதேனும் நேர்ந்தால் அதை சமாளிக்கும் வகையில் தயாராக இருக்கவும் வேண்டும்.

**கேள்வி 08:- நீரிழிவு நோயாளி உடற் பயிற்சி செய்யும் பொழுது ஏதேனும் நேர்ந்து அவசர சிகிச்சையளிக்க வேண்**




**19**

**டிய அவசியம் வருமா?**

பதில்:- உடற்பயிற்சி செய் யும் பொழுது மூச்சுத் திணறுகிறதா, மார்பு வலிக்கிறதா, படபடப்பாக இருக்கிறதா என்று கவனித்து அப்படியிருந்தால் பயிற்சியை நிறுத்திவிட்டு உடனே மருத்துவரிடம் ஆலோ சனை கேட்க வேண்டும். சீனி அளவில் மாற்றங்கள் ஏற்பட்டால் இப்படிப்பட்ட பிரச்சி னைகள் வருவதற்கு வாய்ப்புண்டு.

## டாக்டர்.A.K.ஜிங்கான்

**கேள்வி 09:- நீரிழிவு நோயாளி க்கு நன்மை பயக்கும் யோகாசனங் கள் யாவை?**

பதில்:- நீரிழிவு நோயாளிக்கு தனது நோயைக் கட்டுப்படுத்த பின்வரும் யோகாச னங்களை செய்தல் வேண்டும்:-

| | |
|---|---|
| பத்மாசனம் | மயூராசனம் |
| தனுராசனம் | சக்ராசனம் |
| சலபாசனம் | திரிகோணாசனம் |
| பஸ்சிமோத்தாசனம் | வஜ்ராசனம் |
| புஜங்காசனம் | சவாசனம் |
| தாப்லாசனம் | மத்ஸ்யாசனம் |
| கோணாசனம் | பத்ராசனம் |
| குருதாசனம் | சர்வாங்காசனம் |
| சூரிய நமஸ்காராசனம் | நௌகாசனம் |

(தொடரும்)

# இருதய நோய்களிலிருந்து பாதுகாக்கும் வேர்க்கடலை

வேர்க்கடலை என்றதுமே முதலில் நினை வுக்கு வருவது அதில் உள்ள கொழுப்புச் சத்துதான். இதனால் உடல் பருமன் கூடும். இரத்த அழுத்தம் அதிகரிக்கும். இதய நோய் கள் போன்ற பிரச்சினைகள் வரும் என்ற நம்பிக்கைதான் இருந்து வருகின்றது. ஆனால், வருகின்ற ஆராய்ச்சிகளில் இந்த நம்பிக்கைகளுக்கு எந்த ஒரு ஆதாரமுமி ல்லை என்றே தெரிகிறது.



காரணம் வேர்க்கடலையில் உடலுக்கு தேவையான நல்ல கொழுப்புச் சத்தும் அத னுடன் அதிகமான புரதச்சத்தும் இருக்கின்ற படியால் அவை உடலுக்கு தீங்கு விளைவிப் பதில்லை. முக்கியமாக நீரிழிவு நோயாளிக ளுக்கு உகந்த ஆரோக்கியமான உணவா கும். ஏனெனில் இதிலுள்ள சீனியின் அளவு இரத்தத்தில் மிக மிக குறைந்த அளவே சேருவதால் பயமில்லாமல் சாப்பிடலாம். மேலும் இதில் இருக்கும் மக்னீசியம் என்ற வேதிப்பொருள் இன்சுலினை சுரக்கச் செய் யும் ஓமோனை துரிதப்படுத்தி சீனியின் அளவை கட்டுப்படுத்துகிறது. ஆக்வே இவர் கள் அன்றாட உணவில் தைரியமாக வேர்க் கடலையை சேர்த்துக் கொள்ளலாம்.

வேர்க்கடலையில் இரத்த அழுத்தத்தை அதிகப்படுத்தும் சோடியத்தின் அளவு மிக வும் குறைவாக காணப்படுவதால் வேர்க் கடலை சாப்பிடுபவர்களுக்கு இரத்த அழுத் தம் அதிகரிக்காது. மாறாக இரத்தக்கொதிப்பு குறையும். வேர்க்கடலையில் நைட்ரிக் அமி லம் என்ற வேதிப்பொருள் உள்ளது.

இவை வேர்க்கடலையைச் சாப்பிடுவ தன்மூலம் உடம்பில் உற்பத்தியாகும் நைட் ரேட் இரத்த குழாய்களை விரிவடையச் செய் வதால் இரத்த ஓட்டம் சீராகிறது. மேலும் இதில் காணப்படும் ஆன்ட்டி ஆக்ஸிடெ ன்ட்ஸ் போன்ற உயிர் வேதிப்பொருட்கள் மாரடை ப்பு போன்ற இருதய நோய்கள் உருவாக் காமல் தடுக்கிறது. வேர்க்கடலை நார்ச்சத்து மிகுந்த உணவு என்பதால் வேர்க்கடலை சாப்பிட்டால் மலச்சிக்கல் ஏற்படாது. ஆகவே கர்ப்பிணிகள் கூட வேர்க்கடலையை சாப்பிடு வது நல்லது.

வேர்க்கடலையின் தோலை நீக்காமல் சாப்பிட வேண்டும். ஏனெனில் அதில்தான் நிறைய சத்துகள் அடங்கியுள்ளன. மேலும் வேர்க்கடலையைப் பச்சையாகச் சாப்பிடு வதைவிட வேர்க்கடலையை அவித்தோ, வறு த்தோ சாப்பிடுவதால் சிலருக்கு ஏற்படும் அஜீரணத்தை தவிர்க்கலாம். பொதுவாக உடல் எடையை குறைப்பவர்கள் நொறுக்கு தீனிக்கு பதிலாக வேர்க்கடலையை சாப்பி டலாம். ஏனெனில் இவை சாப்பிட திருப்தி விரைவிலேயே கிடைப்பதால் மேலும் மேலும் எதையாவது சாப்பிட்டு உடல் எடையை கூட் டும் நிலை வராது.

ஆனாலும் இதில் உடல் எடையைக் கூட் டும் புரதச்சத்து அதிகமிருப்பதால் அளவோடு சாப்பிடுவதுதான் இவர்களுக்கு நல்லது. இதி லுள்ள கல்சியம் மறறும் விற்றமின் டி ஆரோ க்கியமான எலும்பு மற்றும் பற்களின் வளர் ச்சிக்கு உதவுவதோடு மட்டுமல்லாமல் முது மையில் ஏற்படும் ஒஸ்டியோபோரோசிஸ் என்ற எலும்பு சம்பந்தமான நோயையும் தடுக்க உதவுகிறது.

**வேர்க்கடலையில் இருக்கும்சில வேதிப் பொருட்கள் புற்றுநோய் உரு வாகக் காரணமாகும் செல்களை அழித்து விடுகின்றன.**

குறிப்பாக மலக்குடல் புற்றுநோய் உருவா காமல் தடுக்கிறது. மேலும் பார்க்கின்ஸன், அல்ஸீமர் போன்ற ஞாபகமறதி நோய்கள் வராமல் தடுக்க வேர்க்கடலை உதவுகிறது. வேர்க்கடலையில் உள்ள உயிர் வேதிப் பொரு ட்கள் நரம்புச்செல்களை நன்றாகச் செயற்பட தூண்டி விடுகின்றன.

அதனால் நரம்புகள் நன்றாகச் செயற்படுவ தால் அது தொடர்புடைய நோய்கள் குறைந்து விடுகிறது. இதில் முக்கியமாக தைரெய்ட்டு பிரச் சினை உள்ளவர்கள் சிறுநீரக கோளாறு மற் றும் ஒவ்வாமை பிரச்சினைகள் உள்ளவர்கள் இக் கடலையை தவிர்த்து விடலாம் அல்லது மருத் துவரின் ஆலோசனையை கேட்பது நல்லது.

# குடிப்பழக்கத்தை மாற்றும் கொய்யாப்பழத்தின் தன்மை

பழங்களிலேயே விலை குறைவானதும் அனைவராலும் எளிதில் வாங்கி உண்ணக் கூடியதுமான கொய்யாப்பழத்தில் முக்கிய உயிர்ச்சத்துக்களும் தாது உப்புக்களும் அட ங்கியுள்ளன. கொய்யா மரத்தில் இருந்து கிடைக்கக்கூடிய கனி மட்டுமல்லாது இலை, பட்டை என அனைத்துமே மருத்துவகுணம் கொண்டுள்ளது.



☆ மதுபோதைக்கு அடிமையான மது பிரியர்கள் அப்பழக்கத்தில் இருந்து விடுபட நினைத்தால் இப்பழத்தை அதிகம் சாப்பிட லாம். இதை தொடர்ந்து சாப்பிட்டால் மது அருந்தும் ஆசை, வெறி எல்லாம் தூள் தூளாகி விடும். மிக எளிதில் மது போதை பழக்கத்தில் இருந்து விடுதலை பெறலாம்.

**ஏனைய பயன்கள்**

➢ விற்றமின் பி மற்றும் விற்றமின் சி ஆகிய உயிர்ச்சத்துக்கள் கொய்யாப்பழத்தில் அடங்கியுள்ளன. கல்சியம், பொஸ்பரஸ், இரும்பு போன்ற தாது உப்புகளும் இதில் காணப்படுகின்றன.

➢ கொய்யா மரத்தின் இலைகள் திசுக் களை சுருக்கும் மற்றும் குருதிப் போக்கினைத் தடுக்கும் திறன் உடையவை. மலச்சிக்கல் போக்கும். க்சாயம் வாந்தியினை தடுக்கும். ஈறுகளில் வீக்கம் ஏற்பட்டால் இலையை காய்ச்சி கொப்பளிக்கலாம்.

➢ கொய்யா இலைகள் மூலம் தயாரிக் கப்படும் கஷாயம் இருமல், தொண்டை மற் றும் இருதய சம்பந்தமான நோய்களுக்கு தீர்வு தருகின்றன. கொய்யா மரத்தின் இளம் புதுக்கிளைகளின் மூலம் தயாரிக்கப்படும் கஷாயம் காய்ச்சலைக் கட்டுப்படுத்தும்.

➢ கொய்யா மரத்தின் குருத்து இலைகளை அரைத்து காயம், புண் இவற்றின் மேல் தடவி னால் அவை விரைவில் ஆறிவிடும். கொய்யா இலைகள் அல்சர் மற்றும் பல் வலிக்கும் உதவுகின்றன.

➢ கொய்யா மரத்தின் பட்டை பக்ரீரியா அழுகலை தடுக்கும். காய்ச்சலைப் போக்கும். வேர்ப்பட்டை குழந்தைகளின் வயிற்றுப்போக் கினை குணப்படுத்தும். கொய்யாப்பழத்தை அறிந்து சாப்பிடுவதை விட பழத்தை நன் றாக கழுவிய பின்னர் பற்களில் நன்றாக மென்று தின்பதே நல்லது. இதனால் பற்க ளும் ஈறுகளும் பலப்படும்.

➢ வேறு எந்தப் பழத்திலும் இல்லாத விற்றமின் சி என்ற உயிர்ச்சத்து இப்பழத் தில் அதிக அளவில் காணப்படுகிறது. அத னால் வளரும் குழந்தைகளுக்கு கொய்யாப் பழம் ஒரு வரப்பிரசாதமாகும். உடல் நன்கு வளரவும், எலும்புகள் பலம் பெறவும் கொய் யாப்பழம் உதவும்.

➢ கொய்யாவின் தோலில்தான் அதிக சத்துக்கள் உள்ளன. இதனால் தோலை நீக்கி சாப்பிடக்கூடாது. முகத்திற்கு பொலி வையும் அழகையும் தருகிறது. தோல் வறட் சியை நீக்குகிறது. முதுமை தோற்றத்தை குறைத்து இளமையானவராக மாற்றுகிறது.

➢ கொய்யா மரத்தில் சில பகுதிகளுடன் வேறு சில பொருட்களும் சேர்த்து தயாரிக் கப்படும் ஒரு கஷாயத்தை அருந்தினால் பிரசவத்திற்கு பின்பு வெளியாகும் கழிவு கள்ளை வெளியேற்ற மிகவும் உதவுவதாக சித்த மருத்துவத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

➢ சாப்பிடுவதற்கு முன் இப்பழத்தை சாப்பிடுவது நல்லதல்ல. சாப்பிட்ட பின்போ அல்லது சாப்பிடுவதற்கு நீண்ட நேரத்திற்கு முன்போ சாப்பிடுவதே நல்லது.

➢ நோயால் அவதியுற்று மருந்து சாப் பிட்டு வருபவர்கள் இப்பழத்தை சாப்பிட்டால் மருந்து முறிவு ஏற்படும். இருமல் இருக்கும் போது இப்பழத்தை சாப்பிட்டால் அதிகமா கும். தோல் தொடர்பான வியாதி உள்ளவர்கள் இப்பழத்தை உண்டால் நோய் அதிகரிக்கும்.

➢ கொய்யாப்பழத்திற்கு மருந்தை முறிக் கும் ஆற்றல் உண்டு. ஒரு சிலருக்கு மயக்க த்தை ஏற்படுத்தும். வாதநோய், ஆஸ்துமா போன்ற நோய் உள்ளவர்கள் இப்பழத்தை சாப்பிடக்கூடாது.

➢ கொய்யாப்பழத்தை இரவில் சாப்பிடக் கூடாது. சாப்பிட்டால் வயிறு வலி உண்டா கும். கொய்யாவை அளவுடன் சாப்பிட வேண் டும். அளவிற்கதிகமாக சாப்பிட்டால் பித்தம் அதிகரித்து வாந்தி, மயக்கம் ஏற்படும்.

➢ குடி போதையில் உள்ளவர்களுக்கு போதையை உடனே முறிக்க கொய்யா இலையை உண்ண கொடுத்தால் உடனே வெறி இறங்கும் என்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெசோ மாநாடு இலங்கையின் இறையாண்மைக்கு அச்சுறுத்தலே!

## சதித்திட்டம் நடக்கிறது என்கிறது ஹெலஉறுமய

**தமிழகத்தில் சில குழுக்கள் இலங்கையின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் செயற்படுகின்றன. ஆனால் இது தொடர்பில் மத்திய அரசு கண்டுகொள்ளாமை கவலையளிப்பதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.**

டெசோ மாநாட்டிற்கு எதிராக இந்தியத் தூதரகம் முன்பாக பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கப்போவதாகவும் அறிவித்துள்ளது.

இது குறித்த ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளரும் ஊடகச் செயலாளருமான நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க கூறுகையில்,

தி.மு.க. தலைவர் கருணாநிதியின் தலைமையில் தமிழகத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி டெசோ மாநாடு இடம்பெறவுள்ளது. இம்மாநாட்டின் ஊடாக இலங்கையில் தமிழீழம் ஒன்றை உருவாக்கப்போவதாக அவர்கள் கூறுகின்றனர்.

புலிகளுக்கு வெளிப்படையாகவே உதவிகள் செய்து ஆதரிப்பவர்களே மேற்படி மாநாட்டை நடத்தி இலங்கையில் தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

அந்நிய நாடொன்றுக்கு எதிராக சதித்திட்டம் தீட்டுவது, மாநாட்டை நடத்துவது என்பது சர்வதேச சட்டங்களை மீறும் செயலாகும். இதனை இந்திய மத்தியரசு புரிந்து கொள்ள வேண்டும். தனது பிராந்தியத்திற்குள் இலங்கைக்கு எதிராக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இது இலங்கை -இந்திய நீண்ட நாள் உறவிற்கு ஆபத்து ஏற்படுத்தும் செய லாகும்.

எனவே கருணாநிதி நடத்தவுள்ள டெசொ மாநாடு குறித்து இந்திய மத்தியர்சு அவதானத்துடன் செயற்பட வேண்டும். எவ்வாறாயினும் டெசோ மாநாடு இலங்கையின் இறையாண்மைக்கு அச்சுறுத்தலான விடயமாகும்.

எனவே இதற்கு எதிராக நாட்டு மக்களை தெளிவுபடுத்த வேண்டியது எமது கடமையாகும். ஆகவே எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ள டெசோவிற்கு எதிராக இந்திய தூதரகம் முன்பாக பாரிய போராட்டம் ஒன்றை ஜாதிக ஹெல உறுமய நடத்தவுள்ளது.

இதில் தேசப்பற்றுள்ள அமைப்புக்கள் பொது மக்கள் என பல தரப்பினரும் கலந்து கொள்ள உள்ளதுடன் ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் டெசோ மாநாட்டிற்கு எதிரான மகஜர் ஒன்றும் தூதரகத்தில் கையளிக்கப்படவுள்ளது என கூறினார். (ந-2-9)

# சீமெந்து பொருட்களுக்கான கேள்வி அதிகரிப்பு

(பூந்தோட்டம்)

வவுனியாவில் சீமெந்து பொருட்களுக்கான கேள்வி அதிகரித்துள்ளதாக உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது மீள்குடியேற்றப்பகுதிகளில் புதிய நிர்மாணப்பணிகள் மற்றும் ஏனைய பகுதிகளில் புதிய கட்டுமானப்பணிகள் அதிகளவில் காணப்படுவதன் காரணமாக சீமெந்து பொருட்களுக்கான கேள்வி அதிகரித்துள்ளதாக தெரிவிக்கும் சீமெந்து பொருட்களின் உற்பத்தியாளர்கள் தாம் சுயதொழில் அடிப்படையில் இவற்றை செய்து வருவதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை சிறிய முதலீட்டை கொண்டு தாம் ஆரம்பித்த இத்தொழிலானது தற்போது சிறந்த வருமான வழியாக உள்ளதெனவும் தெரிவித்தனர். சுயதொழில் முயற்சியாளர்கள் இவ்வாறான தொழிலை முன்னெடுப்பதனால் வருமானத்தை ஈட்டுவதற்கு சிறந்த வழியாக இருக்கும் எனவும் தெரிவித்தனர். (ந-9-266)

# ரஷ்ய ஹெலிகள் கொள்வனவு குறித்து கவனம் செலுத்தப்படும்

ரஷ்யாவிடமிருந்து உலங்குவானூர்திகளை கொள்வனவு செய்வது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

எம்-17 ரக உலங்குவானூர்திகளை கொள்வனவு செய்வது தொடர்பான சாத்தியம் குறித்து ஆராயப்பட்டு வருவதாக குறிப்பிடப்படுகிறது.

கடன் அடிப்படையில் சுமார் 14 உலங்குவானூர்திகளை கொள்வனவு செய்ய ரஷ்யா உதவிகளை வழங்குவதாக அறிவித்துள்ளது.

எனினும் சாத்திய ஆய்வின் பின்னர் எத்தனை உலங்குவானூர்திகளை கொள்வனவு செய்வது பற்றி தீர்மானிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2010 ஆம் ஆண்டு ரஷ்யாவிற்கு விஜயம் செய்திருந்த போது 300 மில்லியன் அமெரிக்க டொலர்களை பத்தாண்டு கால கடன் அடிப்படையில் பெற்றுக் கொள்வது தொடர்பான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

இராணுவ நோக்கங்களுக்கு உலங்குவானூர்திகள் தேவையில்லை எனவும் பயணிகள் போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறையை மேம்படுத்த இந்த உலங்குவானூர்திகளை பயன்படுத்த முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (2-9)

# துமிந்த சில்வா நாடு திரும்பவில்லை; பொலிஸ் ஊடகப்பேச்சாளர் மறுப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா இலங்கை திரும்பியுள்ளதாக வெளியான செய்தியை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மறுத்துள்ளார்.

சிங்கப்பூரில் சிகிச்சை பெற்று வந்த துமிந்த சில்வா நாடு திரும்பியுள்ளதாகவும் அவரை கைது செய்ய வேண்டும் என்றும் ஹிருணிகா பிரேமச்சந்திர பொலிஸ்மா அதிபரிடம் முறையிட்டிருந்தார்.

இந்நிலையில் இது தொடர்பில் விசாரணை செய்த போது நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா நாடு திரும்பவில்லை என்பது தெரியவந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (2-9)

# அரசியல்வாதிகள் அக்கிரமக்காரர்களா?

## ஒரு வருடத்தில் 40 பேர் கைது

(கொழும்பு)

கடந்த 12 மாதங்களில்சுமார் 40 அரசியல்வாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொலைகள், பாலியல், சித்திரவதை, சிறுவர், துஷ்பிரயோகம், தாக்குதல், கப்பம்கோரல், கடத்தல் உள்ளிட்ட பாரிய குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் இந்த அரசியல்வாதிகளுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது. ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பை சேர்ந்தவர்களே அதிகளவில் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்த ஒருசில பாராளுமன்ற உறுப்பினர்களும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை குற்றச்செயல்களுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பொலிஸாரின் விசாரணைக்கு பிரத்தியேகமாக ஜனாதிபதி விசாரணைப்பிரிவு இந்த விசாரணைகளை நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-9)

# இலங்கையர்கள் அவுஸ்.பயணிக்கும் விடயம் குறித்து இந்தியா விசாரணை

(கொழும்பு)


இலங்கையர்களை அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கை தொடர்பில் இந்தியா விசாரணை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையர்கள் கடல்வழியாக அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டுமென பொலிஸார் இந்திய புலனாய்வு பிரிவினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தியாவின் சில மாநிலங்களை மையமாக கொண்டு சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்கள் இலங்கையர்களை அவுஸ்திரேலியாவிற்கு அனுப்பிவைப்பதாக குற்றம்சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு சட்டவிரோதமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆட்கடத்தல் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தும் நோக்கில் விசாரணைகள் நடத்தப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (2-9)





சித்தன்கேணி பிரம்ம ஸ்ரீ சபா உமாபதி சர்மாவின் *சொல்லத்துடிக்கிற மனசு* நூல் வெளியீட்டு விழா அண்மையில் சித்தன்கேணி சிவன் தேவஸ்தான மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியர் ந.குகபரன் தலைமையுரை ஆற்றுவதையும் விருந்தினர்கள் அருகில் அமர்ந்திருப்பதையம் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதகல் நில அபகரிப்பு!

...2000 ஆம் ஆண்டு இந்த மக்கள் மாதகலுக்கு திரும்பிய பொழுது மாதகலில் உள்ள தனியார் காணி ஒன்றில் முகாம் அமைக்கப் பட்டது. பள்ளமான அந்தக் காணி யின் ஒரு பகுதியில் நீர்தேங்கி வருடம் முழுவதும் நிற்கிறது. மழைக்காலம் ஒன்றில் அந்த முகாமிற்கு சென்றபொழுது முற்றம் முழுவதும் மழைநீர் தேங்கியிருந்தது. 2000 ஆம் ஆண்டில் ஆரம்பித்த முகாம் வாழ்க்கை இப்பொழுது பன்னிரண்டு வருடங்களாகியும் நீண்டு கொண்டு செல்கிறது. சந்திரிக்கா பண்டாரநாயக்கா ஆரம்பித்த அகதி வாழ்க்கையை மகிந்த ராஜபக்ஷ தொடர்ச்சியாக முன்னெடுக்கிறார்.

2006 ஆம் ஆண்டில் இந்த மக்கள் ஒருமுறை மீள்குடியேற்றப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. இந்தக் கிராமத்தை பூர்வீகமாக்கொண்ட சறோசமலர் அந்த நாடகம் குறித்து விபரித்தார்.

ஒவ்வொரு குடும்பத்திலும் ஐந்து பேர் போய் காணியை திருத்துங்கள் என்று சொன்னார்கள். ஒரு இரண்டு நாளில் காணியை திருத்தச் சொல்லிப் போட்டு பிறகு "விடமாட்டோம்" என்று சொல்லிவிட்டார்கள். இராணுவத்தின் பாவனைக்காக மக்களை துப்பரவாக்க பண்ணியிருக்கிறார்களா? என்ற இயல்பான கேள்வி எழுகிறது. 2006 காலப்பகுதியிலேயே மீள்குடியேற்றம் என்ற பெயரில் அரசாங்கமும் இராணுவமும் இவ்வாறான நாடகங்களை நடத்தியிருக்கின்றன என்பது முக்கியமானது. அதைவிட அண்மையிலும் மீள்குடியேற்றம் என்று மாதகல் மேற்கில் சில குடும்பங்கள் தற்காலிகமாக குடியிருத்தப்பட்டன. விரைவில் உங்கள் சொந்த இடங்களில் மீள்குடியேற்றுவோம் என்று வாக்குறுதி அளித்தே அந்த மக்கள் மீள்குடியேற்றப்பட்டார்கள்.

ஆமிக்குள் வாழ்வு, நேவிக்குள் வாழ்வு என்று தங்கள் வாழ்க்கையின் அடையாளத்தை அந்த மக்கள் குறிப்பிட்டார்கள். சம்புத்துறைமுகம் பகுதியில் சில மக்கள் மீள்குடியேறுவதாக வருகை தந்த பொழுது இராணுவத்தின் ஆளுகையும் நடமாட்டங்களும் நிறைந்ததினால் அவர்கள்




வீதியில் இறங்கிப்போராடும் மாதகல் மக்கள்

## எங்கள் நிலம் எமக்கு வேண்டும்!


இரவுகளில் வேறு பகுதிகளில் தஞ்சமடைகிறார்கள். நேவிப்படையுடன் எப்படி வாழ்வது? என்று அங்கு சந்தித்த ஒரு தாய் கேட்டார். மிகவும் நியாயமான கேள்வி. இராணுவத்தை, பாதுகாப்பு படைகள் என்ற பெயரில் எங்கள் நிலத்தில் அரசு குவித்திருக்கிறது. ஆனால், இந்த வாழ்க்கையும் அதன் கொடுமையும் அனுபவிக்கும் மக்களோ இதனை அந்நியப்படைகளாகவும் ஆக்கிரமிப்புப்படைகளாகவும் பார்க்கிறார்கள்.

"பலாலியிலிருந்து செல்கள் விழ விமானங்கள் எங்கள் கிராமங்களில் குண்டுகள் கொட்டியது ஆலறியடித்துக் கொண்டு ஓடினோம்" என்று இருதயநாதன் மல்லிகா தேவி குறிப்பிட்டார். சாவகச்சேரியில் இருபது வருடம் அகதியாக வாழ்ந்துவிட்டு இப்பொழுதுதான் வந்திருக்கிறோம் என்றார் அவர். சுமார் 150 குடும்பங்கள் மீள்குடியேற்றம் என்ற பெயரில் கொண்டுவரப்பட்ட பொழுதும் பல குடும்பங்கள் இதை நிராகரித்துவிட்டு சென்றிருக்கின்றன. இந்த மக்கள் குடியேற்றப்பட்டது, அந்த மக்களின் காணிகளில் அல்ல. இது மீள்குடியேற்றமல்ல. இவர்கள், மாதகல் மேற்குப்பகுதி மக்கள். இவர்களை, வேறு இடத்தில் மீள்குடியேற்றம் என்ற பெயரில் கொண்டுவந்து விடும் பொழுது இதுவும் இன்னொரு அகதி வாழ்க்கையே.

"வன்னிக்குள் மாத்திரம் ஒன்பது இடங்களில் மாறி மாறி இடம் பெயர்ந்தோம்" என்று சொல்கிறார் மீள்குடியேற்ற பாதுகாப்பு வலய தலைவர். காடு அழித்தல், இராணுவத்தினர் அமைத்த மண்மேடுகள், காவலரண்கள் அழித்தல் முதலியவற்றுக்கு எந்த திட்டமும் இல்லை, நிதியும் ஒதுக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டார். "எங்கள் ஊர் சுற்றுலாத்தளமாகிவிட்டது" என்று மாதகல் மக்கள் பெரும் குமுறலுடன் சொன்னார்கள். "நாங்கள் படித்த பள்ளிகள் படையினரின் பயிற்சி முகாங்களாகிவிட்டன" என்று கோபம் பொங்க பேசினார்கள். மாதகல் கடலுக்கு கிழக்கே உள்ள மக்களின் காணிகளில் உயர்ந்த தென்னைகள் யாருமற்று நிற்கின்றன. இடையிடையே அழிந்த வீடுகள் தென்படுகின்றன. இந்தக் கிராமத்தில் முன்பொரு காலத்தில் சனங்கள் வாழ்ந்தார்கள் என்பதை சொல்லும் இந்தக் கிராமத்தின் துயரமுகம் இப்பொழுது அந்தச் சனங்கள் என்னவானார்கள் என்றும் கேட்கிறது?

இவற்றை எல்லாம் இங்கு வரும் சிங்கள சுற்றுலாப் பிரயாணிகள் பார்க்க மாட்டார்களா? சங்கமித்திரையின் வருகையையும் சிராந்தியின் வருகையையும் கடற்படையின் வருகையையும் பார்க்கும் மக்கள், இடம் பெயர்ந்து செல்ல வைக்கப்பட்ட தமிழ் மக்களை எங்கே என்று கேட்க மாட்டார்களா? என்கிற பெரும் கேள்வி எழுகிறது. இவர்கள், சங்கமித்திரையையும் பௌத்தத்தையும் பெள்ளரசு மரத்தையும் கொண்டுவந்து குடியேற்றிய இடத்தை பார்க்கும் பொழுது இந்தக் காட்சிகளை பார்க்காமல் கண்களை மூடிக்கொள்வார்களா...?

அங்குள்ள நுணசை மகாவித்தியாலயத்தில் படையினர் பயிற்சி எடுக்கும் சத்தம் அகதிமுகாம் வரை கேட்கிறது. அங்கு சாதாரண தரம் வரை வகுப்புகள் நடைபெற்றிருக்கின்றன. அந்தப் பள்ளியில் படித்த பலர் இன்று முதியவர்களாக தங்கள் கதைகளை நினைவு கூர்ந்தார்கள். நுணசை மகாவித்தியாலயம் இப்




சங்கமித்திரையின் சிலையை சிராந்தி ராஜபக்ச திறந்த பொழுது அதை நினைவு கூறுவதற்காக நாட்டப்பட்ட நடுகல்-2009 ஜுன்

பொழுது மாதகல் சென்ஜோசப் மகா வித்தியாலயத்தில் இயங்குகிறது. "எங்களோடு எங்கள் பள்ளிக் கூடமும் அகதியாக இருக்கிறது" என்று அந்தப் பள்ளியின் அகதி ஒருவர் குறிப்பிட்டார்.

"எங்கள் பரம்பரையின் சொத்தே நிலம் ஒன்றுதான்" என்கிறார் அகதி முகாம் வாசியான லூர்துநாயகி. "நாங்கள் கஞ்சி குடிசசேனும் அங்கு தான் வாழ விரும்புகிறோம் என்பதை உலகத்தை நோக்கி சொல்லுகிறோம்" என்கிறார் அவர். "நாங்கள் ஓடுமட்டும் ஓடிக்கொண் டிருக்கிறோம். சிங்களக் குடியேற்றம் வெகு சுலபமாக மேற்கொள்ளப்படுகிறது. எங்கட அடுத்த தலைமுறை அறியாத... எங்கட நிலம்" என்று பெரும் கண்ணிரோடு பேசினார் மரியம்மா. தங்களின் தவிப்பை கொந்தளிப்பை சொல்ல முடியாமல் இருந்த மரியம்மாபோல் பல தாய்மார்கள் மாதகல் மண்ணில் கண்ணீர் விடுகிறார்கள்.

எங்கள் தேசம் அழகானது. எங்கள் தேசம் வளமானது. இந்தத் தேசத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை வலியது. பூர்வீகமானது. வடக்கு கிழக்கில் ஒரு துண்டு நிலத் தையும் இழக்க முடியாத நிலையில் ஈழத் தமிழர்கள் வாழ்கிறார்கள். ஆனால்,வடக்கு கிழக்கில் துண்டு துண்டுகளாக நாங்கள் நிலத்தை இழந்து கொண்டிருக்கிறோம். மாதகல் வரலாற்று ரீதியாக முக்கியமான நிலம் கடல் வளமும் கொண்ட அழகிய பிரதேசம். தனித்துவமான ஈழத்தமிழர்கள் வாழ்ந்த தனித்துவமான இந்த மண்ணை ஆக்கிரமித்துள்ள சிங்கள பௌத்த பேரினவாதமும் இராணுவ மயமும் நீக்கப்பட்டு அந்த மண்ணின் பூர்வீகக்குடிகள் அங்கு வாழ அனுமதிக்கப்பட வேண்டும். (முற்றும்)




வெள்ளரச மரக்கிளையுடன் சங்கமித்திரையின் தேர் அணி வந்து இறங்கியதை நினைவு கூறும் முகமாக நடப்பட்ட நடுகல்-2011 பெப்ரவரி

**தமிழ்மாறன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலயச்சூழலில்...

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் மஹோற்சவத்தின் பதின்ஐந்தாம் நாளாகிய இன்று செவ்வாய்க்கிழமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் குருவாய் வருவாய் எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவினை சைவப்புலவர் கு.பாலசண்முகன் ஆற்றுவார்.

பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வடலியடைப்பு இந்து இளைஞர் சங்க அறநெறிப்பாசாலை, ஏழாலை களவாவோடை நாகபூசணி அம்மன் அறநெறிப் பாடசாலை, மாணவர்களின் கலை நிகழ்வுகளும் விசேட நிகழ்வாக வசந்தகுமாரின் பண்ணிசையும் நடைபெறும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

நல்லூர் முருகன் ஆலய மஹோற்சவத்தின் பதின்ஐந்தாம் நாளாகிய இன்று செவ்வாய்க்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 7.45 மணி வரை பாட்டுக் கச்சேரி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பாட்டு சுஷ்மா சோமசேகர் (மலேசியா), வயலின் எஸ்.கோபிதாஸ், மிருதங்க்ம் கே.கஜன், கெஞ்சிரா பிரம்மஸ்ரீ சிவசுந்தரசர்மா ஆகியோர் அணிசெய் கலைஞர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

நல்லூர் முருகன் ஆலய மஹோற்சவத்தின் பதின்ஐந்தாம் நாளாகிய இன்று செவ்வாய்க்கிழமை நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் மாலை 6.30 மணிக்கு கந்தபுராணம் பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரை நடைபெறவுள்ளது.

இப்பேருரையில் அவுணர் தோற்றம் எனும் தலைப்பில் நல்லைக்குருமணியின் பிரதம வாரிசு கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா சொற்பொழிவாற்றுவார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

நல்லூர் முருகன் ஆலய மஹோற்சவத்தின் பதின்ஐந்தாம் நாளாகிய இன்று செவ்வாய்க்கிழமை நல்லூர் வடக்கு வீதியிலமைந்துள்ள நடராசா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை தெய்வீக பேருரைகளும் கலைநிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் நாவுக்கரசரின் நற்றமிழ் எனும் தலைப்பிலான சிறப்பு சொற்பொழிவினை சைவப்புவலர் ஏ.அனுசாந்தன் ஆற்றுவார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

நல்லூர் முருகன் ஆலய மஹோற்சவத்தின் பதின்ஐந்தாம் நாளாகிய இன்று செவ்வாய்க்கிழமை நல்லூர் மனோன்மணி அம்மன் ஆலய மண்டபத்தில் மாலை 6.45 மணிக்கு தாருகாவன முனிவர்களின் அகந்தையை அழித்தல் எனும் தலைப்பிலான இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் நாட்டிய நாடகம் மாணவர்களின் நடைபெறும். (அ-9)

# விதவைகளை இலக்குவைத்து வன்னியில் மோசடிக்கும்பல்!

## விழிப்புடன் இருக்குமாறு பெண்கள் நல அமைப்பு எச்சரிக்கை

(மல்லாவி)

வன்னிப்பகுதியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட விதவைப் பெண்களையும் மற்றும் யுவதிகளையும் இலக்கு வைத்து அரபு நாடுகளிலும் தென்பகுதியிலும் வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாக கூறி போலியான வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள் ஏமாற்றி வருவதாகவும் இதனால் பெண்களும் பெற்றோர்களும் விழிப்புடன் இருக்குமாறு வன்னி மாவட்ட பெண்கள் நல அமைப்பு எச்சரிக்கை செய்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவது, அண்மைக்காலமாக மாங்குளம், கிளிநொச்சி உட்பட வன்னியில் பல இடங்களில் போலி வெளிநாட்டு முகவர்களினால் பல பெண்களுக்கு ஆசை வார்த்தை கூறி கொழும்புக்கு அழைத்து செல்லப்பட்டு ஏமாற்றப்பட்டுள்ளனர்.

எனவே, பல்வேறு துன்பங்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் அன்புச் சகோதரிகளே நீங்கள் அரச அங்கீகாரம் பெறாத எந்தவொரு தனி நபரிடமும் ஏமாந்து உங்கள் வாழ்வை சிதைக்க வேண்டாம். அப்படியான எவரும் உங்களை அணுகினால் அருகில் உள்ள கிராமசேவகரிடமோ அல்லது பொலிஸ் நிலையங்களிலோ தகவல்களை வழங்கி உதவுமாறு அவ் அமைப்பினால் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-3-15)

# வவுனியா நகர் பிரச்சினை தொடர்பில் நகரசபை கவனம் செலுத்த வேண்டும்

## பயணிகள் மற்றும் வர்த்தகர்கள் கோரிக்கை

(பூந்தோட்டம்)

வவுனியா நகர மத்தியில் அமைந்துள்ள பொது மலசலகூடம் தொடர்பில் வவுனியா நகரசபையானது கவனம் செலுத்தி மக்கள் பாவனைக்கு ஏற்றவகையில் அமைக்க வேண்டுமென பயணிகளும் அப்பகுதி வர்த்தகர்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

வவுனியாவில்தற்போதுள்ளபொது மக்களின் தேவைக்கு ஏற்ற வகையில் பொது மலசலகூடங்கள் காணப்படவில்லை எனவும் மக்கள் குறைவாக இருந்த காலப்பகுதிகளில் வவுனியா நகரத்தில் 5 மலசலகூடங்கள் இருந்தபோதிலும் தற்போது வவுனியா நகருக்கு அதிகளவானவர்கள் வந்து போகும் நிலையில் இரண்டு மலசலகூடங்களே காணப்படுவதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை, நகர மத்தியில் இருக்கும் மலசலகூடத்தில் பணம் பெறுவது தொடர்பில் எவ்வித அறிவித்தலும் காணப்படாத நிலையில் அங்கு நிற்கும் சிலர் அதிகளவான பணத்தை அறவிடுவதாகவும் சிலர் பணம் இன்றி மலசலகூடத்தினை பயன்படுத்தினால் கெட்ட வார்த்தை பிரயோகங்களால் பேசுவதாகவும் தெரிவித்ததுடன் அப்பகுதியில் இருக்கும் வர்த்தக நிலையங்களில் பணியாற்றுபவர்கள் மலசலகூடத்தினை பயன்படுத்தினாலும் 10 ரூபாவுக்கு மேற்பட்ட பணத்தை அறவிடுவதாக தெரிவிக்கின்றனர்.

எனவே, இது தொடர்பில் வவுனியா நகரசபை கவனம் செலுத்தி போதுமான பொது மலசலகூடங்களை அமைக்க வேண்டுமென்பதுடன் தற்போது உள்ள பொதுமலசலகூடங்களில் நிலவும் இடர்பாடுகளை களைய வேண்டுமெனவும் கோரியுள்ளனர். (ந-9-266)

# நல்லூரான் திருவடிக்கு

## இன்று பதினைந்தாம் திருவிழா



### காத்திடுவாய் கந்தா



நல்லைக் குமரா
பக்தர்களின் குறை தீர்க்க
வள்ளி தெய்வயானையுடன்
வண்ணமயிலேறி
வாஞ்சையுடனே
வந்து
எம்மைக் காத்திடுக

*ப.காயத்திரி, மட்டுவில்.*

### காத்திடுவாய் சண்முகா

யாமிருக்க பயம் ஏன்
என்ற வாசகத்தை
உலகோர்க்கு உன்னதமாய்
உணர்த்திய பரம்பொருளே
ஓடோடி வந்து எமைக் காத்திடுவாய்

*வி.கஜந்தினி, யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி.*

### அம்சம்(மோ)?



தொல்லுலகம் போற்றிய
உன்னை–இன்று
நல்லுலகம் போற்றுகின்றதே–உன்
முருகா என்ற வார்த்தை
முத்தியடையச் செய்கிறது
சண்முகா என்ற வார்த்தை
சங்கடங்களைத் தீர்க்கிறது
கந்தா என்ற வார்த்தை– எம்
மனக்கந்தைகளை நீக்குகின்றது
உன் பெயருக்குள் இத்தனை
அம்சமோ முருகா?

*இ.தீபனா, புங்குடுதீவு–2.*

### நல்லூரான் பதம் போற்றி



நல்லைப் பதியமர்ந்து
நாடுவோர் இறைஞ்சி வேண்ட
நல்வாழ்வு அளித்திடும்–எங்கள்
நல்லூரான் பதம் போற்றி

வேல் மூலப் பொருளாய்
ஆதிமூலத்தில் அமைந்த
ஆதி சங்கரன் மைந்தா– எம்
ஆறுமுகா போற்றி போற்றி

போற்றி வணங்குகின்றோம்– எமக்கு
வெற்றி தந்திடுவாய்
வேலெடுத்து வந்து– எம்
வேதனை தீர்த்திடுவாய்

*மு.கேசவன், தொல்புரம்.*

### நல்லூரான் புகழ்பாட வாரீர்!

எந்நாளும் நாம் கையேந்தும் நல்லூரான்
அன்பர்தம் அல்லல் போக்கும் மருகன்
பொன் பூண்ட மார்புடைய கந்தன்
தான் அணிந்த வெண் சதங்கை ஒலி வேலோன்
ஏன் இந்த ஔவைக்கு நெல்லிக்கனி ஈந்தான்
பின் மாங்கனி விரும்பியே மனம் நொந்தான்
தேன் பழம் இனியே பழனிமலை ஏகினான்
துன்பத்தால் கந்தவேள் கோமண ஆண்டியானான்!

*பிரணவநாதன் ஔவை, அரியாலை.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# செய்ய முடியாததை செய்து காட்டிய தெனாலிராமன்

கிருஷ்ணதேவராயரின் மாபெரும் அரச சபை, மந்திரி பிரதானிகள், கவிஞர்கள், புலவர்கள், அரசாங்க அதிகாரிகள் மற்றும் பொதுமக்களுடன் நிரம்பி இருந்தது. சபையில் ராஜகுருவும் கம்பீரமாக அமர்ந்திருந்தார்.

அந்த சமயத்தில் ராஜகுருவுக்குத் தெரிந்த ஒரு ஜாலவித்தைக்காரன் அரச சபைக்குள் நுழைந்து நேராக கிருஷ்ணதேவராயர் அமர்ந்திருந்த சிம்மாசனத்துக்கு அருகே சென்று அவரை மிகமிக பணிவுடன் வணங்கி நின்றான்.

தன்னை பணிவுடன் வணங்கி நின்றவனைப் பார்த்த கிருஷ்ணதேவராயர், அவனை யார் என்று கேட்டார். அரசர் ஜால வித்தைக்காரனுடன் பேசிக் கொண்டிருந்ததைக் கவனித்த ராஜகுரு, உடனே அரசர் அருகில் சென்று, மன்னர் மன்னா! இந்த ஜாலவித்தைக்காரன் மிகவும் கெட்டிக்காரன்.

இவனை எனக்குப் பல ஆண்டுகளாகத் தெரியும். இவன் ஜால வித்தைகளைக் கண்டு களிக்காத அரசர்களே தென்னாட்டில் கிடையாது என்று ஜாலவித்தைக்காரனை வானளாவப் புகழ்ந்து பேசினார்.

கிருஷ்ணதேவராயரும் ஜாலவித்தைக்காரனை அவனுக்குத் தெரிந்த வித்தைகளைச் செய்து காட்டச் சொன்னார்.

ஜாலவித்தைக்காரன் தனக்குத் தெரி ந்த அனைத்து வித்தைகளையும் திறமை யாகச் செய்து காட்டி மன்னரை மகிழ்வி த்தான்.

மன்னரும் ஜாலவித்தைக்காரன் செய்து காட்டிய வித்தைகளில் தனக்குப் பிடித்த சிலவற்றை மீண்டும் ஒருமுறை செய்து காட்டச் சொன்னார்.

ஜாலவித்தைக்காரன் மேல் மன்னர் கிருஷ்ணதேவராயருக்கு ஏற்பட்ட கவர்ச்சியை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள நினைத்த ராஜகுரு, ஜாலவித்தைக்காரனை தனியே அழைத்து அவனிடம் ஏதோ இரகசியமாகப் பேசினார்.

ஜாலவித்தைக்காரனும் அரசரை வணங்கி மன்னர் மன்னா! இதுவரை நான் செய்து காட்டிய அனைத்து வித்தைகளையும் நீங்கள் உங்கள் உள்ளம் குளிர பார்த்து ரசித்து என்னைப் பாராட்டியதோடு கற்றறிந்த சான்றோர்கள் பலர் வீற்றிருக்கும் இந்த சபையில் எனக்குப் பல பரிசுகள் வழங்கிக் கௌரவித்தீர்கள்.

உங்கள் பாராட்டுக்கள் என்னை மெய்சிலிர்க்க வைத்து விட்டது. மன்னர் மன்னா! நீங்கள் எனக்கு ஒரு சிறு உதவி செய்ய வேண்டும் என்று மிகவும் பணிவாக கேட்டான். மன்னரும் ஜாலவித்தைக்காரனைப் பார்த்து அவனுக்கு என்ன உதவி வேண்டும் என்று கேட்டார்.

ஜாலவித்தைக்காரனும் அரசரைப் பார்த்து மன்னா! நான் இதுவரை சான்றோர்கள் பலர் வீற்றிருக்கும் அரசசபையில் பல ஜாலவித்தைகளை செய்து காட்டினேன்.


என்னைப் போல் உங்கள் நாட்டில் ஜால வித்தைகள் செய்யக்கூடியவர்கள் யாராவது இருந்தால் என்னிடம் வந்து போட்டி போடச் சொல்லுங்கள்.

உங்கள் நாட்டு ஜாலவித்தைக்காரன் செய்து காட்டும் வித்தையை நான் செய்து காட்டிவிட்டால் நீங்கள் எனக்கு ஆயிரம் பொற்காசுகள் தர வேண்டும்.

நான் செய்யத் தவறிவிட்டால் நான் உங்கள் நாட்டு ஜாலவித்தைக்காரனுக்கு ஆயிரம் பொற்காசுகள் அன்பளிப்பாக கொடுத்து விடுகிறேன் என்று சற்று ஆணவமாகப் பேசினான்.

கிருஷ்ணதேவராயர் சபையில் இருந்த அனைவரையும் ஒருமுறை பார்த்தார். சபையில் அமர்ந்திருந்த அனைவரும் மன்னரின் பார்வை தங்கள்மேல் படாதவாறு பார்த்துக் கொண்டார்கள்.

ஜாலவித்தைக்காரன் போட்ட சவால் மன்னர் கிருஷ்ணதேவராயரைக் கவலையடை



யச் செய்துவிட்டது.

என்ன செய்வது என்று புரியாத நிலையில் கவலை தோய்ந்த முகத்துடன் அமர்ந்திருந்த கிருஷ்ணதேவராயர் அரசசபைக்குள் நுழைந்த விகடகவி தெனாலிராமனைப் பார்த்ததும் எல்லையில்லா மகிழ்ச்சி அடைந்தார்.

அவர் தெனாலிராமனை அன்புடன் அழைத்து தனக்கு அருகில் இருந்த ஆசனத்தில் அமரச் சொன்னார். மன்னர் அளித்த ஆசனத்தில் அமர்ந்த விகடகவி தெனாலிராமன் மன்னர் தனக்கு அளிக்கும் மரியாதை உண்மையா அல்லது வெறும் கனவா என்று சோதித்துப் பார்க்க தன்னைத் தானே கிள்ளிப் பார்த்துக் கொண்டான்.

கிள்ளியதால் ஏற்பட்ட வலியை உணர்ந்த தெனாலிராமன் மன்னர் தனக்கு அளித்த கௌரவம் உண்மை என்று உணர்ந்தான். அவன் அரசரைப் பார்த்து, அரசே! நான் தங்கள் ஊழியன், நீங்கள் எனக்கு எதைச் செய்ய சொல்லிக் கட்டளையிட்டாலும் அதைச் செய்து முடிக்க ஆவலாக உள்ளேன் என்று கூறினான்.

அரசரும் தெனாலிராமனைப் பார்த்து ராமா! நீ வருவதற்கு சற்று முன்னால் ராஜகுருவுக்கு தெரிந்த ஒரு ஜாலவித்தைக்காரன் பல விசித்திரமான வித்தைகளைச் செய்து காட்டி எங்களை எல்லாம் மகிழ்வித்தான்.

எங்களையெல்லாம் நீண்ட நேரம் களிப்புறச் செய்த அவன் கடைசியில் ஒரு போட்டியினையும் அறிவித்து விட்டான்.

அவன் அறிவித்த படி அவனைப் போல் ஜாலவித்தைகள் காட்டக்கூடிய வித்தைக்காரன் நம் நாட்டில் யாராவது இருந்தால் அவனைப் போல் வித்தைகள் காட்டும்படி சவால் விட்டுள்ளான்.

மேலும் அவன் நம் நாட்டு ஜாலவித்தைக்காரன் செய்யும் வித்தையை செய்து காட்டி விட்டால் அரசனாகிய நான் அவனுக்கு ஆயிரம் பொற்காசுகள் தர வேண்டும் என்றும் நம் நாட்டு ஜாலவித்தைக்காரன் செய்து காட்டும் வித்தையை அவன் செய்யாவிட்டால் அவனுடைய சொந்தப் பணத்தில் இருந்து ஆயிரம் பொற்காசுகளை நம் நாட்டு ஜாலவித்தைக்காரனுக்குத் தருவதாக கூறுகிறான்.

தெனாலிராமா! நீதான் எப்படியாவது இந்த நாட்டின் பெருமையையும் மானத்தையும் காப்பாற்ற வேண்டும் என்று சற்று வருத்தத்துடன் கூறினார் கிருஷ்ணதேவராயர்.

கிருஷ்ணதேவராயர் கூறியதைக் கேட்ட தெனாலிராமன், அரசரை பார்த்து, மன்னா! தாங்கள் எந்தவித கவலை யும் படாமல் எப்போதும் போல் மகிழ்ச்சி யாக இருங்கள்.

போட்டிக்கு அழைத்த ஜாலவித்தைக்காரனை அவ னுடைய பணத்தில் இருந்து ஆயிரம் பொற்காசுகளை இழக்கச் செய்கிறேன் என்று கூறி னான்.

ஆணவத்தோடு ராஜகுருவின் அருகில் அமர்ந்திருந்த ஜாலவித்தைக்காரனை போட்டிக்கு அழைத்தான் தெனாலிராமன். தெனாலிராமன் அழைக்கவும் ஜாலவித்தைக்காரன் சற்று மிடுக்காக நடந்து வந்தான்.

## தெனாலிராமன் கதைகள்

அருகில் வந்த ஜாலவித்தைக்காரனைப் பார்த்த தெனாலிராமன் போட்டிக்குத் தயாரா என்று கேட்டான். ஜாலவித்தைக்காரனும் தயார் என்று கூறினான்.

அரசசபையில் இருந்த அனைவரையும் ஒருமுறை பார்த்த தெனாலிராமன் சபையோர்களே! நான் இப்போது செய்யப் போகும் வித்தையை என் எதிரில் நிற்கும் அயல் நாட்டு ஜாலவித்தைக்காரர் செய்துகாட்டிவிட்டால் அரசர் ஆயிரம் பொற்காசுகள் அவருக்குத் தருவார்.

செய்யத் தவறினால் அயல் நாட்டு ஜாலவித்தைக்காரர் எனக்கு ஆயிரம் பொற்காசுகள் அவருடைய பணத்தில் இருந்து தர வேண்டும் இதுதான் போட்டி.

ஆகவே, நீங்கள் அனைவரும் நான் செய்யப்போகும் வித்தையைக் கூர்ந்து கவனியுங்கள் என்று கூறினான் தெனாலிராமன்.

சபையில் அமர்ந்திருந்த அனைவரும் கண் இமைகளை மூடாமல் தெனாலிராமன் காட்டப்போகும் வித்தையைப் பார்க்க ஆவலோடு காத்தீருந்தார்கள்.

தெனாலிராமன் அரசசபைக்கு வெளியே சென்று அரண்மனைத் தோட்டத்தில் இருந்த மணற்குவியலில் இருந்து சிறிதளவு மணலை கையில் எடுத்துக் கொண்டு வந்தவன் சட்டென்று அயல்நாட்டு ஜால வித்தைக்காரனைப் பார்த்து ஐயா! நான் இப்போது கண்ணை மூடிக்கொண்டு செய்யப்போகும் ஜாலவித்தையை நீங்கள் கண்களைத் திறந்து கொண்டு செய்ய வேண்டும் இது தான் போட்டி.

நீங்கள் செய்யத் தவறினால் தோற்றதாக ஒப்புக் கொண்டு உங்கள் பணத்தில் இருந்து நீங்கள் கூறியபடி எனக்கு ஆயிரம் பொற்காசுகள் தரவேண்டும் என்று கூறி சற்றும் தாமதிக்காமல் சட்டென்று தன் கையில் இருந்த மணலை மூடிய கண்களின் மேல் கொட்டினான்.

தெனாலிராமன் செய்த செயலைப் பார்த்த ஜாலவித்தைக்காரன் ஆடிப்போய் விட்டான்.

தெனாலிராமன் செய்ததைப் போல மணலைக் கண்களைத் திறந்து கொண்டு செய்தால் கண்கள் பார்வை இழக்க நேரிடும் என்று உணர்ந்த ஜால வித்தைக்காரன் தெனாலிராமனைப் பார்த்து ஐயா! நான் என் தோல்வியை ஒப்புக் கொள்கிறேன்.

நீங்கள் செய்தது போல மணலைக் கண்களைத் திறந்து கொண்டு என்னால் செய்ய முடியாது.

நான் கூறியபடி நீங்கள் செய்து காட்டிய வித்தையை நான் செய்யத் தவறியதால் நான் தங்கள் மன்னருக்கு வாக்களித்தபடி ஆயிரம் பொற்காசுகளைத் தந்து விடுகிறேன் என்று கூறி ஆயிரம் பொற்காசுகளை தன்னிடம் இருந்து தெனாலிராமனுக்குக் கொடுத்து விட்டு தலை குனிந்தபடி அரசசபையை விட்டு வெளியே சென்று விட்டான்.

ஜாலவித்தைக்காரன் வெளியே சென்றதும் கிருஷ்ணதேவராயர் தெனாலிராமனைத் தன் அருகே அழைத்து தெனாலிராமா! உண்மையிலேயே நீ பெரிய அறிவாளி தான்.

அரசாங்க கஜானாவில் இருந்து அளிக்க வேண்டிய ஆயிரம் பொற்காசுகளைக் காப்பாற்றி விட்டாய்.

அது மட்டுமல்லாமல் உன்னுடைய திறமைக்குப் பரிசாக ஆயிரம் பொற்காசுகளை பரிசாகப் பெற்றுக் கொண் டாய்.

நம் நாட்டின் பெருமையை காப்பாற்றிய உனக்கு அரசன் என்ற முறையில் நான் உனக்கு ஆயிரம் பொற்காசுகள் தருகிறேன் பெற்றுக்கொள் என்று கூறி ஆயிரம் பொற்காசுகளைத் தெனாலிராமனுக்கு அளித்தார் கிருஷ்ணதேவராயர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியாக இருந்தவேளை குடும்பஸ்தர் வெட்டிக்கொலை

## ஊரெழுவில் பயங்கரம்

(யாழ்ப்பாணம்)

தனியாக வீட்டில் இருந்த குடும்பஸ்தர் நடுநிசியில் கோடரியால் வெட்டிக்கொலை செய்யப்பட்டு அவ்வீடும் தீமூட்டி எரிக்கப்பட்டு உள்ளது.

இக்கொடூர கொலைச் சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு 12.30 மணியளவில் ஊரெழு பொக்கணைப் பகுதியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

இதில் காரைநகரினைச் சொந்த இடமாகவும் வட்டக்கச்சியில் வசித்து வருபவரும் 6 பிள்ளைகளின் தந்தையாருமான முருகேசு சிவராஜா (வயது 45) என்பவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

இக்கொலைச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த குடும்பஸ்தரும் அவருடைய நண்பரும் நல்லூர் பகுதியில் மேசன் வேலை செய்வதற்காக வட்டக்கச்சியில் இருந்து நேற்று முன்தினம் காலை யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

இவர்கள் இருவரும் இங்கு தங்குவதற்காக குடும்பஸ்தரோடு வந்த நண்பரின் அக்காவின் வீட்டிற்குச் சென்றுள்ளனர்.

அங்கு சென்ற இருவரும் வெளியே உணவருந்தி விட்டு மாலையாகியதும் வீட்டிற்கு அருகிலுள்ள முருகன் ஆலயத்தில் நடைபெற்ற இசை நிகழ்ச்சிக்கு குடும்பஸ்தரின் நண்பர் தனியே சென்றுள்ளார்.

குடும்பஸ்தர் தன்னோடு வந்திருந்த நண்பரின் அக்காவின் வீட்டிற்குச் சென்றுள்ளார். வீட்டில் உள்ளவர்கள் அனைவரும் இசை நிகழ்ச்சிக்கு சென்றிருந்தமையால் குடும்பஸ்தர் தன்பாட்டில் அங்கேயே தூங்கியுள்ளார்.

எனினும் நள்ளிரவு 12.30 மணியளவில் குறித்த வீடு பற்றி எரிவதனைக் கண்ட அயலவர்கள் நெருப்பினை அணைத்து வீட்டினுள் புகுந்தபோது குறித்த குடும்பஸ்தர் குப்புறப் புறமாக கழுத்தில் கோடரியால் வெட்டப்பட்ட நிலையில் இரத்த வெள்ளத்தில் கிடந்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு ஆறுதலாக அதிகாலை வேளை விரைந்த பொலிஸார் விசாரணைகளினை மேற்கொண்டதோடு யாழ்.நீதவான் மா.கணேசராசாவும் சடலத்தை நேரில் சென்று பார்வையிட்டார்.

சடலம் பின்னர் நேற்று மதியம் 12 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த வீட்டினைச் சுற்றி பொலிஸார் தேடுதல் நடத்தியதில் இரத்தக்கறை படிந்த நிலையில் கைக்கோடரி ஒன்று பற்றைக்குள் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் தெரிவிக்கையில்,

குறித்த வீட்டில் இருந்த கணவன் மனைவிக்கிடையே ஏற்கனவே முரண்பாடு இருந்தது என்றும் அவரது கணவர் குறித்த வீட்டில் 3 நாட்களுக்கு மேலாக இல்லாத நிலையிலும் மற்றும் மனைவி, பிள்ளைகள் கோவில் இசை நிகழ்ச்சிக்கு சென்ற சமயம் பார்த்தே இக்கொலை இடம்பெற்றுள்ளது.

எனினும் இவரோடு யாழ்.வந்த நண்பரினையும் கைது செய்து விசாரணை செய்துள்ளதோடு அவ்வீட்டின் உரிமையாளரினையும் கைது செய்து விசாரணை செய்ய உள்ளோம் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-4)

# நேர்முகப்பரீட்சை நாளை நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு LOGO திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப உத்தியோகத்தர்/மொழிபெயர்ப்பாளர் பதவிக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் தனிப்பட்ட முறையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார்.

இந்நேர்முகப் பரீட்சை நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெறும்.

விண்ணப்பதாரிகள் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை, வதிவிட குண்நல அத்தாட்சிப் பத்திரம் (கிராம உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்டது), பல்கலைக்கழக பட்டச்சான்றிதழ் (மொழிபெயர்ப்பாளர்), கல்வித்தகைமைச் சான்றிதழ் என்பவற்றின் மூலப்பிரதிகள் அவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் சமுகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (ந-9)




# காமுகனை வெளியேற்றக் கோரி காரைநகரில் ஆர்ப்பாட்டம்

(காரைநகர்)

பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்திய காமுகனை கிராமத்தில் இருந்து வெளியேறுமாறு காரைநகர் மத்தி கிராம சேவையாளர் அலுவலகத்தை முற்றுகையிட்ட பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவது, காரை மத்தி கிராம சேவையாளர் அலுவலகத்திற்கு முன் நேற்றுக்காலை 9 மணியளவில் சுமார் நூற்றுக்கு மேற்பட்ட பொதுமக்கள் முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் கருத்து தெரிவிக்கும் போர்து ,கடந்த 4 ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை காரை மத்தியில் வசிக்கும் இரண்டு பிள்ளைகளின் தாயான விதவைப் பெண்ணை கத்தி முனையில் பலாத்காரப்படுத்தி காயப்படுத்தியுள்ளார். இதனையடுத்து ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை தொடர்ந்து குறித்த நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் கடந்த காலங்களில் பல வன்முறைச் சம்பவங்களிலும் ஈடுபட்டு வந்துள்ளார்.

இச்சம்பவங்களால் எமது கிராமத்தில் தொடர்ந்து அமைதிக்கும் கலாசாரத்திற்கும் பங்கம் ஏற்படுத்தி வருகிறது. எனவே குறித்த நபரை கிராமத்தைவிட்டு உடனடியாக வெளியேறுமாறு அவர்கள் தெரிவித்தனர். ஆர்ப்பாட்டத்தின்போது அங்கு சென்ற காரைநகர் பிரதேச செயலக அதிகாரிகள் இச்சம்பவம் குறித்து தாம் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததைத் தொடர்ந்து பொதுமக்கள் கலைந்துசென்றனர். இச்சம்பவத்தை வலியுறுத்தி காரைநகர் பிரதேச செயலகத்திற்கு 100ற்கும் மேற்பட்ட பொதுமக்களின் கையொப்பத்துடன் மகஜர் ஒன்றினைக் கையளித்துள்ளனர். (ந-3.246)

# ஆலயங்களின் சமயப் பணிகளுடன் சமூகப் பணியும் இணைய வேண்டும்

## மாநகர சபை ஆணையாளர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

ஆலயங்கள் வெறுமனவே சமயப் பணிகளை முன்னெடுப்பதுடன் நின்றுவிடாது சமூகப் பணிகளையும் செய்ய வேண்டும் என யாழ். மாநகர சபை ஆணையாளர் செ. பிரணவநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவின் 20 ஆவது வெளியீடான நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழா நேற்று நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு தலைமையுரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் வெளிநாட்டவர்களின் ஆதிக்கம் உருவாக முன்பு கோவில்கள் பல சமூகப் தொண்டுகளை செய்து வந்தன.

காலப்போக்கில் தொண்டு நிறுவனங்களின் வருகையினால் ஆலயங்கள் வெறுமனவே சமயப் பணிகளைச் செய்யும் நிலையங்களாக மாறத் தொடங்கி விட்டன.

இதனால் ஆலயங்கள் சமூகப் பணிகளைச் செய்ய தவறிவிட்டன என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. சமயப் பணிகளுடன் ஆலயங்கள் சமூகப் பணிகளையும் செய்ய வேண்டும்.

இருக்கும் ஆலயங்களை இடித்து அதனை விஸ்தீரணம் செய்யும் நடவடிக்கையில் ஆலய நிர்வாகத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ். குடாநாட்டிலுள்ள ஒவ்வொரு ஆலயங்களிலும் உள்ள நிதியை கணக்கிட்டுப் பார்த்தால் அரசாங்கத்திடம் இருக்கும் நிதியுடன் ஒப்பிடும் அளவிற்கு உள்ளன.

எனவே ஆலயங்கள் சமயப் பணியுடன் சமூகப் பணியையும் முன்னெடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளை விடுப்பதோடு இம்முறை யாழ். விருதிற்கு நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய அமுதசுரபி அன்னதான சபை தேர்ந்தெடுக்கப்பட்டு விருது வழங்குவதற்கு முக்கிய காரணம் சமயப் பணியுடன் சமூகப் பணியையும் மேற் கொண்டு வருவதே என அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

# மனைவியை கொடூரமாக தாக்கியவரும் மருந்து கட்டியவரும் விளக்கமறியலில்

மனைவியை இருட்டறையில் தாக்கியவர் எழுவைதீவை சேர்ந்தவர் என்றும் அவருக்கு திருட்டுத்தனமாக மருந்து கட்டியவர் எழுவைதீவை மருத்துவமனையின் சாதாரண தொழிலாளியும் என ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தனது மனைவியினை மிக கொடூரமான முறையில் என்புகள் வெளியே தெரியும் வகையில் அவரது கணவர் தாக்கியுள்ளார். இக்கொடூர சம்பவத்தால் தீவுப்பகுதி மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இவ்வாறு மிக மோசமான நிலையில் தனது மனைவியை ஏன் தாக்கினார் என பொலிஸார் விசாரணை செய்து வருவதோடு குறித்த கணவர் தொடர்பாகவும் பொலிஸ் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் குறித்த கணவரும் எழுவைதீவு வைத்தியசாலையின் பணியாளரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-4)





யா/ புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவர் ஒன்றுகூடலை முன்னிட்டு கல்லூரியின் பொற்காலம் என வர்ணிக்கப்படும் 1936- 1954 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கல்லூரியில் புகழ்பூத்த அதிபராகக் கடமையாற்றிய அருட்பணி ரி.எம்.எப்.லோங் அடிகளாரின் சிலை அமைந்துள்ள யாழ்.பொதுநூலக முன்றலிலிருந்து கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகி கல்லூரி வளாகத்தில் நிறைவடைந்த பேருலாவின் போது....

(படங்கள்: அலுவலகச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்டி அடிப்பாரா ஹக்கீம்?

# அரசின் தந்திரோபாயம் குறித்து ஆளும் கட்சிக்குள் முரண்பாடு!

கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தனித்து போட்டியிடுவது தொடர்பில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்குள் முரண்பாடான நிலைமை ஏற்பட்டுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஓர் அரசியல் சந்தர்ப்பவாதி என ஆளும்' கட்சி பிரதி அமைச்சர் பைசர் முஸ்தபா குற்றம் சுமத்தியுள்ளார்.

தேசிய பிரச்சினைகளில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் காய் நகர்த்தல்களில் ஈடுபட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஆளும் கட்சிக்கு வாக்களித்தலானது முஸ்லிம் பள்ளிவாசல்களை இடிப்பதற்காக அளிக்கப்படும் வாக்குகள் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அண்மையில் குற்றம் சுமத்தியுள்ளதாக பிரதி அமைச்சர் பைசர் முஸ்தபா சுட்டிக்காட்டியுள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் ஆளும் கூட்டணியில் அங்கம் வகித்துக் கொண்டே அரசாங்கத்தை கடுமையாக தாக்கி வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

இனவாத அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுவரும் சகல தேர்தல் பிரசாரங்களையும் தமிழ்பேசும் மக்கள் நிராகரிக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாணத்தில் தனித்து போட்டியிட எடுத்த தீர்மானமானது அரசாங்கத்தின் ஓர் தந்திரோபாயம் என அமைச்சர் ராஜித சேனாரட்ன விபரித்துள்ளார்.

தேர்தலில் தனித்தனியாக போட்டியிட்டாலும் ஆளும் கட்சிக்கும் முஸ்லிம் காங்கிரஸிற்கும் இடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். பொதுவான பிரச்சினைகளின் போது இரு தரப்பிற்கும் இடையில் இணக்கப்பாடு காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மஹாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்ற ஒரே ஊடகவியலாளர் சந்திப்பில் இருவரும் இவ்வாறான கருத்துக்களை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-2)

## சிகிரியாவில் தொடர்கிறது குளவித் தாக்குதல்

சிகிரியாவிற்கு சுற்றுலாப் பயணம் மேற்கொண்ட சிலர் குளவித் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர். இதன்போது 17 பேர் கொண்ட குழு ஒன்றே தாக்குதலுக்கு உள்ளாகியிருப்பதாகவும் அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்களில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இருவரும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் மலேசியா மற்றும் பிரித்தானிய நாட்டவர்கள் என தெரியவந்துள்ளது. (ந-2)

## தனியார் பஸ்களுக்கு வருகிறது "சீசன் டிக்கெட்"

செப்டெம்பர் மாத இறுதிக்குள் தனியார் பேருந்துகளுக்கான முற்கொடுப்பனவு அட்டை (சீசன் டிக்கெட்) முறையை அறிமுகப்படுத்தவுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்குத் தேவையான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் ரொஷன் குணவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

தனியார் பேருந்துகளுக்கான முற்கொடுப்பனவு அட்டைகளை அச்சிடுவதற்காக விலை மனு கோரப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இந்தத் திட்டத்தின் மூலம் பஸ் சேவைகளை ஒழுங்குபடுத்தல் உள்ளிட்ட பல நன்மைகள் ஏற்படும் என பயணிகள் போக்குவரத்து ஆணைக்குழு நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (ந-2)

## இலங்கையின் கழுத்தில் "சீபா" சுருக்கிட்டு விடும்

### அச்சம் தெரிவிக்கிறது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

இந்தியாவுடன் செய்து கொள்ளப்படவுள்ள பொருளாதார ஒத்துழைப்புக்கான சீபா உடன்படிக்கை என்பது இலங்கை தானே தனது கழுத்தில் சுருக்கிட்டு கொள்வதற்கு ஈடானது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

எவர் எவ்வாறான சொர்க்க கதைகளை கூறினாலும் இந்த ஆபத்தான உடன்படிக்கையை கைச்சாத்திடுவது குறித்து அரசாங்கம் ஆழமாக சிந்திக்க வேண்டும் என அந்த இயக்கத்தின் பொதுச் செயலாளர் மருத்துவர் வசந்த பண்டார குறிப்பிட்டுள்ளார்.

சீபா உடன்படிக்கை என்பது மிகவும் பாரதூரமான உடன்படிக்கையாகும். பொருட்கள், சேவைகள், முதலீடுகள் என அனைத்து விதமான துறைகளை இந்தியா கைப்பற்றிக் கொள்ளக்கூடிய உடன்படிக்கையாக சீபா உடன்படிக்கை உள்ளது.

இதற்கு முன்னர் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படாததால் குறைந்த அதிகாரங்களை கொண்ட சாட்டிஸ் என்ற உடன்படிக்கையை சேவை துறையை மாத்திரம் இலக்கு வைத்து கொண்டுவர முயற்சிக்கப்பட்டது.

இந்தநிலையில் மீண்டும் சீபா உடன்படிக்கை கொண்டு வருவது சாதாரண விடயமல்ல. இதனை எதிர்க்கும் தேசிய புத்திஜீவிகளும் வர்த்தகர்களும் முன்வந்து குரல் கொடுக்க வேண்டும்.

இந்தியா என்ற பெரிய வர்த்தக சந்தைக்குள் இலங்கை முதலீட்டாளர்கள் பிரவேசிப்பதற்கு பதிலாக சிறிய வர்த்தக சந்தையான இலங்கையை சூறையாடவே அவர்கள் முயற்சிக்கின்றனர் எனவும் அவர் கூறியுள்ளார். (ந-2)

## உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் நாற்பது பேருக்கு எதிராக வழக்கு

பல்வேறு குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் பிரதேச சபைத் தலைவர்கள் உள்ளிட்ட நாற்பது உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

தாக்குதல்கள், கொலைகள், இலஞ்ச ஊழல், அச்சுறுத்தல்கள், பாலியல் வன்முறை, சிறுவர் துஷ்பிரயோகம், காணி அபகரிப்பு உள்ளிட்ட பல்வேறு குற்றச் சாட்டுகளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக மேலும் சில பிரதேச அரசியல்வாதிகளுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் பொலிஸார் அறிவித்துள்ளனர். (2-9)

## 23 ஆவது பிறந்தநாளில் மூன்றாம் ஆண்டு நினைவில்

### சிறினிவாசன் சுபோதினி

அன்பு காட்சி 07 . 08 . 1989

சாகாமல் இருப்பதென்பது சாத்தியமில்லை தான்
ஆனால் நீ வாழாமல் போனதேன்...
ஆறுதல் சொல்ல ஆண்டவனே வந்தாலும்
உன் அன்பை இனி யார் தருவார்
மணமாலை அணிந்து நீ வீதியுலா வருவாய் என்றிருக்க
ஒற்றை மலர்மாலையோடு விடைபெற்று போனாயே...
இதயம் எல்லாம் நீ நிறைந்தாய் எங்கள் இன்பம்
எல்லாம் நீயென்றே வளர்ந்தாய்
உன்னோடு எங்கள் குடும்பம் பட்டமரம் ஆனதுவே...
கண்ணீரோடு இந்த வாழ்நாள் தொலைந்தே போகுதே...
புயலைக்கூட பூவிதழ் தாங்கும்
இடியென்று சொன்னால் என்னாவது?

தனிக்கவிட்டு 20 . 01 . 2009



(127)

4 ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

என்றும் உன் நினைவோடு
அப்பா, அம்மா, தம்பி, அண்ணன்மார்.

## பாடசாலை மாணவர்கள் மத்தியில் கட்டுக்கடங்காத நிலையில் கைத்தொலைபேசி பாவனை

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்டத்தில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் கைத்தொலைபேசியின் பாவனை அதிகரித்திருப்பதன் காரணமாக பாடசாலைகளுக்கு அவற்றை கொண்டு செல்வதற்கு தடை விதிக்க வேண்டுமென வவுனியா மாவட்ட புத்திஜீவிகள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் வவுனியா மாவட்ட சிறுவர் துஷ்பிரயோகத்தில் முன்னிலை வகிப்பதற்கு இவ்வாறான கைத்தொலைபேசி பாவனையும் காரணமாக அமைவதாக தெரிவித்த அவர்கள், இது தொடர்பில் கல்வித் திணைக்களம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு கைத்தொலைபேசி பாவனையை பாடசாலைகளுக்குள் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே தடுத்திருந்தபோதிலும் இது ஒருசில பாடசாலைகளை தவிர ஏனையவற்றில் பயனளிக்கவில்லை எனவும் தெரிவித்தனர்.

இதேவேளை தனியார் கல்வி நிறுவனங்களில் இவ்வாறான கைத்தொலைபேசி பாவனை அதிகரித்திருப்பதுடன் அவற்றை கட்டுப்படுத்துவதற்கு தனியார் கல்வி நிறுவனங்கள் நடவடிக்கை எடுப்பதில்லை எனவும் அது தொடர்பில் பெற்றோருக்கும் விழிப்புணர்வில்லை எனவும் புத்திஜீவிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

அத்துடன் தமது பிள்ளைகளுக்கு நன்மை தரும் பயன்பாடுகளுக்கு என தொலைபேசிகளை பெற்றோர் வழங்கியிருந்தபோதிலும் அவர்கள் அதனை எதற்காக பயன்படுத்துகின்றனர் என்பது தொடர்பில் பரிசோதிப்பதில்லை என்பதனாலும் பல்வேறு துஷ்பிரயோகங்கள் நடப்பதற்கு வழி வகுப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ந-9-266)

## இளம் பாடகர் விபத்தில் பலி

(கொழும்பு)

மட்டக்களப்பிலிருந்து திருகோணமலைக்கு சென்று கொண்டிருந்தபோது தோப்பூர் பிரதேசத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சீடா நிறுவனத்துக்குச் சொந்தமான பாரஊர்தி ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டதில் இளம்பாடகர் ஒருவர் பலியாகியுள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 7.30 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்தில் மட்டு. கல்லடியை சேர்ந்த இளஞ்செழியன் வரதராஜன் (வயது 34) எனும் இளம் குடும்பஸ்தரே பலியானவராவார்.

படுகாயங்களுடன் தோப்பூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். மட்டக்களப்பு, திருகோணமலையிலுள்ள பிரபல இசைக்குழுக்களில் பாடகராக பரிணமித்த இவர் ஒரு குழந்தைக்கு தந்தையாவார். (ந-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதமான விஷயங்களை உணர்ச்சியின்றி கையாளும் வேஷதாரிகளே பெரிய நாத்திகர்கள் .
- பேக்கன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# அபிவிருத்தியில் ஆசையிருந்தால் ஜனாதிபதி மகிந்தவுக்கு ஆதரவளியுங்கள்

## யாழில் வைத்து நிபந்தனை விதிக்கிறார் அமரவீர

யாழ்ப்பாணம் அபிவிருத்தியில் சிறந்த பிரதேசமாக விளங்க வேண்டுமாகவிருந்தால் நீங்கள் அனைவரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவோடு இணைந்து செயற்படல் வேண்டும் என நிபந்தனை விதிக்கின்றார் இட அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர, யாழ்.மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கூரைத்தகடுகளும் பிரதேச செயலர்களுக்கு சமையல் உபகரணங்களும் வழங்கும் நிகழ்வு நேற்று காலை 9 மணியளவில் யாழ். மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு அமைச்சர் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

தற்போது நாட்டின் வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் வெப்பகாலநிலை அதிகமாகக் காணப்படுகின்றது.

இவ்வரட்சி நிலையினை பரிசோதித்து ஆய்வுசெய்து அதற்கான உரிய நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

நாட்டில் யுத்தம் முடிபடைந்துள்ள நிலையில் சமாதானத்தினை ஏற்படுத்தி நாடு அபிவிருத்தித் திட்டங்களை நோக்கிச் செல்கின்ற போது ஏற்படும் பிரச்சினைதான் இயற்கை அனர்த்த அழிவு ஆகும்.

கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களில் கிழக்கு மாகாணத்தில் பாரிய அழிவு ஏற்பட்டன. இதற்கு அரசு கூடுதலான நிதியினையும் வழங்கியிருந்தன.

தற்போது அவ் அழிவினை வடநாட்டில் நிலவும் வரட்சியின் காரணமாக அரசிற்கு அதிக அளவில் செலவீனம் ஏற்பட்டுள்ளது. எனினும் நாம் நாட்டில் ஏற்படுகின்ற அனர்த்தங்களினை காரணம் காட்டி அபிவிருத்தித் திட்டங்களினை கைவிடமாட்டோம்.

எமது அரசின் கொள்கை தெற்கில் உள்ள மக்கள் அனுபவிக்கின்ற, பெறுகின்ற உதவிகள் அனைத்தும் வடக்கில் உள்ள மக்களும் அனுபவிக்க வேண்டும் என்பதுதான். எனினும் நாம் தெற்கினைவிட வடபகுதிக்கே அதி முன்னுரிமை கொடுக்கின்றோம்.

வரட்சியினால் வடக்கு மட்டுமல்லாது ஏனைய மாவட்டங்களுமே பாதிப்படைகின்றன. அந்த வகையில் இதற்காக 3 ஆயிரத்து 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கியுள்ளோம்.

இவற்றில்வெள்ளத்தடுப்பணையினை மேற்கொள்வதற்கு 200 மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளோம். குடிநீருக்காக யாழில் இவ்வருடத்திற்கு 3.3 மில்லியன் ரூபாய் செலவிடப்படவுள்ளன. இத்தொகையில் 2 மில்லியன் ரூபாய் ஏற்கெனவே யாழ். அரச அதிபரிடம் வழங்கப்பட்டுள்ளன. மிகுதி 1.3 மில்லியன் ரூபாயும் உடனடியாக வழங்கவுள்ளோம். இதற்கும் மேலாகவும் நிதி தேவைப்படுமாக இருந்தால் அதனையும் உடனடியாக வழங்கத் தயாராக உள்ளோம்.

வரட்சியால் யாழில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி வழங்கவுள்ளதோடு இவர்களிற்கு குடிநீர் வழங்குவதற்கு பவுசர்களும் வழங்கப்படவுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (ந-4)

## விபத்தில்காயமடைந்த பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

விபத்தில்காயமடைந்தகுடும்பப்பெண்மணி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை காலை 9 மணியளவில் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அருகில் இடம்பெற்ற சைக்கிள் விபத்தொன்றில் வீதியில் நடந்துசென்ற அதேயிடத்தினைச் சேர்ந்த 10 பிள்ளைகளின் தாயாரான இரத்தினம் இராஜேஸ்வரி (வயது 55) குடும்பப் பெண்மணி படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். 2நாட்களாகயாழ்.போதனாவில்சிகிச்சை பெற்றுவந்த நிலையில் அவர் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார். சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ந-4)

# நல்லூர்க் கந்தனின் வீதியில் நடந்தால் முத்தி

திருவாரூரில் பிறந்தால் முத்தி, தில்லையில் வாழ்ந்தால் முத்தி, காசியில் இறந்தால் முத்தி, அண்ணாமலையை நினைத்தால் முத்தி என்ற வரிசையில் நல்லூர்க் கந்தனின் வீதியில் நடந்தால் முத்தியென்று கூறமுடியும்.

அந்தளவிற்கு நல்லூர்த் திருவீதி பெருமை பெற்றது.

ஞானிகளும் யோகிகளும் நடமாடிய நல்லைப்பதியின் திருவீதியில் இருக்கக் கூடிய தெய்வீகம் அற்புதமானது.

கடந்த வருடம் நிர்மாணிக்கப்பட்டு கலசாபிஷேகம் நடைபெற்ற சண்முகர் வாயில் இராஜகோபுரத்தை பார்க்கும் போதெல்லாம் இந்திரலோகத் தேவர்கள் ஒன்று சேர்ந்து நல்லூர் முருகன் மீது கொண்ட அன்பு காரணமாக பிரதிஷ்டை செய்து வைத்ததுபோல அந்த ராஜகோபுரத்தின் அழகும் தெய்வீகப் பொலிவும் அமைந்துள்ளது.

நாளுக்கு நாள் சண்முகர் வாயில் ராஜகோபுரத்தின் தெய்வீகப் பொலிவு பூரிப்படைவதைப் பலர் அவதானித்திருப்பார்கள்.

இத்தகைய பெருமைமிக்க நல்லூர்க் கந்தப் பெருமானின் மஹோற்சவ காலத்தில் ஆலயச் சிறப்பை அதன் தெய்வீகத்திருப்பொலிவை பாதுகாக்கின்ற பொறுப்பு அனைவருக்கும் உண்டு.

அதே நேரம் நல்லூர்க் கந்தப்பெருமான் இவ்வருடம் ஆலய வளாகத்தில் உள்ள கேணியில் தீர்த்தமாட இருப்பதான செய்தி பல வருடங்களாக இருந்த மனக்குறைக்கு முடிவு கட்டுவதாகவுள்ளது.

1987ஆம் ஆண்டுக்குப் பின்னர் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக தீர்த்தக்கேணியில் தீர்த்தம் ஆடுகின்ற நடைமுறை இல்லாமல் போய் நந்தவனத்துக் கிணற்றில் தீர்த்தமாடும் முறைமை இருந்துவந்தது.

நந்தவனக் கிணற்றில் கந்தப்பெருமான் தீர்த்தவாரி செய்வதை நல்லூரில் கூடுகின்ற இலட்சக்கணக்கான பக்தர்களும் பார்த்து தரிசிக்கும் வாய்ப்பு இல்லாமல் போயிற்று.

ஆனால் இந்த ஆண்டு, நல்லூர்க் கந்தப் பெருமான் ஆலயத்தின் தென்திசையில் அமைந்துள்ள கேணியில் தீர்த்தமாடுவதன் மூலம்எல்லாப் பக்தர்களும் அதனைப் பார்த்து மகிழும் பெரும் புண்ணியகாரியம் நடக்கவுள்ளது.

ஆறுமுகவாசல் இராஜகோபுரத்தின் கம்பீரத் தோற்றம், அதன்கீழ் சரவணைப் பொய்கைபோல் தீர்த்தக் கேணி, இந்த அற்புதம் நிறைந்தமைந்த இடத்தில் வேற்பெருமான் தீர்த்த மாடும் திருக்காட்சி தொடர்ந்து இடம்பெறவேண்டுமாக இருந்தால் கந்தன்மீது அளவுகடந்த அன்பு கொண்ட எங்கள் இளைஞர்கள் தீர்த்தோற்சவத்தன்று தீர்த்தக் கேணியில் குதித்து நீரை அள்ளி மற்றவர்களுக்கு தெளிக்கும் செயலை முற்று முழுதாகக் கைவிட வேண்டும்.

இது நல்லூரில் கட்டிக் காத்து வரும் தெய்வீக மகிமைக்கு அவசியமானதாகும்.

அதிகாலை வேளையில் அரோகரா கோசத்துடன் அங்கப்பிரதட்சணம் செய்யும் எங்கள் இளைஞர்கள் நல்லூர்க் கந்தன் கேணியில் தீர்த்தம் ஆடுவதற்கு இடைஞ்சல் செய்யமாட்டார்கள் என்று நூறு வீதம் நம்பலாம்.

இந்த நம்புகை நிறைவேறினால் முருகனின் அருள் தீர்த்தமாகக் கொட்டும். இது சர்வ நிச்சயம்.

# செட்டிக்குளம் நலன்புரி மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளனர்

## முல்லை அரச அதிபர் தகவல்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 3 கிராம சேவகர் பிரிவுகளுக்கு செட்டிக்குளம் நலன்புரி முகாமில் உள்ள மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளதாக முல்லை. மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை புதுக்குடியிருப்பு கிழக்குப் பகுதியைச் சேர்ந்த 206 குடும்பங்களைச் சேர்ந்த 635 உறுப்பினர்களும் எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை மல்லிகைத்தீவு கிராமத்தைச் சேர்ந்த 174 குடும்பங்களில் உள்ள 569 உறுப்பினர்களும் எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை புதுக்குடியிருப்பு மேற்குப் பகுதியில் வேணாவில் கிராமம் தவிர்ந்த ஏனைய பகுதி மக்களும் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மீள்குடியேற்றத்திற்காக அழைத்து வரப்படும் மக்கள் கைவேலி கணேசா வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டு பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட பின் அவர்களின் சொந்தக்கிராமங்களுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளதாகவும் இவர்களின் மீள்குடி யேற்றத்தைத் தொடர்ந்து உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ள இக்கிராமங்களைச் சேர்ந்தவர்கள் பின்னர் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-3-15)

## மருத்துவசேவை பிற்போடப்பட்டுள்ளது

(சிவநகர்)

கிளி.மாவட்ட சிவநகர் கிராம மூத்த பிரஜைகள் குழுவின் அனுசரணையுடன் கிளி.மாவட்ட வைத்தியர்களால் நாளை புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சிவநகர் பாடசாலையில் நடத்தப்படவிருந்த மாதாந்த நடமாடும் வைத்திய சேவை தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக மூத்த பிரஜைகள் குழுச் செயலாளர் திருமதி த.அன்னலட்சுமி அறிவித்துள்ளார். (ந-9-254)

## கணனிப்பயிற்சி இம்மாதம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலக விதாதாவள நிலையத்தினால் கணனிப் பயிற்சி நெறிகள் இம்மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலாளர் ச. சிவஸ்ரீ அறிவித்துள்ளார்.

MS office, Java Programming Language, HTML மூலம் இணையத்தளம் உருவாக்கல் ஆகிய பயிற்சி நெறிகள் கற்பிக்கப்படவுள்ளதால் பயிற்சி பெற விரும்பும் பயிலுநர்கள் நாளை புதன்கிழமைக்கு முன்பாக விதாதாவள நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர் தெரிவித்துள்ளார். (ந-[illegible])

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## தியானம்



தியானம் என்பது ஒரு குறிப்பிட்ட பொருளின் மீது மனத்தைக் குவியச் செய்வது. மனம் ஒரு பொருளின் மீது ஒருமைப்பட்டு நிலைபெறுமானால் பின்னர் அதனை எந்தப் பொருளின் மீதும் குவிக்கலாம்.

மனத்திற்குப் பிடித்த பொருள் மீது தியானம் செய்யும்போது மனம் மிக எளிதாக அமைதியடைகிறது என்பது உண்மை.

இந்த நாட்டில் இத்தனை தெய்வவடிவங்களை வழிபடுவதற்கு இதுதான் காரணம்.

**கேள்வி:** எங்கு ஒருவன் தியானம் செய்வேண்டும்? உடலுக்கு உள்ளேயா, வெளியிலா?

**பதில்:** உள்ளேயே தியானம் செய்யவேண்டும். மனம் உள்ளே இழுக்கப்பட வேண்டுமா, வேண்டாமா என்ற விடயத்தைப் பொறுத்தவரை அந்த மனத்தளத்தை அடையவே நீண்டகாலமாகும்

இப்போது நமது போராட்டம் உடம்புதான் தொடர்ந்து அசைவற்று அமரும் நிலையைப் பெற்ற பின்னர், பின்பு மட்டுமே மனத்துடனான போராட்டத்தைத் தொடங்கவேண்டும். ஆசனம் நிலைபெற்றுவிட்டால் உடல் அசைவற்றிருக்கும்.அப்போது விருப்பப்படி நீண்ட நேரம் உட்காரலாம்.

தியான ஆற்றல் நமக்கு எல்லாவற்றையும் தரும். இயற்கையை வெல்லவேண்டுமா? (அதுவும் தியானத்தால் முடியும்). இந்தத் தியான முறையால் தான் இன்று எல்லா விஞ்ஞானப் புதுமைகளும் கண்டுபிடிக்கப்படுகின்றன.

தியானத்தை முதலில் சாதாரண தூலப்பொருட்களில் ஆரம்பித்து மெல்ல மெல்ல நுண்ணிய பொருட்களைத் தியானிக்கவேண்டும். இறுதியில் பொருளில்லாமல் தியானம் பழகவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தேசிய மட்ட உதைபந்தாட்டப் போட்டி எதிர்வரும் 10,11,12ஆம் திகதிகளில் கொழும்பு டொறிங்டன் விளையாட்டு மைதானத்திலும் பி.ஆர்.சி மைதானத்திலும் நடைபெறவுள்ளது. இதற்காக வடமாகாண உதைபந்தாட்ட அணிகள் இன்று புறப்படுகின்றன. ஆண்கள் அணியின் பயிற்சியாளராக ஜஸ்மினனும் பெண்கள் அணியின் பயிற்சியாளராக முகுந்தனும் செல்லவுள்ளனர். வடமாகாண உதைபந்தாட்ட ஆண்கள், பெண்கள் அணிகள் கொழும்பு அணிகளோடு பயிற்சிப் போட்டிகளிலும் ஆடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாலுசந்தி மைக்கல் வி. கழகத்தின் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில்

## ஞானம்ஸ் அணி வெற்றி



மாலுசந்தி மைக்கல் விளையாட்டு கழகத்தின் பத்து ஓவர் கொண்ட கிரிக்கெட் வெற்றிக் கிண்ணத்தை வல்வை அணியை 15 ஓட்டங்களால் வெற்றி பெற்று கரவெட்டி ஞானம்ஸ் அணி சம்பியன் ஆகியது.

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் பி.ப. 4 மணிக்கு இடம்பெற்ற இறுதியாட்டத்தில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ஞானம்ஸ் அணி 10 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 69 ஓட்டங்களைப்பெற்றது.

இதில் சிவகீதன், சுகந்தன் தலா 17 ஓட்டங்களைப் பெற்றனர்.

தீபன் 15 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

வல்வை அணியின் பந்து வீச்சின் சார்பில் ஜெகன் 3, மதன், ஜிவிந்தன், ரஞ்சித், உதேஷ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்ளை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வல்வை அணி நிரோஜன் 16, பிரணவன் 11, பிரகலாதன் 8ஓட்டங்களைப் பெற்றனர்.

ஞானம்ஸ் அணியின் பந்து வீச்சின் சார்பில் அனுசஜந்தன் 2, குணதீபன்2, சேந்திரன் ஒரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இறுதியில் வல்வை அணி 9.1 பந்துகளில் 7 விக்கெட்டுக்களை இழந்து 54 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் போட்டி யில் இருந்து விலகியது.

இறுதியில் மைக்கல் போட்டிக் குழுவினால் ஞானம்ஸ் அணி 14 ஓட்டங்களால் வெற்றி என அறிவிக்கப்பட்டு இவ்வாண்டுக்கான மைக்கல் கழகத்தின் கிரிக்கெட் வெற்றிக் கிண்ணத்தை ஞானம்ஸ் அணி தனதாக்கிக் கொண்டது. (3-24)




## சாவகச்சேரி இந்துவை வீழ்த்தியது விக்டோரியா

அகில இலங்கைத் துடுப்பாட்டச் சங்கத்தினரால் நடத்தப்படும் 15 வயதுப் பிரிவினருக்கான துடுப்பாட்டப் போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் (தேசிய பாடசாலை) விக்ரோறியாக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய விக்ரோறியாக் கல்லூரி 139 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கே.கிரிசாந் 38 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். சாவகச்சேரி இந்துக்கல்லூரி சார்பில் சிந்துஜன் 30 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளை வீழ்த்தினார். தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி 90 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. இதில் இ.கரன் 25 ஓட்டங்களைக் கொடுத்து 5 இலக்குகளைக் கைப்பற்றினார்.

49 ஓட்டங்களினால் விக்ரோறியாக் கல்லூரி வெற்றிபெற்றது. இதன்மூலம் விக்ரோறியாக் கல்லூரி இலங்கைத் துடுப்பாட்டச் சங்கத்தினால் நடத்தப்படும் சுற்றுப் போட்டியின் அடுத்த சுற்றில் விளையாடும் தகுதியைப் பெற்றுக் கொண்டது.

## உதைபந்தாட்டப்போட்டி



(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவில் அழைக்கப்பட்ட யாழ்.மாவட்ட முன்னணி நட்சத்திர அணிகள் பங்குபற்றும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட லீக் போட்டிகளில் இன்று பி.ப.3.30 மணிக்கு நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் அணி மோதவுள்ளது.

இரண்டாவது போட்டியில் பி.ப.4.30 மணிக்கு மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் அணி மோதவுள்ளது. (3-24)




தேசிய மட்ட கூடைப்பந்தாட்டப்போட்டி எதிர்வரும் 10,11,12 ஆம் திகதிகளில் கொழும்பு விமானப்படை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதற்காக வடமாகாண கூடைப்பந்தாட்ட அணிகள் இன்று புறப்படுகிறது. இவ் அணியின் பயிற்சியாளராக செ.ரமணனும் இவ் அணிக்கு பொறுப்பாக நல்லூர் பிரதேச விளையாட்டு அதிகாரி பிரசன்னா, தெல்லிப்பழை பிரதேச விளையாட்டு அதிகாரி வல்லவக்குமரன், உடுவில் பிரதேச விளையாட்டு அதிகாரி கௌசிகன், முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு அதிகாரி சிவதாஸ் ஆகியோர் செல்லவுள்ளனர். வடமாகாண கூடைப்பந்தாட்ட ஆண்கள், பெண்கள் அணி பயிற்சிப் போட்டிகளிலும் ஆடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மின்னல் வேக வீரர் உசைன் போல்ட் தங்கம்

லண்டன் ஒலிம்பிக் தடகளப்போட்டியின் 100 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் உலகின் அதிவேக மின்னல் மனிதரான ஜமேக்காவின் உசைன் போல்ட் தங்கப்பதக்கம் வென்றார்.

லண்டன் ஒலிம்பிக் தொடக்கவிழா நடைபெற்ற மைதானத்தில் ஆடவருக்கான 100 மீற்றர் ஓட்டப்பந்தயத்தின் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் உலகின் அதிவேக வீரரான ஜமேக்காவின் உசைன் போல்ட் 9.63 வினாடிகளில் பந்தய தூரத்தைக்கடந்து தங்கப்பதக்கம் வென்றார்.

அவரைத் தொடர்ந்து பின்னால் வந்த சக நாட்டு வீரரும் பயிற்சி தோழருமான ஜோகன் பிளேக் 9.75 வினாடிகளில் கடந்து வெள்ளிப் பதக்கத்தையும், அமெரிக்காவின் ஜஸ்டின் காட்லின் 9.79 வினாடிகளில் கடந்து வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.




## இன்று அதிகாலை வரையான நிலைவரப்படி

LONDON 2012

## ஒலிம்பிக் பதக்கப் பட்டியல்

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 31 | 19 | 14 | 64 |
| அமெரிக்கா | 28 | 14 | 19 | 61 |
| பிரிட்டன் | 18 | 11 | 11 | 40 |
| தென்கொரியா | 11 | 5 | 6 | 22 |
| பிரான்ஸ் | 8 | 9 | 9 | 26 |
| இத்தாலி | 7 | 6 | 4 | 17 |
| கஜகஸ்தான் | 6 | 0 | 1 | 7 |




## இலங்கை – இந்தியா 20–20 போட்டி இன்று




இலங்கை – இந்திய அணிகள் மோதும் முதலும் கடைசியுமான இருபது– 20 போட்டி இன்று இரவு 7 மணிக்கு பல்லேகல மைதானத்தில் நடைபெறவுள்ளது. இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர், ஒரேஒரு இருபது–20 போட்டியில் விளையாட இலங்கை வந்துள்ளது.

ஏற்கெனவே நடைபெற்ற ஒருநாள் தொடரில் இந்திய அணி 4:1 என்ற கணக்கில் தொடரை சுவீகரித்தமை குறிப்பிடத்தக்கது.




லண்டன் ஒலிம்பிக் பளு தூக்குதல் போட்டியில் 75 கிலோ எடைப் பிரிவில் சீன வீராங்கனை சுளுளு தங்கப்பதக்கம் வென்று உலகின் வலிமையான பெண்ணாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

# லண்டன் ஒலிம்பிக் ஸ்பிரிங் போர்ட் பல்டியில் தங்கம், வெள்ளி சீனாவுக்கு



லண்டன் ஒலிம்பிக்கில் மகளிர்க்கான 3 மீற்றர் ஸ்பிறிங் போர்ட் பல்டியில் சீன வீராங்கனைகள் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை வென்றனர்.

லண்டனில் நடைபெற்று வரும் ஒலிம்பிக்கில் மூன்று மீற்றர் ஸ்பிறிங் போர்ட் பல்டியின் இறுதிப்போட்டி அக்குவாடிக் சென்றரில் நடைபெற்றது.

இதில் சீன வீராங்கனையான வு மின்க்சியா உள்நோக்கி பல்டியடித்து 414 புள்ளிகள் பெற்று தங்கப்பதக்கம் வென்றார். மற்றொரு சீன வீராங்கனையான ஹெ ஜி 379.20 புள்ளிகள் பெற்று வெள்ளிப்பதக்கத்தை வென்றார். மெக்சிக்கோ வின் லாறா சான்செஸ் 362.40 புள்ளிகள் எடுத்து வெண்கலப்பதக்கத்தைப் பெற்றார்.



# பிரிட்டனுக்கு ஒரே நாளில் 6 தங்கம்

ஒலிம்பிக் போட்டியை நடத்தி வரும் பிரிட்டன் ஒரே நாளில் 6 தங்கப்பதக்கங்களை வென்றுள்ளது.

லண்டனில் நடைபெற்ற வரும் ஒலிம்பிக் போட்டியை அந்நாட்டு அரசான பிரிட்டன் நடத்திவருகிறது. சீரான முறையில் பதக்கத்தை வென்று வந்த பிரிட்டன் நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும் ஆறு தங்கப்பதக்கங்களை வென்றுள்ளது.

ஒலிம்பிக் ஹெப்தலானில் சம்பியன் பட்டம் வென்ற ஜெஸ் என்னிஸ் 800 மீற்றர் ஓட்டத்தைக்கடந்து தங்கப்பதக்கத்தை வென்றார்.

நீளம் தாண்டிதலில் நட்சத்திர வீரரான கிரேக் பொர்ட் புயல் வேகத்தில் தாண்டி தங்கப்பதக்கத்தை வென்றார்.

10ஆயிரம் மீற்றர் தொடர் ஓட்டத்தில் மோ ஃபாராஹ் கேப்ஸ் தங்கம் வென்றது பிரிட்டிஷ் விளையாட்டு வீரர்களுக்கு குறிப்பிடத் தக்க நாளாகும்.

ஆண்ட்ரு டிரிக்ஸ் ஹாட்ஜ், பீட் ரீட், டாம் ஜேம்ஸ் மற்றும் அலெக்ஸ் கிரிகோரி ஆகியோர் அடங்கிய நான்கு பேர் கொண்ட ஆடவர் அணி துடுப்பு படகுப் போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்றது.

பிரிட்டனின் சோபி ஹோஸ்கிங், கேத்ரீன் கோப்லேண்ட் மகளிர் ஜோடி இரட்டைப்படகு துடுப்புப் போட்டிகளில் தங்கம் வென்றனர்.

சைக்கிள் பந்தய வீரரான போல் மெக்காட்னி மற்றொரு தங்கப்பதக்கத்தைப் பெற்றுக்கொடுத்தார். நேற்றைஆறுதங்கம்மூலம் பிரிட்டன் பதக்கப் பட்டியில் மூன்றாவது இடத்துக்கு முன்னேறியது.



## ஒலிம்பிக் டெனிஸ் ; ஆன்டி முர்ரே தங்கம்

லண்டன் ஒலிம்பிக் டென்னிஸ் போட்டியில் அன்டி முர்ரே தங்கம் வென்றார். லண்டனில் நடைபெற்றுவரும் ஒலிம்பிக் டென்னிஸ் போட்டிக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில், பிரிட்டனின் அன்டிமுர்ரே, உலகின் முதல் நிலை வீரரான சுவிர்சர்லாந்தின் ரோஜர் பெடரருடன் மோதினார்.

இதில் அபாரமாக விளையாடிய முர்ரே 6:2, 6:1, 6:4 என்ற நேர்செட் கணக்கில் வெற்றி பெற்று தங்கப்பதக்கத்தைச் தட்டிச்சென்றார்.

இதன்மூலம் சமீபத்தில் நடந்த விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் இறுதிச்சுற்றில் பெடரரிடம் கண்ட தோல்விக்கு சரியான பதிலடிகொடுத்தார் முர்ரே. தவிர இவர், ஒலிம்பிக் அரங்கில் தனது முதல் பதக்கம் வென்றார்.

இத்தோல்வியின் மூலம் ரோஜர் பெடரர் 2 ஆவது இடம்பிடித்து வெள்ளிப்பதக்கம் வென்றார். மூன்றாவது இடத்திற்கான போட்டியில் அரையிறுதியில் தோல்விகண்ட சேர்பியாவின்நோவக்ஜோகோவிக், ஆர்ஜென்டினாவின் யுவான் மார்ட்டின் டெல் பெட்ரோ மோதினர்.



இதில் அபாரமாக ஆடிய டெல் பெட்ரோ 7:5, 6:4 என்றநேர்செட்கணக்கில்வெற்றிபெற்று வெண்கலபதக்கத்தை கைப்பற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வாயில் ஆளில்லா வாகனம்

அமெரிக்காவின் ஆளில்லா வாகனம் ஒன்று செவ்வாய் கிரகத்தில் வெற்றிகரமாக தரையிறங்கியுள்ளது.

அந்தக் கிரகத்தில் உயிர்கள் வாழ்ந்ததற்கான அறிகுறிகள் ஏதாவது தெரிகிறதா என்பதை ஆராயும் நோக்கிலேயே இந்த வாகனம் அங்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்த வெற்றியை அமெரிக்க தேசிய விண்வெளி அமைப்பான நாசா கொண்டாடி வருகிறது. ஒன்பது மாதப் பயணத்துக்கு பிறகு கியூரியஸிட்டி என்று பெயரிடப்பட்டுள்ள அந்த ரோபோட்டிக் வாகனம் செவ்வாய் கிரகத்தில் நேற்றுத் தரையிறங்கியுள்ளது. (ந-1)

## வடக்கில் அபிவிரு...

வட மாகாண தமிழர்களுக்கு எதிர்வரும் மார்ச் மாதத்திற்கு முன்னர் அரசியல் தீர்வு வழங்கப்படவில்லை என்றால், மனித உரிமைகள் தொடர்பான ஜெனிவா மாநாட்டில் விருப்பமின்றியேனும், இலங்கைக்கு எதிராகச் செயற்பட நேரிடும் என இந்திய அரசாங்கம் இலங்கை அரசுக்கு தகவல் அனுப்பியுள்ளது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் பாதுகாப்பு மற்றும் வெளிவிவகார அமைச்சு ஆகியன மாத்திரம் ஓரளவு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. ஆனால் அரசியல் தீர்வு தொடர்பாக எந்த முன்னேற்றத்தையும் பெற முடியவில்லை என்பதே இந்திய இராஜதந்திரிகளின் கருத்தாகவு ள்ளது.

எனினும் அடுத்த வருடத்தில் வடக்கின் அபிவிருத்திகள் முக்கிய கட்டத்தை அடைந்து, வட மாகாணத்திற்கான மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் என அண்மையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

இதனை விரைவுபடுத்தி இந்தியாவின் குற்றச்சாட்டில் இருந்து தப்பிக்க இலங்கை முயற்சிக்க கூடும் எனவும் அவர்கள் எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் அடுத்த வருடம் செப்ரெம்பர் மாதம் வட மாகாண சபைத் தேர்தலை நடத்தி இந்தியாவின் இந்தக் குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கலாம் என இலங்கை அரசாங்கம் எண்ணியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-1)

## இந்தியத் தூது...

தெற்காசிய பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செய லர் என்ற மிக முக்கியமான இராஜதந்திரப் பதவியை வகிக்கிறார்.

இவர் எப்போதும் இலங்கை அரசாங்கத்தை நட்புடன் பார்த்ததில்லை. இலங்கை அரசின் மீதும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீதும் போர்க் குற்றச்சாட்டுகளைச் சுமத்தியவர் இவர்.

கடந்த மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் பின்னணியிலும் இருந்தவர்.

இன்னும் 2 மாதங்களில் பிளேக் தனது பதவிக் காலத்தை நிறைவு செய்வதையிட்டு இலங்கை அரசாங்கம் பெரு மூச்சுவிடும் என்பதில் சந்தேகம் இல்லை.

வரும் நவம்பர் மாதம் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் வரவுள்ளதால் இலங்கையில் தலையீடு செய்யக்கூடிய பதவியில் அவர் அமர்த்தப்படுவதற்கு வாய்ப்பில்லை.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதுவராக பிளேக் நியமிக்கப்படவுள்ளதாக எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. இது இலங்கை அரசுக்கு மிகவும் பாதகமான நிலையாகும் என அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-1)

## பாக். பாதுகாப்பு...

ஏற்பாடு செய்துள்ள சமாதானமும் அதன் நிலைப்பாடும் என்ற தொனிப்பொருளில் இடம் பெறவுள்ள மாநாட்டில் அவர் கலந்துகொள்ளவுள்ளார்.

பாகிஸ்தானிய பாதுகாப்பு செயலாளரு டன், பாகிஸ்தானிய உயர்மட்ட இராணுவ அதிகாரிகளும் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

இந்த பாதுகாப்பு மாநாட்டில் பாகிஸ்தானில் இராணுவ உபகரணங்களை உற்பத்தி செய்யும் 2 நிறுவனங்கள் தமது உபகரணங்களை கண்காட்சிப்படுத்தவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கையின் முப்படைகளைச் சேர்ந்தவர்களுக்கு பயிற்சி வழங்குவது குறித்து பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளுக்கு இடையே சிறப்பான ஒத்துழைப்பு உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எந்தவொரு முக்கியமான தருணங்களிலும் இலங்கையும் பாகிஸ்தானும் தமக்கிடையில் தொன்றுதொட்டு பரஸ்பரம் உதவிகளைப் புரிந்துகொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் கடந்த யுத்த காலத்திலும் பாகிஸ்தான் ஆயுதங்களை வழங்கி உதவியிருந்ததாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ந-1)

## இலவசக் கல்வி...

துறையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி தொடர்பாக கல்வித்துறைசார் நிபுணர்கள், தொழில்துறையினர், மாணவ அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் பொது அமைப்பின் உறுப்பினர்கள் பலரும் இந்த சந்திப்பில் கலந்து கொண் டனர்.

தொடர்ந்து அவர் கருத்து வெளியிடுகையில், சுதந்திரமான நாடு ஒன்றிற்கு இலவசக் கல்வி மிகவும் அவசியமானது.

அதற்கு எதிராக தடம் புரண்டவர்கள் தற்போது இலவசக் கல்வியைக் கேள்விக் குறியாக்கியுள்ளனர்.

கல்வி முறைமையை நாம் மேம்படுத்தினால் மட்டுமே சர்வதேசத்திற்கு சமமாக நாம் செயற்பட முடியும்.

இலங்கையின் கல்வி முறைமை குறித்து முன்னர் பல தரப்பினரும் பாராட்டியுள்ளனர்.

ஆனால் அந்த நிலை மாறி பல்கலைக் கழகங்கள், பாடசாலைகள் மட்டத்திலும் பல பிரச்சினைகள எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இலவசக் கல்வியின் நிலை பாதிக்கப்படும் ஆனால் உயர் கல்வி மற்றும் பல்கலைக்கழக கல்வி என்பன பாதிக்கப்படும்பொழுது இலங்கையின் கல்வி எங்குநோக்கிச் செல்கிறது எனக் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய பல்கலைக் கழகங்களின் விரிவு ரையாளர்களின் சங்கங்களின் சம்மே ளனத் தலைவர் நிர்மால் ரஞ்சித் தேவசிறி கருத்துத் தெரிவிக் கையில்;

எதிர்காலத்தில் கல்வி பாரிய நெருக்கடிக்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

அரசாங்க அதிகாரிகள் தமது சுய விருப்பத்திற்கமைய கல்வி தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

கல்வித் துறை தொடர்பாக எந்தவிதமான அறிவும் அற்றவர்கள் முடிபெடுக்கின்றனர்.

பிரச்சினைகள் குறித்து ஆராயாத நிலையில்எடுக்கப்படும் தீர்மானங்கள் மோசமான நிலைக்கு இட்டுச் செல்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார். (ந-1)

## டெசோ மாநாட்டில்...

நிறைவேற்ற மாட்டோம் என கருணாநிதியின் பல்டியால் சுருதி குறைந்தது.

உலகத் தமிழர் மத்தியில் பல்வேறு விமர்சனங்கள் எழுந்த நிலையில் புலம்பெயர்ந்த தமிழீழ அமைப்புகளின் ஆதரவாளர்கள் மாநாட்டுக்கு வரும் எண்ணத்தைக் கைவிட்டனர்.

இலங்கையில் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் டெசோ மாநாட்டிற்கு வருவது குறித்து கேள்வி எழுப்பினர்.

ஏற்கெனவே இலங்கைத் தமிழர் விவகாரத்தில் ராஜபக்ஷவுக்கு இணையாக கருணாநிதியை குற்றவாளிக் கூண்டில் வைத்து தமிழக அரசியல் கட்சிகள் விமர்சனம் செய்து வருகின்றன.

இந்த விமர்சனங்களுக்கு புலம்பெயர்ந்த தமிழர்கள் மற்றும் தமிழ் அமைப்பினர் மத்தியில் வரவேற்பும் கிடைத்துள்ளது.

இந்நிலையில் தமிழீழ விவகாரத்தில் அடித்த பல்டியால் டெசோ மாநாடு தோல்வியடைந்து விடும் என முன்னணி நிர்வாகிகள் தி.மு.க. தலைவரை உஷார்படுத்த தனி ஈழம் கொள்கையை நான் கைவிடவில்லை. அந்தக் கோரிக்கை நிறைவேற பாடுபடுவதுதான் தன்னுடைய ஒரே கனவு என தனது வழக்கமான பாணியில் தடம் மாறினார் கருணாநிதி.

அடுத்தாக அழைப்பு விடுத்தவர்களின் யார்யார் வருவார்கள் என்பதை உறுதி செய்யுமாறு மாநாட்டுக் குழுவினருக்கு கருணாநிதி நெருக்கடி கொடுத்துள்ளார்.

மாநாட்டுக்குழுவில் இடம்பெற்றுள்ள சட்டத்தரணி ராதாகிருஷ்ணன் தனது நண்பர் என்ற அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. சேனாதிராஜாவை சமீபத்தில் சென்னைக்கு வரவழைத்து கருணாநிதியை சந்திக்க வைத்தார்.

அப்போது கருணாநிதியிடம் சேனாதிராஜா, டெசோ மாநாட்டில் நான் பங்கேற்பேன் என உறுதியளித்தார்.

அதே கட்சியின் எம்.பிகளான சுமந்திரன், யோகேஸ்வரன், சரவணபவன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன், வழக்கறிஞர் விஸ்வலிங்கம், மணிவண்ணன், எம்.பி. செல்வம் அடைக்கலநாதன்;

நவசம சமாஜக் கட்சித் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண ஆகியோரும் மாநாட்டிற்கு வருவதாக ஒப்புதல் அளித்தது கருணாநிதிக்கு உற்சாகத்தை அளித்துள்ளது.

இதுகுறித்து தி.மு.க.பிரமுகர் ஒருவர் கூறியதாவது,

டெசோ மாநாட்டிற்கு வரக்கூடாது என பாருக் அப்துல்லா, சரத் பவார், சரத் ஜாதவ், ராம் விலாஸ் பஸ்வான் போன்ற தலைவர்களிடம் சில கட்சித் தலைவர்கள் கங்கணம் கட்டிப் பணியாற்றினர். ஆனால் அவர்கள் கண்டிப்பாக வருவோம் என கருணாநிதியிடம் வாக்குறுதி அளித்துள்ளனர்.

அதேபோல மாநாட்டில் தனி ஈழம் கேட்டு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புகளின் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்களின் கோரிக்கையை கடைசி நேரத்தில் நிறைவேறவும் வாய்ப்புள்ளது.

இதுதொடர்பான ஆலோசனைகளும் கட்சி வட்டாரத்தில் நடந்து வருகிறது. இவ்வாறு அவர் கூறினார். (ந-1)

## இந்தியா எமக்கு...

இலங்கையை ஆக்கிரமிக்கும் திட்டத்தை இந்தியா முன்னெடுத்துள்ளது.

எனவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் இவ்விடயம் தொடர்பில் கவனத்துடன் செயற்பட வேண்டும்.

வரலாற்றுக் காலம் தொடக்கம் இந்தியா எமக்கு எதிராகவே செயற்பட்டது. இன்றும் அதேநிலையே நிலவுகின்றது.

எனவே அரசாங்கம் இந்தியாவுடனான நட்புறவைக் கைவிட வேண்டும்.

சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுடன் நட்புறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ந-1)

## மகிந்தவின்...

தொடர்பிலும், இதனை உடனடியாக எவ் வாறு சீர்செய்வது என்பது தொடர்பிலும் மிலிந்த மொறகொட இந்தியத் தரப்பினருடன் முக்கிய பேச்சுக்களை நடத்தியிருப்பதாக புதுடில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிராந்தியத்தில் இந்தியாவும், இலங்கையும் ஒற்றுமையாக சினேகபூர்வமாக செயற்பட வேண்டியது அவசியம்.

இருநாடுகளுக்கும் இடையிலான ராஜதந்திர ரீதியான நட்புறவில் பின்னடைவுகள் என்பது ஆரோக்கியமானதல்ல.

எனவே அவை உடனடியாக சரி செய்யப்பட வேண்டும் என்ற சாரப்பட மிலிந்த மொறகொட இந்தியப் பிரதிநிதிகளிடம் இலங்கை சார்பில் கருத்துக்களை முன்வைத்ததாக இந்தியாவின் உயர்மட்ட இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னதாக கொழும்பில் மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோருடன் முக்கியமான விடயங்கள் தொடர்பில் ஆலோசனைகளை நடத்திவிட்டே, மிலிந்த மொறகொட தனது இந்தியப் பயணத்தை மேற்கொண்டார்.

இதேவேளை, இம்மாத இறுதியில் இலங்கையின் உயர்மட்டக் குழு ஒன்று இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டு இரு தரப்பு உறவுகளை மேம்படுத்துவது தொடர்பில் முக்கியமாக ஆராயும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் பசில் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் இந்த உயர் மட்டக் குழுவில் இடம்பெறுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-8)

## 'Z' தீர்வுக்கு ...

திகதி வெளியிடப்பட்ட இசற் புள்ளிக்கு எதிராக 33 மாணவர்கள் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பாகவே பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு இவ்வாறு தெரிவித்துள்ளது.

இவ்விடயத்தில் இணக்கம் காண்பதற்கு தர்ன் முயன்று வருவதாகவும் இதற்கு கால அவகாசம் வழங்கவேண்டும் எனவும் உயர் நீதிமன்றத்தை சட்டமா அதிபர் பாலித பெர்ணான்டோ கோரினார்.

இம் மனு தொடர்பானநடவடிக்கை ஓகஸ்ட் 30-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ந-1)

## இந்து விக்கிரக...

தங்களது பௌத்த விகாரைக்கு கொண்டு செல்ல ஒரு பௌத்த பிக்கு நடவடிக்கை எடுத்த போது இவ்விடயமாக இந்து மக்கள் பாணமைப் பொலிஸ் மற்றும் அங்கிருந்த இராணுவ முகாம் அதிகாரிகளிடம் இதைத் தடுக்குமாறு முறையிட்டனர்.

மேலும் இவ்விடயம் பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் கவனத்திற்கு வந்தபோது, அவர் தொலைபேசி மூலம் பாணமை இராணுவப் பொறுப்பதிகாரியிடம் தொடர்பு கொண்டு பிக்குவின் இச்செயற்பாட்டைத் தடுக்குமாறு கோரியிருந்தார்.

இவ்வேளை இப் பௌத்த பிக்கு தொடர்ச்சியாக இந்து மக்களுக்கும் ஆலயத்தினருக்கும் தொந்தரவு கொடுத்துள்ளார்.

அப்பகுதி மக்கள் விநாயகர் விக்கிரகத்தை பாதுகாக்க முயற்சித்தவேளையிலும் நேற்று பௌத்த பிக்கு பெரும்பான்மையினத்தவர்களுடனும், ஊர்காவல் படையினருடனும் வந்து இந்துக்களின் பிள்ளையார் விக்கிரகத்தை ஆலயத்திற்குள் புகுந்து எடுத்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவத்தினை மிகவும் வன்மையாகக் கண்டிப்பதாகவும் பிக்குவின் இச்செயற்பாட்டுக்கு அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரியுள்ளார்.

இந்துக்களின் வழிபாட்டு உரிமையைப் பாதிக்கும் வகையில் நடத்தப்படும் செயற்றிட்டங்களை சுட்டிக்காட்டி இந்துக்களின் மத உரிமையைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரி பாரா௱ளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், மத விவகார அமைச்சரும் பிரதமருமான டி.எம்.ஜெயரத்தனவை அவசரமாகச் சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ந-1)


சர்வதேச ஆங்கில பரீட்சைகள்

A1-Exam திருமணம் செய்து நிலந்தர விசாவில் London செல்பவர்க -ளுக்கு பிரித்தானிய அரசால கோரப்படும் ஆங்கில பரீட்சை எமது நிறுவனத்திலே கற்று எமது நிறுவனத்திலே பரீட்சைக்கு இலகுவாக தோற்றமுடியும். Rs. 6000 only

City & Guilds ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்

B1-Exam Student Visa மூலம் London செல்வதற்கான ஆங்கில பரீட்சை. City & Guilds

IELTS 50% off on Total Course fee

veta Spoken English

SMS Your Name & Address get Scholar ship - 777 577333

DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | No.113, கன்னாதிட்டி வீதி, Tel.: 021-222 4403 |
| நெல்லியடி | M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel.: 021-2262470 |
| சாவகச்சேரி | No.174, கண்டி வீதி, (HNB அருகில்) Tel.: 021-2270243 |
| சுன்னாகம் | K. K. S வீதி, NSB வங்கி அருகில். (ஜெட் மோட்டோஸ் கட்டிடம்) Tel.: 021-224 1970 |

(அ-728)



சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் தேவை

மாத ஊதியம் : Rs. 20,000

ஊக்குவிப்பு : 10%

MyWay

180, Stanley Rd, Jaffna

077 520 2747

(அ-729)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.